REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 மார்ச் 21 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 68 | Monday 21, March, 2022 | 24 பக்கங்கள் | 30/-

## SLPP மே தின கூட்டம் காலிமுகத் திடலில்
### நிதியமைச்சர் தெரிவிப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மே தினக் கூட்டத்தை காலிமுகத்திடலில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அதன்படி காலிமுகத்திடல் முன்கூட்டியே கொழும்பு மாநகர சபையில்

08

## கல்வி அமைச்சுக்குத் தேவையான கடதாசி தொகை அரசிடமிருந்து
### பரீட்சைகள் எதுவும் தடங்கலின்றி நடைபெறும்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்திய கடன் உதவி திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சுக்கு தேவையான கடதாசி தொகையை தட்டுப்பாடின்றி பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் கல்வி அமைச்சுக்கு அறிவித்துள்ளதாக கல்வியமைச்சின் உயரதிகாரி

08

### இந்திய கடன் உதவி மூலமான நன்மை;
## 40 ஆயிரம் மெற். தொன் டீசலுடன் கப்பல் நேற்று நாட்டுக்கு வந்தது

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

இந்திய கடன் உதவியின் கீழ் 40 ஆயிரம் மெட்ரிக் தொன் டீசலைத் தாங்கிய கப்பல் நேற்றிரவு நாட்டை வந்தடைந்ததாக

08



## சித்திரை புதுவருட காலத்தில் பொருட்களுக்கு தட்டுப்பாடு வராது
### இந்தியாவிலிருந்து கப்பல்கள் வருகிறது – பந்துல தெரிவிப்பு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு துறைமுகத்தில் தேக்கமடைந்துள்ள அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய கொள்கலன் எதிர்வரும் வாரம் முதல் முழுமையாக விடுவிக்கப்படும் எனவும் பண்டிகை காலத்தில் அத்தியாவசிய உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது எனவும் வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். வர்த்தகத்துறை

08



### 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடைநிறுத்தப்பட்டிருந்த
# அபிவிருத்தி செயற்பாடுகள் வடக்கில் மீளவும் ஆரம்பம்
### யாழ்ப்பாணத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவிப்பு

**வடக்கிற்கான இருநாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ். மட்டுவிலில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையத்தை திறந்து வைத்த பின் உரை**

வட மாகாணத்தில் 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளையும், மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளையும் ஆரம்பிப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். அனைவருக்கும் சிறந்த எதிர்காலம் அமைய பிரார்த்திப்பதாகவும் அவர் குறிப்பிட்ட அவர்,

08

**நான் உங்களை மறக்க மாட்டோம் கைவிடவும் மாட்டோம் எனவும் பிரதமர் தமிழில் தெரிவிப்பு**



## புனரமைக்கப்படவுள்ள KKS சீமெந்து தொழிற்சாலைக்கு பிரதமர் விஜயம்
### நேற்று நேரில் சென்று கண்காணிப்பில் ஈடுபாடு



யுத்தம் காரணமாக மூடப்பட்ட இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (20) காலை கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.

1950 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காங்கேசன்துறை

08

### மனித உரிமை பேரவையில்
## சீனா வழங்கிய ஆதரவுக்கு அமைச்சர் பீரிஸ் பாராட்டு



கடந்த மனித உரிமைகள் பேரவை அமர்வின் போது சீனா வழங்கிய ஆதரவை நினைவு கூர்ந்துள்ள வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், உதவிகள் தேவைப்படும் போது எதிர்காலத்திலும்

08

## சஜித் நினைப்பது போல ஜனாதிபதியாகி விட முடியாது
### வீதிகளில் போராடுவது பிரயோசனமற்றது



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறுவதைப் போன்று அவர் நினைக்கும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியாகிவிட முடியாது.

அதேபோன்று அவர் கோருவதைப் போன்று ஜனாதிபதித் தேர்தலை நடத்தவும் முடியாது.

எனவே, ஜனாதிபதி தேர்தலை நடத்துமாறு வீதிக்கிறங்கி போராடுவது பிரயோசனமற்றது என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட

08

## சவால்களை கண்டு ஓடி ஒதுங்கும் அரசு இதுவல்ல
### குறைகள் அனைத்தும் நிவர்த்திக்கப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடு இந்தளவாவது முன்னெடுத்துச் செல்லப்படுவது தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சி என்பதால்தான். அவ்வாறு இல்லாவிட்டால் நாடு படுபாதாளத்தை நோக்கி பயணித்திருக்கும் என சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல மோசமான செயற்பாடுகளுக்கு நாம் தற்போது நஷ்டஈடு வழங்க

08

## போலி கடவுச்சீட்டில் USA செல்ல முயற்சி
### விமான நிலையத்தில் பெண் கைது!



போலியான கடவுச்சீட்டை பயன்படுத்தி வெளிநாடு செல்ல முற்பட்ட பெண் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. கட்டுநாயக்க விமான நிலையத்தில், போலியான கடவுச்சீட்டை பயன்படுத்தி அமெரிக்கா செல்ல முற்பட்ட பெண் ஒருவரே இவ்வாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கட்டுநாயக்க பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

08


## 12 கோடி ரூபா தங்கத்துடன் சந்தேகநபர் ஒருவர் கைது
### யாழிலிருந்து பஸ்ஸில் வருகையில் மடக்கிபிடிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

12 கோடி ரூபா பெறுமதியான தங்கத்துடன் நபர் ஒருவர் கொழும்பு ஆமர் வீதி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் கொழும்பு பஸ் வண்டியில் 12 கோடி ரூபா பெறுமதியான

08



## மூன்று சட்டமூலங்கள் நீதித்துறையில் இணைப்பு



கடந்த வாரத்தில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட 3 சட்டமூலங்களை சபாநாயகர் மகிந்த யாபா அபேவர்தன நேற்று அத்தாட்சிப்படுத்தியுள்ளார். இதற்கமைய அண்மையில் நிறைவேற்றப்பட்ட தனியார் தரவு பாதுகாப்பு, தொழிலாளர் இழப்பீடு மற்றும் காணி அபிவிருத்தி ஆகிய சட்டமூலங்கள் இவ்வாறு

08

## தொடர்ந்தும் நஷ்டத்தில் விநியோகிக்க முடியாது
### விலையை மீண்டும் அதிகரிக்கக்கோரும் லிட்ரோ!



இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலையை மீண்டும் அதிகரிப்பதற்கு இறக்குமதி நிறுவனங்கள் முன்வைத்திருந்த கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 400 கிராம் பால்மா பக்கெற்றின் விலை 250 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. விலை அதிகரிப்பின்

08

## மோடியின் இலங்கை விஜயம் கேள்விக்குறி!




ஜெய்சங்கரின் விஜயம் உறுதியானது

03

### தமிழக மீனவரது தொடரான அத்துமீறல்;
## முதல்வர் ஸ்டாலினை சந்திக்க விரும்பும் யாழ். மீனவர்கள்

நேரம் ஒதுக்கித்தருமாறு கடிதம் அனுப்பிவைப்பு



03

## ஒரு கப் பால் தேநீர் 100 ரூபாவாக உயர்வு
### உணவக உரிமையாளர் தீர்மானம்




ஒரு கப் பால் தேநீரின் விலை 100 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. தற்போதைய சூழ்நிலை காரணமாக சில உணவகங்களில் பால் தேநீர் விநியோகமும் இடைநிறுத்தப்படவுள்ளதாக சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், உள்ளூர் பால் மாவின் விலையை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என கால்நடை

08

## லா◌ஃப் எரிவாயு விலை அதிகரிப்பு
### 12.5Kg சிலிண்டர் ரூ. 4199



லாப் எரிவாயு நிறுவனம் அதன் எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை அதிகரித்துள்ளதாக எரிவாயு விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 4,199 ரூபாவாகவும், 5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 1,680 ரூபாவாகவும், 2 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 672 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வியாபாரிகள் வருகை குறைவு;
## மரக்கறி விலையில் பாரிய வீழ்ச்சி



தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் கடந்த வாரம் பாரியளவில் அதிகரித்து காணப்பட்ட மரக்கறிகளின் மொத்த விலை, நேற்று காலை பாரியளவில் வீழ்ச்சியடைந்து, மரக்கறிகள் விற்பனையாகாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மரக்கறிகள் வாங்க வரும் வியாபாரிகள் வருகை தராததும், எரிபொருள்

08

## மின் கட்டண அதிகரிப்பு குறித்து திருத்த யோசனை
### இவ்வாரம் கிடைத்த பின் தீர்மானம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளதுடன் சபையினால் தயாரிக்கப்பட்டுள்ள அது சம்பந்தமான திருத்த யோசனைகள் இந்த வாரத்தில் கிடைக்கவுள்ளதாக பொது பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க அது தொடர்பில் தெரிவிக்கையில்; மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு

08

### விக்கல் வீராச்சாமி



அண்ணே, அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில ஆர்ப்பாட்டம் ஒண்டு நடத்தப் போகினமாம், போவோமா ஏதாவது தருவினம்....

ஐயோ இவங்கள நம்பி போயிடாதே, நடுரோட்டில வெயிலுக்குள்ள நடத்தி உயிரை வாங்கிட்டு bye காட்டுவாங்க...!!!

**தொழுகை நேரம்**
21 முதல் 24 வரை
சுபஹ் - 04.59
லுஹர் - 12.19
அஸர் - 03.31
மஃரிப் - 06.21
இஷா - 07.31

**இன்றைய சுபதினம்**
பிலவ வருடம் பங்குனி 7
ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: அமிர்தமரண யோகம்
திதி: சதுர்த்தி

இலங்கைக்கு பணத்தை அனுப்புவோருக்கு

# ஊக்குவிப்பு கொடுப்பனவு இனி வழங்கப்பட மாட்டாது

## அவசியமில்லை என்கிறது மத்திய வங்கி



வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குப் பணம் அனுப்புவோருக்கு முக்கிய அறிவிப்பொன்றை இலங்கை மத்திய வங்கி வழங்கியுள்ளது.

அதன்படி இலங்கைக்குப் பணம் அனுப்புவோருக்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்பு கொடுப்பனவு இனி வழங்கப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், செலாவணி வீதமானது வெளிநாட்டு வேலையாட்களின் பணவனுப்பல்களையும் ஏற்றுமதி வருவாய்களை மாற்றுவதனையும் தூண்டும் நோக்குடன் வழங்கப்பட்ட ஊக்குவிப்பு மட்டத்தினை விடவும் தற்போது அதிகரித்துள்ளது.

இதற்கமைய, நடைமுறை செலாவணி வீதம், வெளிநாட்டு வேலையாட்களின் வெளிநாட்டுச் செலாவணி பணவனுப்பல்களின் மீதும் ஏற்றுமதியாளர்களின் தேறிய வருவாய் மீதான உயர்ந்த ரூபா பெறுமதியின் மீதும் உயர் வருமானத்தினை வழங்குகிறது.

அத்துடன் இந்த மாதம் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற அந்நிய செலாவணியும் அதிகரித்துள்ளது.

எனவே இனி ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டியதில்லை என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# துறைமுக பிரவேச வீதி நிர்மாணப்பணிகள் துரிதப்படுத்தப்பட்டு 2023 இல் பூர்த்தி

## நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ



இங்குருகடே சந்தியிலிருந்து காலிமுகத்திடல் துறைமுகம் வரையான துண்கள் மேல் நிர்மாணிக்கப்படும். துறைமுக பிரவேச பாதை நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தப்பட்டு 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படும் என ஆளும் தரப்பு பிரதம கொறடா, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அண்மையில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கோபுரங்களின்

08

# சிரேஷ்ட ஊடகவியலாளர் ஆர்.நடராஜன் காலமானார்



சிரேஷ்ட ஊடகவியலாளர் ஆர் .நடராஜன் நேற்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (21) பி.பகல் 4 மணிக்கு நடைபெறும்.

இரத்தினம் நடராஜன், 1958 இல் அக்கரைப்பற்றில் பிறந்தார். 1980 முதல் வீரகேசரி பொத்துவில் நிருபராக கடமையாற்றினார் தொடர்ந்து தினகரன் பத்திரிகையின் பனங்காடு நிருபராக கடமையாற்றியதுடன் சுதந்திர ஊடகவியலாளராக உதயம், வலம்புரி, தமிழ் மிரர்,

08

# தொலைக்காட்சி நாடகத்தின் எதிர்காலம் புதிய அத்தியாயம் தொடர்பில் கவனம்

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையில் பேச்சுவார்த்தை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தரமான சிறந்த தொலைக்காட்சி நாடகங்கள் தயாரிக்கப்படுவதன் முக்கியத்துவம் தொடர்பிலும் அதேபோன்று ரசிகர்களுக்கு உயர்ந்த தரமான ரசனையைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலும் முறையான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிப்பது தொடர்பான பேச்சுவார்த்தையொன்று ஊடகத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெருமவுக்கும் தொலைக்காட்சி நாடக தயாரிப்பாளர்கள் பேரவைக்குமிடையில் நடைபெற்றுள்ளது.

ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றுள்ள இந்த பேச்சுவார்த்தையின் போது தொலைக்காட்சி நாடகங்கள் தொடர்பில் தேசிய கொள்கையை உருவாக்குதல், வெளிநாட்டு தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்களுக்காக வரி அறவீடு செய்தல், 2023 2032 ஆண்டை சிறந்த தொலைக்காட்சி தசாப்தமாக உருவாக்குவதற்கான திட்டங்களை தயாரித்தல், தொலைக்காட்சி நாடகத் துறையின் தொழில் தன்மையை பாதுகாத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

தேசிய தனித்துவத்திற்கு முக்கியத்துவம் வழங்கி படைப்புகளை உருவாக்குவதன் முக்கியத்துவம் தொடர்பில் ஊடகத்துறை அமைச்சரினால் விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

இலங்கையின் தொலைக்காட்சித் துறை நவீன தொழில்நுட்பத்துடன் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்ல வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வில் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட, தொலைக்காட்சி நாடக தயாரிப்பாளர்கள் பேரவையின் தலைவர் சட்டத்தரணி டக்ளஸ் சிறிவர்தன, அதன் செயலாளர் நாலன் மெண்டிஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ஸ)

# தவக்கால சிந்தனை



## இறைவாக்கினர்களுக்கு மதிப்பளிப்போம்

முற்றத்து முல்லைக்கு மனம் இல்லை என்பார்கள். நம் வீட்டுத் தோட்டத்தில் முல்லை மலர்ந்தால் அந்த வாசனை எமக்குத்தெரிவதில்லை. மாற்றான் தோட்டத்தில் முல்லை மலர்ந்திருந்தால் அந்த வாசனையை நாம் விருப்பத்துடன் நுகர்வோம். அதே போன்று நம்மோடு வாழும் மனிதர்களில் நல்ல உள்ளம் படைத்தோர், திறமைகளையுடையோர் நம் கண்களுக்குத் தெரிவதில்லை. இது உலக யதார்த்தம்.

இன்று மட்டுமல்ல வரலாற்றின் தொடக்கத்தில் இருந்து இவ்வாறுதான் நடந்து வருகிறது. இறைவாக்கினர் எலியாவின் காலத்தில் மூன்றரை ஆண்டுகள் பாரிய பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது இஸ்ராயேல் மக்களிடையே எத்தனையோ கைம்பெண்கள் இருந்தும் சாரிபாத்தில் வாழ்ந்த கைம்பெண்ணிடமே எலியா அனுப்பப்பட்டார். அந்த பெண்ணிற்காக எலியா அற்புதம் செய்தார். பஞ்சம் முடியும் வரை அவருடைய இல்லத்தில் இருந்த அப்ப மாவும் எண்ணெயும் குறைவு படவே இல்லை.

இறைவாக்கினர் எலிசாவின் காலத்தில் இஸ்ராயேல் மக்களிடையே எத்தனையோ தொழு நோயாளிகள் இருந்தனர். ஆயினும் அவர்கள் எவருக்கும் நோய் நீங்கவில்லை. சிரியாவைச் சேர்ந்த நாமானுக்கே அவர் புதுமை செய்தார்.

நாமானின் நோய் மட்டுமே நீங்கியது. இயேசு எத்தனையோ புதுமைகளை மற்ற ஊர்களில் செய்த போதும் நாசரேத்தில் மிக சில புதுமைகளையே செய்தார். காரணம் சொந்த ஊரில் இறைவாக்கினர்கள் மதிக்கப்படுவதில்லை.

நம்முடைய இல்லத்திலும். சூழலிலும் நாம் பணி புரியும் இடங்களிலும் கல்வி கற்கும் இடங்களிலும் பல இறைவாக்கினர்கள், திறமையானவர்கள் மற்றும் நல்லவர்களும் உள்ளார்கள் அவர்களை இனங்கண்டு கொள்வது அவசியம். சொந்த ஊரிலுள்ள இறைவாக்கினர்களையும் மதிக்கக் கற்றுக் கொள்வோம்.

அருட்தந்தை அருண்ரெக்ஸ்...

# 3500 மெற் தொன் எரிவாயுவுடன் கப்பல் இன்று இலங்கை வருகிறது

**அடுத்த தினங்களுக்கு நாடு பூராவும் விநியோகம்**



இன்று நாட்டை வந்தடையவுள்ள எரிவாயு கப்பலுக்கு கட்டணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறித்த கப்பல் மாலைத்தீவில் இருந்து இன்று நாட்டை வந்தடையவுள்ளது.

அதில் 3,500 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 17ஆம் திகதி நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 3,500 மெற்றிக் டன் எரிவாயு அடங்கிய

08

தமிழக மீனவரது தொடரான அத்துமீறல்;

# முதல்வர் ஸ்டாலினை சந்திக்க விரும்பும் யாழ். மீனவர்கள்

## நேரம் ஒதுக்கித்தருமாறு கடிதம் அனுப்பிவைப்பு

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



தமிழக மீனவர்கள் இலங்கை கடல் பகுதியில் இழுவை படகில் மீன் பிடிப்பது தொடர்பாக முதல்வர் மு.க. ஸ்டாலினை சந்தித்து பேச நேரம் ஒதுக்குமாறு இலங்கை தமிழ் மீனவர்கள் மனுவொன்றை அனுப்பியுள்ளனர்.

இதுதொடர்பாக ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சங்கர்லால் குமாவத் மூலம் மனு அளித்துள்ள விபரம் வருமாறு ; யாழ் மாவட்ட கடல் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு தலைவர் அன்னராஜா, அன்னலிங்கம் சார்பில் தமிழ் மீனவர்கள் கச்சத்தீவு திருவிழாவின் போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது, தமிழக மீனவர்கள் இலங்கை கடல் பகுதியில் இழுவலை படகுகளை கைவிட்டு, தடை செய்யப்பட்ட இரட்டை மடி, சுருக்கு மடிகளை பயன்படுத்தாமல் மீன்பிடித்தால் அதை எதிர்க்க மாட்டோம். இதை உறுதி செய்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும்

08

# மோடியின் இலங்கை விஜயம் கேள்விக்குறி!

## ஜெய்சங்கரின் விஜயம் உறுதியானது



இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் குறித்து பரவலாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால் அந்த விஜயமானது இதுவரையில் உறுதிப்படுத்தப்பட வில்லை என தெரிவித்த டெல்லி செய்திகள், வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் செயலர் ஹர்ஷ வர்தன் ஷரிங்லா தலைமையிலான உயர் மட்ட குழு எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிமை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளதாக குறிப்பிட்டன.

குறித்த திகதியில் ஓரிரு தினங்கள் முன்பின் ஆனாலும் விஜயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த செய்தி மூலங்கள் மேலும் தெரிவித்தன.

வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் செயலர் ஹர்ஷ வர்தன் ஷரிங்லா தலைமையிலான உயர்மட்ட குழுவின் கொழும்பு வருகை பிரதமர் மோடியின் விஜயத்திற்கான முன்னேற்பாடுகளை மையப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. எவ்வாறாயினும் 5 ஆவது பல்துறை தொழில்நுட்பம்

08

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின்:

# இராஜதந்திர அதிகாரிகள் மூவர் இன்று இலங்கை விஜயம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூன்று உயர்மட்ட அதிகாரிகள் இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.


அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான வெளியுறவுத்துறை செயலாளர் விக்டோரியா நுலண்ட், பாதுகாப்பு கொள்கைகளுக்கான துணைச் செயலாளர் அமண்டா ஜே. டோரி, தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் டொனால்ட் லூ ஆகிய மூவருமே இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

அதேவேளை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான வெளியுறவுத் துறை செயலாளர் விக்டோரியா நுலண்ட் தலைமையிலான தூதுக் குழுவொன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை பங்களாதேஷ்,இந்தியா மற்றும் இலங்கைக்கான விஜயத்தை ஆரம்பித்துள்ளது.

இலங்கைக்கான விஜயத்தின் போது இவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோருடன் விசேட கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதுடன் பல்வேறு அரசியல் தரப்பினரையும் சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.(ஸ)

# உக்ரைன் துறைமுகம் ரஷ்ய படையினரால் முற்றுகை

## மரியுபோல் நகரம் முற்றாக சிதைவு



உக்ரைனின் துறைமுக நகரமான மரியுபோலை ரஷ்ய துருப்புகள் மொத்தமாக முற்றுகையிட்டு தொடர் தாக்குதலை முன்னெடுத்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மரியுபோல் நகரம் மொத்தமாக சிதைக்கப்பட்டுள்ள நிலையில், குடியிருப்பு கட்டடங்களில் இருந்து இதுவரை சிலரை மீட்க முடியவில்லை என கூறப்படுகிறது.

உக்ரைன் தலைநகரை இரண்டு நாட்களுக்குள் கைப்பற்றுவதாக களமிறங்கிய ரஷ்ய துருப்புகள் 24 நாட்களாக

08



2022 ஆம் ஆண்டுக்கான மகளிர் தின தேசிய நிகழ்ச்சித் தொடரின் நுவரெலியா மாவட்ட நிகழ்வு ராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவின் தலைமையில் நுவரெலிய செயலகத்தில் நடைபெற்றது. இதன் போது பெண்களுக்கு வேலை வாய்ப்பு, சுயதொழில் உதவி, கல்வி மற்றும் ஊக்கமளிக்கும் நோக்கிலான 'திரிய கத்துன்' இதழ் வௌியிடப்பட்டதோடு 25 பெண்களுக்கு கௌரவமும் வழங்கப்பட்டது.இந்த நிகழ்வில் அமைச்சர் சி.பி ரத்னாயக்கவும் கலந்து கொண்டார்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 183.25 | 192.37 |
| சிங்கப்பூர் டொலர் | 185.58 | 192.47 |
| கனடியன் டொலர் | 195.26 | 204.12 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 263.51 | 271.91 |
| யூரோ | 278.29 | 288.81 |
| சுவிஸ் பிராங்க் | 270.59 | 281.79 |
| ஜப்பான் யென் | 2.1570 | 2.2543 |
| அமெரிக்க டொலர் | 249.96 | 259.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 608.26 | கட்டார் ரியால் | 62.81 |
| குவைத் டினார் | 755.13 | சவூதி ரியால் | 61.12 |
| ஓமான் ரியால் | 595.66 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 62.43 |





# சர்வதேச வனங்கள் தினம் மார்ச் 21

**சர்வதேச வனங்கள் தினம்**

2012 ஐக்கிய நாடுகளின் பொது அமர்வின்போது மார்ச் மாதம் 21ஐ சர்வதேச வனங்கள் தினமாக பிரகடனப் படுத்தினர். ஆண்டு தோறும் மார்ச் மாதம் 21ம் திகதி சர்வதேச வனங்கள் தினமாக உலக மக்களால் கொண்டாடப்படுகிறது.

**இலங்கையில் சர்வதேச வனங்கள் தினக் கொண்டாட்டம்**

**UNESCO** அமைப்பின் மூலம் உலகப் பாரம்பரிய தளமாக்கப்பட்ட சிங்கராஜ அடவியின் உள்ளும் மற்றும் அதனைச் சூழவுள்ள பாதுகாப்பு மண்டலத்திலும் நிகழ்த்தப்படுகின்ற விசேட நடவடிக்கைகளுக்கு பிரதானத்துவம் கொடுத்து நாடளாவிய ரீதியில் பலவிதமான பாதுகாப்புச் செற்பாடுகளை நடத்துதல்.

**சர்வதேச வனங்கள் தினத்தின் நோக்கங்களுக்கு நிகராக ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்ற தேசிய நிகழ்ச்சிகள்**

சௌபாக்கியத்தின் பார்வை எனும் தேசிய கொள்கை அறிக்கைக்கு அமைய இலங்கையிலே காடுகளின் பலனை 2025ல் **29%** தொடக்கம் **30%** வரை உயர்த்திடும் நோக்கில் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு, வனப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து

- 5000 ஏக்கரில் வனப் பயிர்ச்செய்கை செய்தல்
- சாலைகளின் இரு புறம், நகர்ப்புறத் தளங்கள், தொழிற்சாலை வளாகம், மத வழிபாட்டுத் தளங்கள், பாடசாலை, அலுவலகப் பகுதிகள், நீரணைகள் போன்ற பகுதிகளில் மரம் நடுதல்
- 200 வனக் கிராமங்களை உருவாக்குதல்
- கிராம மக்களின் ஒத்துழைப்புடன் செடி உற்பத்தி செய்தல்
- வனப் பாதுகாப்பு மற்றும் மரம் நடுதல் தொடர்பாக பாடசாலை மாணவர்களை இணைத்துக்கொள்ளல்
- தனியார் நிலங்களில் வன உற்பத்திக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்
- 75ஆவது சுதந்திர தினக் காலகட்டத்தில் 75 இலட்சம் செடிகளை நடுதல்
- காடுகளின் உள்ளே பரவிக்கிடக்கும் பாதகமான ஆக்கிரமிப்புத் தாவரங்களை அகற்றுதல்
- சேதமடைந்த காடுகளை மற்றும் சதுப்பு நிலங்களை மறுசீரமைத்தல்
- அனைத்துப் பிறந்தநாட்களிலும் மரமொன்றை நடுதல்
- வனப் பாதுகாப்பு, நிலையான உற்பத்தி மற்றும் பாவனையை ஊக்கப்படுத்துதல்

**சௌபாக்கியத்தின் பார்வை எனும் தேசிய கொள்கை அறிக்கைக்கு அமைய சுற்றுச்சூழலை சுற்றுலாத் துறையை திட்டமிட்டபடி நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு பங்களிக்கச் செய்தல்**

அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களால் 141 உலகத் தலைவர்களுடன் இணைந்து 2021.11.12 அன்று பிரித்தானியாவிலே கிளாஸ்கோ நகரத்திலே கைச்சாத்திடப்பட்ட வன மற்றும் நில நுகர்வு தொடர்பான கிளாஸ்கோ தலைவர்களின் அறிக்கைக்கு அமைய 2030ம் ஆண்டில் காடழிப்பு மற்றும் நிலச் சீர்கேடு ஆகியவற்றை தடுத்து நிறுத்துதல் மற்றும் மீள் அமைத்தல் போன்றவற்றிற்கு அனைத்துக் கட்சிகளுடனும் இணைந்து செயலாற்றுதல்

தாய் மண்ணின் உயிர்காக்க உதவிடும் சிறந்த வன வளத் தொகுதியை பாதுகாத்து அவற்றின் பெறுமதியை அடுத்த பரம்பரைக்கு உரிமையாக்கிட

## சர்வதேச வனங்கள் தினத்தின் தேசிய வேலைத்திட்டம்

வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர்
கௌரவ.சீ.பீ.ரத்நாயக்க அவர்களின் தலைமையில்
2022 மார்ச் 21ம் திகதி மு.ப.10 மணிக்கு
குடவ சிங்கராஜ பாதுகாப்பு மத்திய நிலைய வளாகத்தில் நிகழவிருக்கின்றது

හරිත ශ්‍රී ලංකා - සැම අයෙක් එක් පැලයක් | பசுமையான இலங்கை - ஒவ்வொருவரும் ஒருமரம் | Green Sri lanka - One Person - One Plant

வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு



# இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

## சனாதிபதி விளையாட்டு விருதுகள் – 2020

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுத் துறையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெற்றிகளை ஈட்டிய வீரவீராங்கனைகளை இனங்கண்டு அவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் 2020 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து 2020 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் விளையாட்டுக்களில் ஆற்றல்களை வெளிக்காட்டிய வல்லுநர்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதன் பொருட்டு சனாதிபதி விளையாட்டு விருதுகள் விழா-2020 ஆம் வருடத்திற்கு ஏற்புடையதாக கீழ்வரும் பிரிவுகள் தொடர்பாக விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

அநுராதவிஜேகோன்
செயலாளர், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறைஅமைச்சு

1. மிகச் சிறந்த விளையாட்டு ஆளுமை
2. சிரேட்ட விளையாட்டு வீரர்களின் அணி
3. சிரேட்ட விளையாட்டு வீராங்கனைகளின் அணி
4. சிறந்த விளையாட்டு வீரன்
5. சிறந்த விளையாட்டு வீராங்கனை
6. விசேட தேவைகொண்ட திறமைமிக்க விளையாட்டு வீரர்களின் அணி
7. விசேட தேவை கொண்ட திறமைமிக்க விளையாட்டு வீராங்கனைகளின் அணி
8. விசேட தேவை கொண்ட திறமைமிக்க விளையாட்டுவீரன்
9. விசேட தேவை கொண்ட திறமைமிக்க விளையாட்டு வீராங்கனை
10. திறமையான விளையாட்டு வீரர்களின் அணி
11. திறமையான விளையாட்டு வீராங்கனைகளின் அணி
12. திறமையான விளையாட்டு வீரன்
13. திறமையான விளையாட்டு வீராங்கனை
14. திறமையான விசேடதேவை கொண்ட விளையாட்டு வீரர்களின் அணி
15. திறமையான விசேட தேவைகொண்ட விளையாட்டு வீராங்கனைகளின் அணி
16. திறமையான விசேடதேவை கொண்ட விளையாட்டு வீரன்
17. திறமையான விசேடதேவை கொண்ட விளையாட்டு வீராங்கனை
18. திறமையான விசேட தேவைகொண்ட மத்தியஸ்தர் / போட்டித் தீர்ப்பாளர் / தொழில்நுட்ப உத்தியோகத்தர்
19. திறமையான பயிற்றுவிப்பாளர்
20. ஆண்டின் திறமையான விளையாட்டு அறிஞர்
21. ஆண்டின் திறமையான விளையாட்டு மருத்துவர்
22. ஆண்டின் திறமையான மகிழ்வூட்டும் விளையாட்டு தொகுப்பாளர்
23. ஆண்டின் திறமையான விளையாட்டு மேம்படுத்துனர்
24. ஆண்டின் திறமையான விளையாட்டு மேம்படுத்துனர் (பாடசாலைகள் தொடர்பாக)
25. ஆண்டின் திறமையான விளையாட்டு புகைப்படக் கலைஞன்
26. ஆண்டின் வெளியீடு செய்யப்பட்ட விளையாட்டு நூல்
27. ஆண்டின் தொலைக்காட்சி விளையாட்டு நிகழ்ச்சி (நிகழ்கால தகவல்கள் தொடர்பான)
28. ஆண்டின் தொலைக்காட்சி விளையாட்டு நிகழ்ச்சி (நேரடி)
29. ஆண்டின் வானொலி விளையாட்டு நிகழ்ச்சி (நிகழ்கால தகவல்கள் தொடர்பான)
30. ஆண்டின் வானொலி விளையாட்டு நிகழ்ச்சி (நேரடி)
31. ஆண்டின் தேசிய விளையாட்டுப் பக்கம் (அச்சு ஊடகம்) (சிங்களம்)
32. ஆண்டின் தேசிய விளையாட்டுப் பக்கம் (அச்சு ஊடகம்) (தமிழ்)
33. ஆண்டின் தேசிய விளையாட்டுப் பக்கம் (அச்சு ஊடகம்) (ஆங்கிலம்)
34. ஆண்டின் சிறந்த விளையாட்டு இலத்திரனியல் சமூக ஊடக வலைப்பின்னல்



விண்ணப்பப் படிவங்களை 2022 ஏப்ரல் 07 ஆம் திகதி பி.ப 4.00 மணிக்கு முன்னர் நேரில் கையளிக்கவும். அல்லது பதிவுத் தபாலில், மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைக்கவும்

சகலவிபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவத்தின் பொருட்டு www.moys.gov.lk இற்குள் பிரவேசிக்கவும்.

மேலதிகவிபரங்கள் - K.D.N.M. தேசப்பிரிய (உதவிப் பணிப்பாளர் - அபிவிருத்தி) 076 8347376 / 0112 680276
விண்ணப்பதாரியின் மேலதிக தேவைகளுக்கு www.moys.gov.lk ஊடாக தொடர்பு கொள்க.

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321
பிலவ வருடம் பங்குனி மாதம் 07ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 17

## குறள் தரும் சிந்தனை



கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு

இந்த உலகம், அன்பும் இரக்கமும் இணைந்த கண்ணோட்டம் எனப்படுகின்ற பெரும் அழகைக் கொண்டவர்கள் இருப்பதால்தான் பெருமை அடைகிறது.

# உண்மையான நட்புநாடு என்பதை வெளிப்படுத்தியுள்ள இந்தியா

இலங்கை நாலாபுறமும் கடலால் சூழப்பட்டுள்ள தீவாக இருந்த போதிலும், இந்தியாவின் மிகக் கிட்டிய அயல்நாடாக அமைந்திருக்கின்றது. இது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவு ஆரம்ப காலம் முதல் நீடித்து வருவதற்கு பக்கபலமாக அமைந்திருக்கின்றது.

இரு நாடுகளுக்கும் இடையில் சமயம், சமூகம், கலாசாரம், கல்வி, பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் நட்புறவு நிலவி வருகின்றது. இந்நிலையில் இலங்கையின் சமய, கலாசார, கல்வி, உட்கட்டமைப்பு, பொருளாதார மேம்பாட்டுக்காக இந்தியா உதவி ஒத்துழைப்புகளை நல்கி வருகின்றது.

அதிலும் குறிப்பாக தீவு நாடான இலங்கை நெருக்கடிகளை எதிர்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உதவி ஒத்துழைப்புகளை நல்க இந்தியா தவறியதில்லை.

அந்த வகையில் தற்போது இலங்கை கொவிட் 19 தொற்றின் விளைவாகத் தோற்றம் பெற்றுள்ள பொருளாதார சவாலின் விளைவான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்திருக்கின்றது. இந்நெருக்கடிகளில் அந்நிய செலாவணி பற்றாக்குறை, எரிபொருள் தட்டுப்பாடு என்பன பிரதான இடத்தைப் பிடித்துள்ளன. அத்தோடு ஏனைய நெருக்கடிகளும் நிலவவே செய்கின்றன. இந்நெருக்கடிகளின் தீவிர நிலையைத் தணித்து அவற்றை வெற்றி கொள்வதற்கு ஏற்ப பல்வேறு வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

உலகமயமாக்கலின் கீழ் இலங்கை எதிர்கொண்டுள்ள இப்பொருளாதார நெருக்கடிகளை தனித்து நின்று தணிப்பதும், வெற்றி கொள்வதும் இலகுவான காரியமல்ல. இவ்வாறான பின்னணியில்தான் இலங்கை முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியைத் தணிப்பதற்கும் அதிலிருந்து மீட்சி பெறுவதற்கும் ஏற்ப, 'அயல் நாடு முதலில்' என்ற கொள்கைத் திட்டத்தின் கீழ் உதவி, ஒத்துழைப்புகளை இந்தியா நல்கி வருகின்றது.

அந்த வகையில் இந்தியா கடந்த இரண்டொரு மாதங்களுக்கு முன்னர் 900 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக வழங்கியது. அதில் 500 மில்லியன் அமெரிக்க டொலர் இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி (எக்ஸிம்) மூலம் வழங்கப்பட்டது. இந்நாட்டின் எரிபொருள் பற்றாக்குறையைத் தணிக்க உதவும் நோக்கிலேயே இக்கடனுதவி வழங்கப்பட்டது. 400 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய செலாவணி நெருக்கடியைத் தணிக்க உதவும் வகையில் வழங்கப்பட்டது. இந்நாடு எதிரகொள்ளும் பல நெருக்கடிகளுக்கும் அந்நிய செலாவணிப் பற்றாக்குறையும் எரிபொருள் தட்டுப்பாடும் முக்கிய காரணிகளாக விளங்குகின்றன. அதற்கேற்ப இக்கடனுதவி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் இந்நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை மேலும் தணிக்க உதவும் வகையில் கடந்த 17 ஆம் தகதி (மார்ச் 2022) ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை இந்தியா வழங்கியுள்ளது. இலங்கைக்குத் தேவையான உணவு, மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு உதவும் வகையில் இக்கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

'இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ள இக்கடனுதவியை 03 வருட தவணையில் திருப்பிச் செலுத்த வேண்டும். ஆன போதிலும் இக்கடனுதவிக்காக எவ்வித நிபந்தனையும் விதிக்கப்படவில்லை' என்று நிதிமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

தமது அயல் நாடு, நீண்ட கால நட்பு நாடு. தற்போது முகம் கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீட்சி பெற உதவுவதற்காகவே இக்கடனுதவிகளை இந்தியா இலங்கைக்கு வழங்கியுள்ளன என்பது தெளிவாகின்றது. இக்கடனுதவியின் ஊடாக இலங்கையின் உண்மையான நட்புக்கும் நேசத்திற்கும் உரிய நாடு என்பதை இந்தியா மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்தியுள்ளது.

கொவிட் 19 தொற்றின் விளைவாகத் தோற்றம் பெற்றுள்ள பொருளாதார நெருக்கடிகளைத் தணித்து இலங்கை மீட்சி பெற உதவும் வகையில் இந்தியாவின் உதவி ஒத்துழைப்புகள் அமைந்துள்ள போதிலும், எதிரணியைச் சேர்ந்த சிலர் பல நிபந்தனைகளின் கீழேயே இக்கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன எனக் கூறியுள்ளனர். அவர்களது கூற்றுக்கு நிதியமைச்சரின், 'இக்கடனுதவிக்காக எவ்வித நிபந்தனையும் விதிக்கப்படவில்லை' என்ற அறிவிப்பே நல்ல பதிலாகும்.

தற்போது நாடும் மக்களும் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து விரைவாகவும் வேகமாகவும் மீட்சி பெற வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பும் ஆதங்கமாகவும் உள்ளது. இவ்வாறான சூழலில் இந்த நெருக்கடியிலிருந்து மீட்சி பெறவென அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளையும் இந்தியா உள்ளிட்ட நாடுகள் அளிக்கும் உதவி ஒத்துழைப்புகளைத் தவறானதும் பிழையானதமான கண்கொண்டு நோக்குவதும் இந்நெருக்கடியைத் தீர்க்க வழிவகுக்காது. இதனை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆகவே நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தணித்து அதனை வெற்றிகொள்ள மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பு நல்குவதே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# இன்டர்போல் தலைவருடன் அமைச்சர் சரத் வீரசேகர சந்திப்பு



## குற்றங்கள் மற்றும் பயங்கரவாதத்தை தடுப்பது தொடர்பாகவும், சட்ட அமுலாக்கத்தை மேம்படுத்துவது குறித்தும் விரிவாக ஆராய்வு

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவுக்கும் இன்டர்போல் அமைப்பின் தலைவரான சர்வதேச பொலிஸ் மா அதிபர் கலாநிதி அஹமட் நாசர் அல்ரெய்சிக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் துபாயில் இடம்பெற்றது.

குற்றங்கள் மற்றும் பயங்கரவாதத்தை தடுப்பது தொடர்பாகவும், சட்ட அமுலாக்கத்தை மேம்படுத்துவது குறித்தும் இச்சந்திப்பின் போது விரிவாகஆராயப்பட்டது.



2021 ஓகஸ்ட் 15 அன்று தலிபான்கள் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றியதில் இருந்து இந்தியப் பெருங்கடல் பகுதியில் போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தல் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத்வீரசேகர இச்சந்திப்பின் போது சுட்டிக் காட்டினார். இது தொடர்பாக கூட்டு வழிநடத்தல் குழுவை அமைப்பது பொருத்தமானது என இன்டர்போல் அமைப்பின் தலைவர் டொக்டர் அஹமட் நாசர் அல் ரைசி தெரிவித்துள்ளார்.ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்ன ர் அது தொடர்பான வி சாரணைகளுக்கு இலங்கைக்கு வழங்கிய உதவி மற்றும் இது தொடர்பிலான ஆய்வை மேற்கொள்வதற்கு லியோன் மற்றும் சிங்கப்பூரின் உள்ளூர் நிறுவனங்களுடன் இணைந்து இன்டர்போல் வழங்கிய அர்ப்பணிப்பு மிகுந்த சேவைகளுக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நன்றி தெரிவித்தார்.

இலங்கை பொலிஸாரின் இணைய நடவடிக்கைகளை மேம்படுத்துதல், பயங்கரவாத மற்றும் தீவிரவாதஅச்சுறுத்தல்களை கண்டறிதல், சட்டத்தை அமுல்படுத்துவதில் ஒத்துழைத்தல் மற்றும் இணைய குற்றங்களைத் தடுப்பது குறித்தும் இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

சர்வதேச பொலிஸ் மாநாடு சில தினங்களுக்கு முன்னர் துபாயில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. அம்மாநாட்டில் பங்கேற்பதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர துபாய் சென்றிருந்தார். அம்மாநாட்டுக்கு சென்றிருந்த போதே இன்டர்போல் அமைப்பின் தலை வ ரான சர்வதேச பொலிஸ் மா அதிபர் கலாநிதி அஹமட் நாசர் அல்ரெய்சியை அ மைச்சர் சரத் வீரசேகர் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

றிசாத் ஏ காதர்
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு தமதுயிரை தியாகம் செய்த பொலிஸாரை நன்றியுடன் நினைவு கூருவோம்!

## 158 வது பொலிஸ் வீரர்கள் நினைவுதினம் இன்று அனுஷ்டிப்பு





158 ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் 2022 மார்ச் மாதம் 21 ஆம் திகதியாகும். கடமையின் போது உயிரிழந்த பொலிஸ் வீரர்களை கௌரவிக்கும் முகமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த நினைவுதினத்திற்கு இன்று 42 வருடம் பூர்த்தியாகிறது. முதலாவது பொலிஸ் வீரர்கள் தினம் 1981 மார்ச் மாதம் 21ஆம் திகதி அன்றைய பொலிஸ்மா அதிபர் அனா செனவிரத்ன தலைமையில் நடைபெற்றது.

1866 செப்டெம்பர் 3 ஆம் திகதி இலங்கை பொலிஸ் அரசியலமைப்பு ரீதியாக நிறுவப்பட்டது. பொலிஸ் வீரர்களின் நினைவு தினம் 115 ஆண்டுகளுக்கு பிறகே பிரகடனப்படுத்தப்பட்டது. நினைவு தினம் பிரகடனப்படுத்தப்பட்ட வேளையில் பொலிஸ் அதிகாரிகள் 128 பேரளவில் தமது கடமையின் போது நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்திருந்தார்கள்.

பொலிஸ் நினைவு தினம் கொண்டாடுவதற்கு சிறப்பான நாள் என மார்ச் 21 ஆம் திகதியே என்பதை ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ் மா அதிபர் திலக் இந்தமல்கொட தெரிவித்திருந்தார். கடமையில் இருக்கும் போதே உயிர் நீத்த பொலிஸ் அதிகாரிகள் தொடர்பான தகவல்களை ஆராயும் போது கண்டி_கொழும்பு பாதையில் மாவனல்லை பொலிஸ் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபி மிகவும் முக்கியமானதாகும்.

இந்த நினைவுத் தூபி அப்போதைய கேகாலை பிரதேசத்திற்கு பொறுப்பாகவிருந்த ஈ.ஆர்.சோன்டர்ஸ் என்னும் அரசாங்க அதிபரால் காலஞ் சென்ற சஹான் என்னும் பொலிஸ் காண்ஸ்டபிளை நினைவுபடுத்தும் முகமாகவே அமைக்கப்பட்டது. அவர் 1864 ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் திகதி உத்துவங்கந்த சரதியலை கைது செய்ய முற்படும் வேளையில், சரதியலின் சகாவான மம்மலே மரிக்காரால் கொல்லப்பட்டார். இதுவே பூரண அதிகாரம் உடைய பொலிஸ் அதிகாரி ஒருவர் கடமையில் ஈடுபட்டிருக்கும் வேளையில் மரணம் அடைந்த முதலாவது சம்பவம் என பொலிஸ் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றங்கள், போதைப்பொருள், வாகன விபத்துக்கள், சமூக துர்நடத்தைகளை கட்டுப்படுத்தல், சட்டம் அமைதியை நிலைநாட்டுதல் என்றெல்லாம் தமது உயிரை பல சந்தர்ப்பங்களில் போலிஸ் அதிகாரிகள் தியாகம் செய்துள்ளார்கள்.

1971 ஏப்ரல் கிளர்ச்சியின் போது 35 போலிஸ் அதிகாரிகள் நாடு பூராவும் உள்ள பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்ட போது இறந்துள்ளார்கள். ஆனால் 1977 பெப்ரவரி 14 ஆம் திகதி காங்கேசன்துறையில் பொலிஸ் சார்ஜன்ட் கருணாநிதி கொலையானது நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகளின் ஆரம்பமாகும்.

(08ஆம் பக்கம் பார்க்க)

பொலிஸ் ஊடகப் பிரிவு,
பொலிஸ் தலைமையகம்.
தமிழில்: வீ.ஆர்.வயலட்

# கர்நாடகா ஹிஜாப் வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகளுக்கு விசேட 'Y' பிரிவு பாதுகாப்பு

## கொலை மிரட்டலையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை

ஹிஜாப் வழக்கில் தீர்ப்புக் கூறிய கர்நாடக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ரிதுராஜ் அவஸ்தி, நீதிபதிகள் கிருஷ்ணா தீக்சித், ஜே.எம். காஜி ஆகியோருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதையடுத்து அவர்களுக்கு 'Y' பிரிவு பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. தமிழகத்தில் நடந்த ஆர்பாட்டத்தின் போது மிரட்டல் விடுக்கப்பட்டதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



கர்நாடக மாநிலம் உடுப்பி பியூ கல்லூரிகளில் ஹிஜாப் அணிய தடை விதிக்கப்பட்டிருந்தது. இதற்கு மாணவிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் தடை விலக்கி கொள்ளப்படவில்லை. கர்நாடக அரசும் சீருடை முறையை கட்டாயமாக்க உத்தரவிட்டது.

இதற்கிடையே ஹிஜாப் தடையை நீக்க வேண்டும் எனக் கூறி உடுப்பி மாவட்ட கல்லூரி மாணவிகள் பெங்களூரில் உள்ள கர்நாடக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். தலைமை நீதிபதி ரிதுராஜ் அவஸ்தி, நீதிபதிகள் கிருஷ்ணா தீட்சித், ஜே.எம்.காஜி ஆகியோர் அடங்கிய அமர்வு இவ்வழக்கை பெப்ரவரி 10 முதல் விசாரிக்கத் தொடங்கியது. இந்த அமர்வு 11 நாட்கள் விசாரணை நடத்தியது. பெப்ரவரி 25 இல் விசாரணை முடிவடைந்தது. இதையடுத்து தீர்ப்பு திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

அதன் பின்னர் மார்ச் 15 இல் தலைமை நீதிபதி ரிதுராஜ் அவஸ்தி, நீதிபதிகள் கிருஷ்ண தீட்சித், ஜே.எம்.காஜி ஆகியோர் தீர்ப்பு வழங்கினர். 'ஹிஜாப் என்பது இஸ்லாமிய சட்டத்தில் அத்தியாவசிய விஷயமல்ல' எனக் கூறிய உயர்நீதிமன்றம், கல்வி நிறுவனங்களில் ஹிஜாப் அணிய விதிக்கப்பட்ட தடை செல்லும் எனக்கூறி கர்நாடக அரசின் உத்தரவை உறுதி செய்தனர்.

இந்தத் தீர்ப்பால் முஸ்லிம் அமைப்பினர் அதிருப்தி அடைந்தனர். 3 நாட்களுக்கு முன்பு கர்நாடகத்தில் பந்த் அறிவித்து கடைகளை அடைத்து எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் கல்வி நிறுவனங்களில் மாணவிகள் ஹிஜாப் அணிந்து செல்ல அனுமதிக்க வேண்டும் என கோரிக்கை முன்வைத்தனர். இதேபோல் தமிழகம் உட்பட பிற மாநிலங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இந்நிலையில் தமிழகத்தில் மதுரையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதிகளை மிரட்டும் வகையில் பேசும் வீடியோ வெளியானது. இதுதொடர்பாக தல்லாக்குளம் உள்பட பல பொலிஸ் நிலையங்களில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. இந்நிலையில் வழக்கறிஞர் உமாபதி கர்நாடக உயர்நீதிமன்ற பதிவாளருக்கு கடிதம் ஒன்று எழுதினார். அதில், "எனக்கு வட்ஸ்அப்பில் வீடியோ ஒன்று வந்தது. அதில் தமிழ்மொழியில் பேசினார்கள். ஹிஜாப்புக்கு தடை விதித்த கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி உள்ளிட்டவர்களுக்கு கொலை மிரட்டல் விடுக்கும் வகையில் பேசியிருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தேன். இது மதுரை மாவட்டத்தில் நடந்த கூட்டத்தில் பேசுவது போல் உள்ளது. மேலும் ஜார்கண்ட் உயர்நீதிமன்ற நீதிபதி கொல்லப்பட்டதை அந்த நபர் குறிப்பிட்டுள்ளார். அந்நபர் ஒருமையில் பேசியதுடன், 'நீதிபதி நடைப்பயிற்சி செல்லும் இடம் தெரியும்' எனக் கூறுகிறார்" என தெரிவித்து இருந்தார்.

இதுதொடர்பாக மற்றொரு வழக்கறிஞர் சுதா கத்வா பெங்களூர் கப்பன் பார்க் பொலிசில் புகார் செய்தார். அங்கும் பொலிசார் பல்வேறு பிரிவுகளில் வழக்குகள் பதிவு செய்துள்ளனர். இதனால் ஹிஜாப் வழக்கில் தீர்ப்பு கூறிய நீதிபதிகளுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி கர்நாடக உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி உள்பட 3 நீதிபதிகளுக்கும் 'Y' பிரிவு பாதுகாப்பு அளிக்கப்பட உள்ளது என்று கர்நாடக முதல்வர் பசவராஜ் பொம்மை கூறினார்.

# 'ஒற்றுமைக்கான ஒரு மில்லியன் மரங்கள் நடுகை' AFC நிறுவனத்துக்கு நிலைபேறான நிதி விருது

இலங்கையின் பழைமையான நிதி நிறுவனமான Alliance Finance Co. PLC, (AFC), மற்றுமொரு சர்வதேச விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. இந்த முக்கியமான விருதை AFC வெல்வதற்கு 'ஒற்றுமைக்கான ஒரு மில்லியன் மரங்கள்' திட்டம் உதவியுள்ளது.

Karlsruhe Sustainable Finance Awards 2021 (நிலைபேறான நிதி விருதுகள்) நிலைபேறான வளர்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பினால் (EOSD) நடத்தப்படுகிறது. இது உலகளாவிய ரீதியில் நிலைபேறான தன்மை பிரிவில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களுக்கு விருதுகளை வழங்குகிறது.

2018ஆம் ஆண்டு AFC இனால் ஆரம்பிக்கப்பட்ட 'ஒற்றுமைக்கான ஒரு மில்லியன் மரங்கள்' திட்டம், 2024ஆம் ஆண்டளவில் இலங்கை முழுவதும் ஒரு மில்லியன் மரங்களை நடுவதை இலக்காகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டமானது, 2030ஆம் ஆண்டளவில் இலங்கையின் காடுகளின் பரப்பளவை 32% ஆக அதிகரிக்க வேண்டும் எனும் இலங்கையின் மீளக் காடாக்குதல் சவாலுக்கும் பங்களிப்புச் செய்கிறது. ஒரு மில்லியன் மரம் நடும் இலக்கைக் கொண்டுள்ள இந்த தேசிய திட்டத்திற்கு AFC குறிப்பிடும்படியான அதன் பங்களிப்பை வழங்கும். இந்தத் திட்டத்தின் கீழ், வீதி அபிவிருத்தி அதிகார சபை (RDA), லயன்ஸ் கிளப், இலங்கையின் முப்படைகள், பல்வேறு பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், மதவளாகங்கள், மாநகர சபைகள், நகரசபைகளுடன் இணைந்து 360,000 மரங்களை AFC நடுகை செய்துள்ளது.



அனைத்து நெடுஞ்சாலைகள், வீதி வலையமைப்புகள், நுரைச்சோலை மின்உற்பத்தி நிலையம், பாடசாலைகள், குறிப்பாக வழிபாட்டுத் தலங்களில் இந்த மரங்கள் பரவலாக நடப்பட்டுள்ளன. இந்தத் திட்டமானது அதன் பங்குதாரர்களுக்கு பல சமூக ரீதியான நன்மைகளை உருவாக்கியுள்ளது. அதில் ஒன்று 2030ஆம் ஆண்டளவில் சூழலிலுள்ள 120,000 மெட்ரிக் தொன் காபனீரொட்சைட்டை குறைப்பதாகும். இந்தத் திட்டத்திற்கான பிரதான தாவர விநியோகஸ்தர், சமூக தொழில்முனைவோரான ஜயந்த பாலசிங்க ஆவார். அவர் தனித்துவமான 'Ath Pavura' எனும் சமூக வணிக தளத்தின் மூலம் உருவானவராவார். அதில் AFC நிறுவனமும் ஒரு ஸ்தாபக பங்காளராக உள்ளது.

ஜயந்த பாலசிங்கவின் அமைப்பான 'துருவியன' ஏற்கனவே நடுகை செய்யப்பட்டு வளர்க்கப்பட்ட செடிகளை மற்றொரு இடத்தில் நடுவதற்காக வழங்கி வருகிறது. இதன் மூலம் தாவரங்கள் உயிர் வாழ்வதற்கான சிறந்த வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. மேற்படி அனைத்துத் திட்டங்களுக்கும் துரு வியனவை எமது பிரதான விநியோகஸ்தராக ஆக்கியுள்ளதன் மூலம், இந்த சமூக அக்கறை கொண்ட நிறுவனத்தின் வளர்ச்சிக்கு AFC உதவுவதோடு அதன் ஊழியர்களுக்கு வாழ்வாதார ஆதரவையும் வழங்குகின்றது. இந்தத் திட்டத்தின் விளைவானது, ஐ.நா. வின் நிலைபேறான வளர்ச்சி தொடர்பான பல்வேறு இலக்குகளை பூர்த்தி செய்வதில் நேரடியாகப் பங்களிக்கிறது

# இலங்கையின் மாபெரும் கல்விக் கண்காட்சி

## EDEX Hybrid Expo 2022

இலங்கையின் மாபெரும் கல்விக் கண்காட்சியும் வேலை வாய்ப்புக் கண்காட்சியுமான EDEX Expo, கொவிட் தொற்று காரணமாக ஏற்பட்ட இடைவேளைக்குப் பின்னர் புதிய மற்றும் சமகால வடிவில் கலப்பு கண்காட்சியாக (Hybrid Expo) எதிர்வரும் 26, 27ஆம் திகதிகளில் கொழும்பு 7இல் அமைந்துள்ள Royal Mas அரங்கில் நடைபெறவுள்ளதுடன் மெய்நிகர் எக்ஸ்போவாக (VirtualExpo) இடம்பெறவுள்ளது.

கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய கல்வி நிறுவகத்தின் (NIE) பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

18ஆவது தடவையாக நடைபெறவுள்ள EDEX Hybrid Expo 2022 கண்காட்சியானது அண்மைக்கால தொழில்நுட்பத்தை உள்ளடக்கி, நேரம் மற்றும் நடைமுறையில் உள்ள சமூக தேவைகளுக்கேற்ப நடத்தப்படுகிறது. அதி நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடைபெறும் இந்நிகழ்வானது மாணவர்கள் தங்கள் வீடுகளில் வசதியாகவும் பாதுகாப்பாகவும் இருந்தவாறு அவர்களின் கல்வி மற்றும் தொழில் தெரிவுகளை ஆராயும் எதிர்கால அனுபவத்தை வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. EDEX Nenapahana மற்றும் EDEX Sithuwam பிரிவின் கீழ் தொழில் வாய்ப்புக் கண்காட்சி, தொழில் துறைகள், தொழில் முனைவோர் வலயம், சமூகம் சார்ந்த திட்டங்களும் இக்கண்காட்சியில் வழமை போன்று இடம்பெறவுள்ளது.





La.Perfumerie.lk அதன் ஏழு புதிய வாசனை திரவியங்களை மீண்டும் அறிமுகம்படுத்தும் நிகழ்வு Gourmet Boutique இல்லத்தில் நடைபெற்றன . இந்த நிகழ்வில் முன்னாள் இலங்கை கிரிக்கெட் வீரர்களான அரவிந்த டி சில்வா, குமார தர்மசேன மற்றும் தெற்காசிய தொழில்நுட்பங்களின் பணிப்பாளர் ப்ரோஸ் கமர்தீன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டார்கள் La.Perfumerie.lk இன் பிணிப்பாளர்கள் ஷிபான் நஜிமுதீன், அர்ஷாத் அன்வர் மற்றும் நிகாஷ் பரீஸ் ஆகியோர் வாசனை திரவியங்களை அறிமுகம்செய்துவைத்தனர்.

(ருஸைக் பாரூக்)

## தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

# MA Excellence ஒருங்கிணைந்த அறிக்கையிடல் விருதுகள்

## 2021 இல் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தும் DIMO



அண்மையில் இடம்பெற்ற 'CMA Excellence in Integrated Reporting Awards 2021' விருது விழாவில் பிளாட்டினம் விருதை DIMO வென்றுள்ளது. இந்நிகழ்வில் மொத்தமாக 4 விருதுகளை DIMO பெற்றுக் கொண்டது. ஏழு ஆண்டுகளாக ஒருங்கிணைந்த அறிக்கையிடலில் தொடர்ந்து சிறந்து விளங்கும் நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக இவ்வாண்டு பிளாட்டினம் விருது அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த வகையில் இவ்விருதினைப் பெறும் இலங்கையின் முதலாவது நிறுவனமாக DIMO தனது பெயரை நிலைநாட்டியுள்ளது.

'Best Integrated Report Diversified Holdings Sector' (சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கை பன்முகப்படுத்தப்பட்ட துறை) இற்கான தங்க விருதையும் DIMO வெற்றி கொண்டது. அதன் வெற்றிப் பயணத்தில், 'Best Concise Integrated Report' (சிறந்த சுருக்கமான ஒருங்கிணைந்த அறிக்கை) எனும் விருதையும் DIMO வென்றதுடன், இலங்கையின் 'Five Excellent Integrated Reports' (ஐந்து சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கைகள்) மத்தியில் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டது.

# Samsung இலங்கையில் அறிமுகப்படுத்தும் Galaxy S22 தொடர்




Samsung தனது பிரத்தியோகமான ஊடகநிகழ்வொன்றில் இலங்கையில் அதன்மிகவும் பிரீமியம் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசியான Galaxy S22 series களை அறிமுகம் செய்தது.

Galaxy S22 ultra 5G ஆனது Note seriesஇன் நிகரற்ற சக்தி மற்றும் iconic SPen உடன் prograde camera மற்றும் S தொடரின்செயல்திறனுடன் இணைந்து premium smartphoneகளுக்கா புதியதரநிலையை அமைத்திருக்கிறது. இதன்நிலையான உணர்வு பூர்வமான வடிவமைப்பு குறிப்பிடத்தக்கதுடன் dynamic camera with intelligent image processing ஒவ்வொரு தருணத்தையும் மிகச்சிறந்ததாக்குகிறது.

இலங்கைக்கானSamsungஇன்முகாமைத்துவப்பணிப்பாளர் Kevin SungSU YOU கருத்து தெரிவிக்கையில், "Galaxy S22 தொடரின் அறிமுகத்துடன் புத்தாக்கமான விதிகளைமீண்டும் எழுதுவதுடன் Smartphoneஎன்னசெய்யமுடியும் என்பதற்கான புதியவரம்புகளை அமைக்கிறோம். முதல்முறையாக Galaxy S22 ultra 5G ஆனதுசிறந்தGalaxy Note மற்றும் S தொடர்களை ஒன்றிணைக்கிறது. Galaxy S22 ultra 5G SPen உடன்வருகிறது. மேம்பட்டNightography திறன்கள்மற்றும் ஒருநாளுக்கு மேல்நீடிக்கும் battery ஆயுளைக் கொண்டிருப்பதால் அதுமிகவும் சக்திவாய்ந்த ultra சாதனமாக உள்ளது. Galaxy S22 தொடர்சிறந்த உள்ளடக்கங்களைஉருவாக்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் மேம்பட்ட video பதிவுசெய்தல் editing மற்றும் share திறன்களைக் கொண்டுள்ளதால் அன்றாட நாட்களை சிறப்பாக்குகிறது"எனக்கூறினார்.



செலிங்கோ லைஃப் இலங்கையின் வங்கி, நிதி சேவைகள், காப்புறுதி பிரிவுகளில் பணியாற்றுவதற்கு மிகச்சிறந்த 10 இடங்களில் ஒன்றாக தொழில் பணியிடங்கள் கலாசாரம் பற்றிய விடயத்தில் உலக அங்கீகாரம் பெற்ற அமைப்பான Great Place to Work, My ஆல் தெரிவு செய்யப்பட்டுள்ளது. செலிங்கோ லைஃப் நிறைவேற்று பணிப்பாளர் மனித வள மற்றும் பயிற்சிப் பிரிவின் தலைமை நிர்வாகி டெவான் கூரே (மத்தி) மற்றும் செலிங்கோ லைஃப் பிரதிநிதிகளான (இடது புறமிருந்து) பொது முகாமையாளர் நிர்வாகம் திரு. ஜகத் அபயரத்ன, உதவிப் பொது முகாமையாளர் மனித வளம் திரு. சுதர்ஷன ஜயதிலக்க, பொது முகாமையாளர் சந்தைப்படுத்தல் திரு சமித்த ஹேமச்சந்திர மற்றும் சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர் முகவராண்மை நிர்வாகம் திரு. ர். யு. சுரவீர ஆகியோர் ' Great Place to Work' My இனால் வழங்கப்பட்ட விருதோடு காணப்படுகின்றனர்.

# பெற்றோருக்காக Meta இன்ஸ்டாகிராம் வழிகாட்டி



இலங்கையின் பெற்றோரை இன்ஸ்டாகிராம்(Instagram) இலுள்ள அம்சங்கள் தொடர்பாக அறிவூட்டிடும் பொருட்டும் இளைஞர்களுக்கு நேர்மறையானதும் பாதுகாப்பானதுமான தளத்தினை உருவாக்கிக் கொடுத்திடும் பொருட்டும் Meta புதிய இன்ஸ்டாகிராம் வழிகாட்டியினை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தவழிகாட்டியானது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பநிறுவனம் (ICTA), தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் (NYSC), சர்வோதய ஃபியூஷன், ஹிதவதி மற்றும் சிறுவர் பாதுகாப்புஅணி ஆகியோருடன் கூட்டிணைந்தே உருவாக்கப்பட்டது.

UNDP இற்குஇணங்க 4.6 மில்லியனுக்கும் அதிகமான இளம்பருவத்தினர் இலங்கையில் உள்ளனர். இதுநாட்டின் சனத்தொகையில் கால்வாசி பங்கினர் ஆகும். இன்ஸ்டாகிராம் மூலம்அவர்கள் தங்களை வெளிப்படுத்தவும், தமது ஆர்வங்களையும் நாட்டங்களையும் பகிர்ந்துகொள்ளும் வேறுபட்ட சமூகங்களுடன்தொடர்பு கொள்ளவும் உதவுவதனால் உலகம் முழுவதுமுள்ள இளைஞர்களின்மத்தியில் புகழ்பெற்றுள்ளது.

"பதின் வயதினர் தங்களது சுயதன்மையை வெளிப்படுத்தவும், அவர்களது வாழ்வினை பாதிக்கும் உண்மையான பிரச்சினைகளை பகிர்ந்துகொள்ளவும் Instagram ஒருபாதுகாப்பான மற்றும் ஆதரவு வழங்கிடும் இடமாக இருக்க வேண்டும் என நாம் விரும்புகிறோம்." என Metaவின் APAC இலுள்ள Instagram கொள்கைத் திட்ட முகாமையாளரான டாரா பேடி தெரிவித்தார்.

# வடபகுதியின் பொருளாதாரம் மற்றும் மக்களை உயர்த்தவிருக்கும் எசட்லைன் லீசிங்







எசட்லைன் லீசிங் கம்பனிலிமிடட் நிறுவனம் வடபகுதியில் தனதுசெயற்பாடுகளை மேலும் விஸ்தரிக்கும் முயற்சியின் ஓர் அங்கமாக அண்மையில் பல்வேறு திட்டங்களை அண்மையில் அறிமுகப்படுத்தியது.

டேவிட் பீரிஸ் குழுமநிறுவனத்தின் நிதிச் சேவை நிறுவனமான எசட்லைன் நிதிவழங்குதல் மற்றும் வசதி குறைந்த பொருளாதார வகுப்பினர்,சிறியமற்றும் நடுத்தரதொழில் முனைவோருக்கு நிதியுதவி வழங்குதல் போன்றவற்றால் நன்மதிப்பைப் பெற்றிருப்பதுடன், தனதுவர்த்தக நாமத்தையும் கட்டியெழுப்பியுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் இந்தமுயற்சிகள் வடமாகாணம் அங்குள்ளமக்களின் வாழ்வாதாரத்தைஉயர்த்திக் கொள்வதற்கும், அம்மாகாணத்தின் பொருளாதாரம் புத்துயிர் பெறுவதற்கும் வழிவகுக்கும் எனஅவர்கள் நம்புகிறார்கள்.

டேவிட் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட் நிறுவனத்தின் நீண்டகாலமுகவராகச் செயற்பட்டுவரும் யாழ்ப்பாணம்,சுண்ணாகம் சி.கே.மோட்டர்ஸ், குழுமத்தின் நிகழ்ச்சிநிரல் மற்றும் ஒருங்கிணைப்புக்கு அமைய எசட்லைன் லீசிங் கம்பனிலிமிடட் நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வணிக மற்றும் நிதிசேகரிப்பு நிலையமாக நியமிக்கப்பட்டுள்ளதுயாழ்ப்பாணம் பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்றசெயலமர்வில் யாழ்ப்பாணபொலிஸ் பிரிவைச் சேர்ந்த 16 பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்தபோக்குவரத்துப் பொலிஸார் பங்கேற்றுள்ளனர்.

டிஜிட்டல் வங்கியியல் பாவனையாளர்களுக்காக

பூஜாபிட்டிய நகரில் புதிய வடிவில்

எமது வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் வங்கித் துறையால் பலப்படுத்தப்பட்ட நவீன உயர்தர வங்கிச் சேவையை வழங்கிய பூஜாபிட்டிய வங்கிக் கிளையானது,

இன்று தொடக்கம் **இல. 72 ஏ, பொக்கவல வீதி, பூஜாபிட்டிய** எனும் முகவரியில் அமைந்துள்ள புதிய இடத்தில் மேலதிக வசதிகளுடன் திறந்து வைக்கப்படுகின்றது.

www.peoplesbank.lk

1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK

Pride of the Nation

AA- (lka) Fitch Rating, AAA- Brand Finance Rating

People's Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

# பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வடக்கு விஜயம்







வடக்கிற்கு விஜயம் மேற்கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ரஜமஹா விகாரையில் நடைபெற்ற சமய நிகழ்வில் கலந்து கொண்டார். யாழ்ப்பாணம் நாவற்குளி சமித்தி சுமண விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிக்குமார் தங்குமிடக் கட்டிடமும் பிரதமரினால் திறந்துவைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச பௌத்த மத்திநிலையம் மற்றும் ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச பௌத்த நிலையம் என்பவற்றுக்கும் சென்ற பிரதமர் சமய வழிபாடுகளில் ஈடுபட்டதோடு இபிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 50 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்தார்.யாழ் நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயம் மற்றும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டார். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் பிரதம குருக்கள், ரட்னசபாபதி குருக்கள் தலைமையில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கும் விஜயம் மேற்கொண்டார். யாழ்ப்பாணம், மட்டுவிலில் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்தியநிலையம் பிரதமரினால் நேற்று (20) திறந்து வைக்கப்பட்டது.








# தினகரனின் 90 ஆண்டு கால ஊடகப்பணி மென்மேலும் சிறப்படைவதற்கு ஆசி வேண்டி முகத்துவாரம் மிஸ்ப ஜெப மிஷனரி ஆலயத்தில் பிரார்த்தனை

தினகரன் பத்திரிகையின் 90 ஆம் ஆண்டு பிறந்ததினத்தை முன்னிட்டு கொழும்பு முகத்துவாரம் மிஸ்ப ஜெப மிஷனரி ஆலயத்தில் நேற்றுக்காலை விசேட பிரார்த்தனை நிகழ்வு நடைபெற்றது. முகத்துவாரம் மிஸ்ப ஜெப மிஷனரி ஆலயத்தின் தலைமைப் போதகரான வணக்கத்துக்குரிய ஜெயம் சாரங்கபாணி அவர்கள் தலைமையில் மேற்படி பிரார்த்தனை நிகழ்வு நடைபெற்றது.

தினகரன் பத்திரிகையின் 90 ஆண்டு கால வெற்றிப் பயணத்துக்காக இந்நிகழ்வில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டதுடன், தினகரனின் பணி மென்மேலும் ஓங்க வேண்டுமென்று அங்கு வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது. தினகரனுக்கும் அதன் ஊழியர்களுக்கும் ஆசி வேண்டி அங்கு பிரார்த்தனை நடத்தப்பட்டதுடன், தினகரனுக்கான விசேட விருது ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

தினகரனுக்கான பாராட்டு நிகழ்வில் தினகரன் நாளிதழ் மற்றும் வாரமஞ்சரி ஆகியவற்றின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு விருதைப் பெற்றுக் கொண்டார். தினகரனுக்கான விருதை பிரதம ஆசிரியர் செந்தில்வேலவரிடம் தலைமைப் போதகர் வண. ஜெயம் சாரங்கபாணி அவர்கள் வழங்கி வைத்தார்.

நேற்றைய விசேட நிகழ்வை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட ஊடக இணைப்பாளரான தேவதாஸ் சவரிமுத்து ஏற்பாடு செய்திருந்தார். முகத்துவாரம் மிஸ்ப ஜெப மிஷனரி ஆலயத்தின் விசுவாசிகள் பெருமளவானோர் நேற்றைய நிகழ்வில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.











(படங்கள்: எம்.நஸார்)




# மிளகு, கறுவா உற்பத்தியாளர்கள் அதிக வருமானம் உழைப்பு

## ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சர் ஜானக வக்கும்புர

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

நல்லாட்சி அரச காலத்தில் வியட்நாமில் உற்பத்தியான தரம் குறைந்த மிளகு, கறுவா மற்றும் சிறு தானியப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டதால் உள்நாட்டு விவசாயிகள் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டன ர்.

ஆனால் இன்று இந்த உற்பத்திகளில் நாம் தன்னிறைவு நிலை அடைந்து இவற்றுக்கு சந்தையில் அதிக விலை கிடைத்து வருவதால் உற்பத்தியாளர்களுக்கு அதிக வருமானம் கிடைத்து வருகிறது என ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சர் ஜானக வக்கும்புர தேரிவித்தார்.

இரத்தினபுரி கொலன்ன பிரதேசத்தில் நடைபெற்ற சமய நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற றுகையில் நல்லாட்சி அரச காலத்தல் எமது தேசிய கறுவா மற்றும் மிளகு உற்பத்திகள் பாரிய வீழ்ச்சியை எதிர் கொண்டன.

இதற்கு காரணம் உள்நாட்டு உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்காது வெளிநாட்டு உற்பத்திப் பொருட்கள் இறக்குமதி

செய்யப்பட்டமையாகும்

அத்துடன் நாம் அரசாங்கத்தை பொறுப்பேற்கும் போது ஒரு கிலோ மிளகுக்கு 400 ரூபாவும் ஒரு கிலோ கருவாவுக்கு 1600 ரூபாவும் உற்பத்தியாளர்களுக்கு கிடைத்தன. ஆனால் இன்று ஒரு கிலோ மிளகுக்கு 1600 ரூபாவும் ஒரு கிலோ கருவாவுக்கு 3500 ரூபாவும் உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

# ஆலயங்களுக்கு மின் பிறப்பாக்கிகள்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் தலவாக்கலை, பத்தனை,கொட்டகலை ஆகிய பகுதிகளில் காணப்படும் ஆலயங்களுக்கு மின்பிறப்பாக்கும் இயந்திரங்கள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதப்பாண்டி ரமேஸ்வரனால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வுகள் (20) நேற்று தலவாக்கலை லிந்துலை நகர சபை மண்டபத்திலும் பத்தனை நகர கோவில் மண்டபத்திலும் கொட்டகலை கொமர்ஷல் தர்மபுரம் கோவில் மண்டபத்திலும் இடம்பெற்றன.

இதன்போது நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதப்பாண்டி ரமேஸ்வரன், கொட்டகலை பிரதேசசபைத் தலைவர் ராஜமணி பிரசாந்த், தலவாக்கலை லிந்துலை நகர சபைத் தலைவர் பாரதிதாஸன், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் பி.சக்திவேல் மற்றும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பிரத்யேக செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மலையக மக்கள் முன்னணியின் மகளிர் தின விழா

(ஹற்றன் சுழற்சி நிருபர்)





பால்நிலை சமத்துவத்தை உறுதி செய்வோம் என்ற தொனிப்பொருளின் கீழ் மலையக மக்கள் முன்னணியின் மகளிர் தின விழா நேற்று காலை பதுளை தபாற் கேட்போர் கூடத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் எஸ்.விஜயசந்திரனின் மேற்பார்வையின் கீழ் மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக மகளிர் முன்னணி ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந்த விழா மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த விழாவில் ஆரம்ப உரையை அம்பகமுவ பிரதேச சபையின் உறுப்பினரும், மலையக மகளிர் முன்னணியின் பிரதி தலைவியுமான திருமதி. சுவர்ணலதா ஆற்றியதோடு, சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்ட பேராதெனிய பல்கலைக்கழகத்தின் முன்னாள் உதவி விரிவுரையாளர் செல்வி. குமாரசாமி தயாளனி, சிரேஷ்ட விரிவுரையாளரும், பிரபல எழுத்தாளருமான திருமதி.ராணி சீதரன் ஆகியோர் சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார்கள். கட்சியின் நிதி செயலாளர் புஷ்பா விஷ்வநாதன், கட்சியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.ராஜாராம் மற்றும் கட்சியின் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர். குறித்த நிகழ்வின் போது மகளிரது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றதோடு, பதுளை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பெண் சாதனையாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி அவர்களின் சேவைகளை பாராட்டி கௌரவிப்பு நிகழ்வும், இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# எஹலியகொடையில் 51 டெங்கு நோயாளர்கள்

எஹலியகொடை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த வருடத்தை விட இந்த வருடம் டெங்கு காய்ச்சல் நோய் துரிதமாக அதிகரித்துள்ளதாக நிர்வாக பொது சுகாதார பரிசோதகர் அஜித் ஹத்னாபிடிய தெரிவித்தார்.

2021 ஆம் வருடத்தில் 37 டெங்கு நோயாளர்கள் இப்பகுதியில் இனம் காணப்பட்டதாகவும் இந்த வருடத்தில் கடந்த மூன்று மாத காலத்தில் 51 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக எஹலியகொடை பொது சுகாதார வைத்திய அதிகாரி டி. எல். எம். குமாரசிரியின் அறிவுறுத்தலைகிணங்க இந்தப் பிரதேசத்தில் உள்ள வீடுகளை பரிசோதிக்கும் நிகழ்வுகள் தொடர்ந்து இடம் பெறுவதாகவும் தெரிவித்த அவர் எஹலியகொடைநகரத்தின் பொது சுகாதார பரிசோதகர் என்.எம். குமார உட்பட பொது சுகாதார பரிசோதகர்கள் கடந்த மாதங்களில் இப்பகுதியில் மேற்கொண்ட பரிசோதனைகளின் போது டெங்கு நுளம்புகள் உருவாகும் இடங்களை வைத்திருந்த 270 நபர்களுக்கு முதற் தடவையாக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

# பேராதனை தேசிய தாவரவியற் பூங்காவில் தாவரவியல் அருங்காட்சியகம் நிறுவப்படும்

## பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஷேலோமி கிறிஷ்ணராஜா

(அக்குறணை குறூப் நிருபர்)

200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு, பேராதனை தேசிய தாவரவியற் பூங்காவில் தாவரவியல் அருங்காட்சியகம் ஒன்று நிறுவுவதற்கு தேசிய தாவரவியற் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஷேலோமி கிறிஷ்ணராஜா தெரிவித்தார்.

பேராதனைப தேசிய தாவரவியற் பூங்கா அமைக்கப்பட்டு 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு பல்வேறு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அது தொடர்பாக கண்டியில் வைத்து கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

பேராதனைப் பூங்கா வளவில் அமைக்கப்பட உள்ள மேற்படி அருங்காட்சியகம் மூலம் இந் நாட்டின் தாவரங்கள் பற்றிய விஞ்ஞான ரீதியான தகவல்கள் மற்றும் சர்வதேச தாவரவியல் தொடர்பான தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

ஆங்கிலேயரான அலெக்சாண்டர் மூன் என்பவரால் 1821 ம் ஆண்டு அமைக்கப்பட்ட ப் இப் பூங்காவிற்கு தற்போது 200 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. மேற்படி பூங்கா பற்றிய முழு விபரம் அடங்கிய நூல் ஒன்றும் வெளியிடப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஞாபகார்த்த முத்திரை மற்றும் தபால் தளை என்பனவும் வெளியிடப்பட உள்ளன.

மகாவலி ஆற்றுக்கரையில் 147 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இப்பூங்காவில் இலங்கைக்கு மட்டும் உரித்தான அனைத்து தாவரங்களும் நடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அதே நேரம் உலகில் அருமையான தாவரங்கள் சிலவும் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.


கமத்தொழில் அமைச்சு

விலைமனுக்கோரல் (IFB)

தனிப்பாவனைக்கான 7000 கைக்கணினிகளை வழங்கல்

கமத்தொழில் அமைச்சின் சார்பாக, அமைச்சின் கொள்முதல் குழுவின் தலைவரினால், தனிப்பாவனைக்கான 7000 கைக்கணினிகளை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

மனு கோரல் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய செயற்படுத்தப்படும்.

இதற்காக ஆர்வம் காட்டும் விண்ணப்பதாரர்களுக்கு மேலதிக விபரங்களை கொள்முதல் பிரிவு, "கொவிஜன மந்திர" இராஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்லையில் பெற்றுக்கொள்ள முடிவதுடன் 2022.03.21 ஆம் திகதி முதல் 2022.04.08 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை. (தொ.பே. / தொ.நகல் – 011-2887406) மூலம் முன் தகுதி சோதனை அழைப்பிற்கான படிவங்களை பரீட்சித்துக்கொள்ள முடியும்.

1. கொண்டிருக்கவேண்டிய தகைமைகள் பின்வருமாறு:
   a. கடந்த 5 (ஐந்து) ஆண்டுகளில் குறைந்தபட்ச சராசரி வருடாந்த விற்பனை அளவு LKR 750 மில்லியனாக இருத்தல்.
   b. உற்பத்தியாளர் குறைந்தபட்சம் 10 வருட அனுபவம் மற்றும் தனிப்பாவனைக்கான மடிக் கணினிகள் தொடர்பாக குறைந்தபட்சம் 5 வருட அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
   c. உற்பத்தியாளரின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் ஒரே விற்பனை குறியீட்டில் தனிப்பாவனைக்கான மடிக் கணினிகள் தயாரிப்பில் மூன்று (3) வருட அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
   d. 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்த இலங்கையின் உள்ளூர் முகவர் சான்றிதழினைக் (PCA 03) கொண்டிருத்தல்
2. ஆர்வத்தினை கொண்டுள்ள மனுதாரர்கள் 2022.03.21 முதல் 2022.04.08 ஆம் திகதி வரை மற்றும் ரூ.35,000.00 (முப்பத்து ஐயாயிரம் ரூபாய்) மீள் செலுத்தப்படாத கட்டணத்தை செலுத்தி எழுத்து மூல விண்ணப்பத்தை இல.80/5, கமத்தொழில் அமைச்சு, "கொவிஜன மந்திர" இராஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்லையில் சிரேஷ்ட உதவி பதிவாளரிடம் (வழங்கல்), கையளிப்பதன் மூலம் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட முழுமையான மனு ஆவணத்தொகுப்பை பெற்றுக்கொள்ளலாம். கட்டண முறை பணமாக செலுத்தப்பட வேண்டும்.
3. மனுக்கள் 2022.04.11 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக, பின்வரும் முகவரிக்கு, இல.80/5, கமத்தொழில் அமைச்சு, "கொவிஜன மந்திர" இராஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்லையில் சிரேஷ்ட உதவி பதிவாளர், கொள்முதல் பிரிவுக்கு அனுப்ப வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கமத்தொழில் அமைச்சு, கொள்முதல் பிரிவு, பத்தரமுல்லை எனும் முகவரியில் மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
4. மனுக்கள் 2022.07.11 ஆம் திகதி வரை அல்லது நீடிக்கப்பட்ட காலம் வரை செல்லுபடியாகும். (மனுக்கள் முடிவதற்காக நிர்ணயிக்கப்பட்ட திகதியிலிருந்து 91 நாட்கள்)
5. அனைத்து மனுக்களும் ஒரு மனு பாதுகாப்புடன் காணப்பட வேண்டும் :
   - மனு ஆவணத்தில் பிரிவு IV இல் சேர்க்கப்பட்டுள்ள படிவம்
   - கமத்தொழில் அமைச்சு, செயலாளரின் பேரில்
   - ரூ.5,000,000/= தொகையாக காணப்படல் வேண்டும்
   - 2022.08.08 செல்லுபடியாகும்
   - மனுத் தரவின் பிரிவு 20.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு முகவர்களால் வழங்கப்பட்டது.
6. முன் மனுக் கூட்டம் 2022.04.01 ஆம் திகதி 10.00 மணிக்கு 80/5, "கொவிஜன மந்திரய", இராஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்லையில் நடைபெறும்.

தலைவர்,
அமைச்சின் கொள்முதல் குழு
கமத்தொழில் அமைச்சு



திகதி 18.03.2022 வியாழக்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4710 — ரூ. 24,114,770.00
K 6 3 5 4 1 8 — ரூ. 10,000,000.00

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1058 — ரூ. 5,049,880.00
ரூ. 242,613,306.00
ரூ. 10,000,000.00
S 11 05 38 54 56 — ரூ. 10,000,000.00

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 740 — ரூ. 4,596,160.00
W 03 13 69 81 — ரூ. 103,005,479.60

National Lotteries Board

திகதி 19.03.2022 சனிக்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 4711 — ரூ. 11,779,940.00
D 0 9 1 9 5 4 — ரூ. 11,152,653.00

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1059 — ரூ. 4,533,820.00
ரூ. 242,914,102.00
ரூ. 10,000,000.00
O 12 09 20 72 75 — ரூ. 10,000,000.00

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 741 — ரூ. 3,413,160.00
E 44 48 50 68 — ரூ. 103,249,518.40

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1225 — ரூ. 2,253,580.00
வெற்றி இலக்கங்கள் 9 1 4 6 2 4 — ரூ. 10,671,114.80

National Lotteries Board

## சீனா வழங்கிய...

சீனா ஆதரவை வழங்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.சீனத் தூதுவர் குய் சென்ஹோங்குடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அண்மையில் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.இதன் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சீன சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் தற்போதைய பேச்சுவார்த்தைகள் குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் 7வது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இலங்கையில் உள்ள அந்தந்த நிறுவனங்களின் ஆதரவுடன் விரைவில் ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பின் போது, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டதன் 65ஆவது ஆண்டு நிறைவையும், 1952ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கிடையிலான ரப்பர்அரிசி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் 70ஆவது ஆண்டு நிறைவையும் நினைவுகூரும் வகையில் சீன அதிகாரிகளால் வெளியிடப்பட்ட முதல் நாள் அட்டைப்படம் சீனத் தூதுவரால் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

## தொடர்ந்தும்...

பின்னர் 400 கிராம் பால்மா பக்கெற்றின் விலை 790 ரூபாவாகவும் உயர்வடைந்துள்ளது.

இவ்வாறு பால்மா விலை அதிகரித்துள்ளமையால் இனி ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிசாலைகளில் பால் தேநீர் விற்கப்பட மாட்டாது என்று சிற்றுண்டி உரிமையாளர் சங்கத்தின் இணைப்பாளர் அசேல சம்பத் நேற்றைய தினம் (20) அறிவித்துள்ளார்.

இதேவேளை, டொலர் நெருக்கடியைக் காரணமாகக் காண்பித்து சமையல் எரிவாயுவின் விலைகளையும் அதிகரிப்பதற்கு லிட்ரோ நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது. தற்போது 12.5 கிலோ கிராம் எடையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர் 2000 ரூபா நஷ்டத்திலேயே விற்கப்படுவதாகவும் டொலர் பெறுமதி அதிகரித்துள்ளமையால் தொடர்ந்தும் நஷ்டத்தில் எரிவாயுவை விநியோகிக்க முடியாது என்றும் லிட்ரோ நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. அதற்கமைய 12.5 கிலோ கிராம் எரிவாயுவின் விலை 3,500 ரூபா வரை உயர்வடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 40 ஆயிரம் மெற். தொன்....

பெற்றோலியத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய கடன் உதவியின் கீழ் கிடைக்கும் முதலாவது டீசல் தொகை இதுவென்றும் இதற்கு முன்னர் இந்திய கடன் உதவியின் கீழ் விமானங்களுக்கான எரிபொருளே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பெற்றோலியத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை கடந்த 14ம் திகதி முதல் கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் நங்கூரமிடப்பட்டிருந்த டீசல் மற்றும் விமானங்களுக்கான எரிபொருளைக் கொண்ட கப்பலுக்கான தாமதக்கட்டணமாக 90 ஆயிரம் டொலரை வழங்க வேண்டியுள்ளது என்றும் அதற்கிணங்க நாளொன்றுக்கு 18 ஆயிரம் டொலர் அதற்கு வழங்க வேண்டியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சம்பந்தப்பட்ட டொலரை விரைவாக வழங்கி கப்பலிலுள்ள எரிபொருளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கி உயரதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். அந்தக் கபப்லிலுள்ள எரிபொருளுக்காக 42 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்க வேண்டியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ)

## மூன்று சட்டமூலங்கள்...

சட்டமாக்கப்பட்டு இலங்கையின் நீதித்துறையில் இணைக்கப்பட்டுள்ளன. குறித்த சட்டங்கள் நேற்று முதல் சட்டமாக நடைமுறைப்படுத்தப்படுவதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தனிப்பட்ட தரவுகளை பாதுகாப்பது தொடர்பான தரவுத்தள வழங்குநர்களின் உரிமைகளை அடையாளம் கண்டு அதனை வலுப்படுத்தும் நோக்கில் தனியார் தரவு பாதுகாப்பு சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

அத்துடன் தொழிலாளர் இழப்பீட்டு திருத்தச் சட்டத்தின் ஊடாக 550,000 ரூபாவாக காணப்பட்ட தொழிலாளர் இழப்பீட்டு தொகை 20 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரையில் வேலை நேரத்தில் ஏற்படும் விபத்துகளுக்கு மாத்திரம் இழப்பீடு வழங்கப்பட்டது.

அது தற்போது பணிக்கும் செல்லும் போது அல்லது திரும்பும் போது ஏற்படுத்தும் விபத்துகளுக்கும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கல்வி அமைச்சுக்குத்....

ஒருவர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க பாடசாலை புத்தகங்கள் உட்பட அனைத்து அச்சுப் பதிப்பு நடவடிக்கைகளுக்கான கடதாசிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் கடதாசி தட்டுப்பாடு காரணமாக மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் தரம் 9, 10, 11 வகுப்புகளுக்கான பரீட்சைகளை ஒத்திப் போடுவதற்கு மாகாண கல்வித் திணைக்களம் அண்மையில் தீர்மானித்திருந்தது. பரீட்சைக்கான வினாத்தாள்களை அச்சிடுவதற்கு கடதாசி தட்டுப்பாடு மற்றும் அதற்கான மூலப்பொருட்கள் கட்டுப்பாடு நிலவிய காரணத்தினாலேயே அந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறாயினும் மேற்படி வகுப்புகளுக்கான பரீட்சைகளை தாமதமின்றி இம்மாதம் 29ஆம் திகதி நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேல் மாகாண கல்விப் பணிப்பாளர் ஸ்ரீலால் நோனிஸ் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று சப்ரகமுவ மாகாணத்திலும் வினாத்தாள்களை அச்சிடுவதற்கு கடதாசி தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் பரீட்சைகளை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை 6,7,8ஆம் வகுப்புகளுக்கான முதலாம் தவணைப் பரீட்சை இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## சஜித் நினைப்பது...

உப தலைவர் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

சுதந்திர கட்சியின் கம்பஹா மாவட்ட மாநாட்டிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இம்மாநாட்டில் தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

கடந்த வாரம் பாரிய ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, உடனடியாக ஜனாதிபதி தேர்தலை நடத்துமாறு கோரினார்.

அவ்வாறு செய்ய முடியாது. அவர் நினைக்கும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியாகவும் முடியாது, அவருக்கு இலங்கையின் அரசியலமைப்பு ஏற்பாடுகள் குறித்து ஆரம்பத்திலிருந்து தெளிவுபடுத்த வேண்டும். ரணசிங்க பிரேமதாச கொல்லப்பட்டதன் பின்னர் எஞ்சியிருந்த அவரது பதவி காலத்திற்கு பாராளுமன்றத்தின் ஊடாகவே டிகிரி பண்டார விஜேதுங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். எனவே ஜனாதிபதியொருவர் அவரது பதவிக் காலத்தில் உயிரிழந்தாலோ அல்லது தானாக பதவி விலகினாலோ அல்லது நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றப்பட்டாலோ பாராளுமன்றத்தின் ஊடாகவே அடுத்த ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார். அதனை விடுத்து தற்போது ஜனாதிபதி தேர்தலை நடத்துமாறு வீதிக்கிறங்கி போராடுவது பிரயோசனமற்றது.

## 12 கோடி ரூபா...

தங்கத்தை கொண்டுசென்ற மேற்படி சந்தேகநபரை பயங்கரவாத விசாரணைப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் வெல்லம்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 38வயதுடையவர் என்றும் அவர் ஆறு கிலோவுக்கும் அதிகமான தங்க ஆபரணங்களை தம்வசம் வைத்திருந்ததாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

துபாய் நாட்டிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ள மேற்படி தங்கத்தை யாழ்ப்பாணத்திலிருந்து சட்டவிரோதமாக படகு மூலம் இந்தியாவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக விசாரணைகளிலிருந்து தெரிய வருவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் நீண்டகாலமாக இவ்வாறான வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவதாக தகவல் கிடைத்துள்ள நிலையில் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவல்களுக்கமைய மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.(ஸ)

## மரக்கறி விலையில்...

தட்டுப்பாடுமே மரக்கறிகளின் விலை வீழ்ச்சி மற்றும் விற்பனையின்மைக்கு முக்கிய காரணம் என விவசாயிகள் கூறுகின்றனர்.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு நேற்று காலை யாழ்ப்பாணத்தில் இருந்து பெருந்தொகையான மரக்கறிகள் வந்துள்ளதாக அங்குள்ள வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் ஒவ்வொரு மரக்கறியினதும் மொத்த விலை கிலோ கிராமுக்கு ரூ.200ஐ தாண்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## SLPP மே தின கூட்டம் ...

பதிவு செய்யப்பட்டுள்ளது. அரசுக்கு மக்கள் ஆதரவு உள்ளது என்பதைக் காட்டும் விதமாக மாபெரும் கூட்டத்தைத் திரட்டவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். குறித்த மே தின கூட்டத்துடன் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## சவால்களை கண்டு...

வேண்டியுள்ளது என குறிப்பிட்டுள்ள அவர், எவ்வாறாயினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவிப்பது போல நாம் சவால்கள் வரும்போது நாட்டை விட்டு ஓட மாட்டோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.இத்தகைய சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது எமக்குப் புதிதல்ல. யுத்த காலத்திலும் எதிர்க்கட்சியினர் அரசாங்கத்துக்கு எதிராக இவ்வாறே செயற்பட்டனர். நாட்டின் தற்போதைய சூழ்நிலையிலும் அவர்கள் அதைத் தான் இன்றும் செய்கின்றனர். எனினும் நாம் அவர்களை குற்றம் கூறப் போவதில்லை.குறைபாடுகள் உள்ளன. அதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் நாடு தற்போது இந்த அளவிலாவது பயணிப்பதற்கு தற்போதைய அரசாங்கமே காரணம். இல்லாவிட்டால் நாடு அதளபாதாளத்திற்கு சென்றிருக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## புனரமைக்கப்படவுள்ள...

சீமெந்து தொழிற்சாலை 1990 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக மூடப்பட்டது.

இத்தொழிற்சாலை 728 ஏக்கர் பரப்பளவைக் கொண்டிருந்தாலும், தற்போது அதன் பெரும்பாலான பகுதிகள் குடியிருப்பு பகுதிகளாக மாறியுள்ளன. 2021 பெப்ரவரி 08 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையின் பயன்படுத்தக்கூடிய கட்டிடங்களை தவிர ஏனைய கட்டிடங்களை இடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

எனினும் 80 வீதமான கட்டிடங்களை புனரமைத்து பயன்படுத்த முடியும் என பிரதமரின் இந்த கண்காணிப்பு விஜயத்தின் போது தெரிய வந்துள்ளது.

அதற்கமைய காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை புனரமைக்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

பிரதமரின் இந்த கண்காணிப்பு விஜயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் காமினி ஏகநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

## ஒரு கப் பால்...

வளங்கள் இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும், உள்ளூர் பால்மா உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பக்கெட் ஒன்றின் விலையை 250 ஆக அதிகரிக்க பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) நடவடிக்கை எடுத்தது.இதன்படி, 400 கிராம் பால்மா பக்கெட் ஒன்றின் புதிய விலை 790 ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது.

## சித்திரை புதுவருட...

அமைச்சின் காரியாலயத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அத்தியாவசிய உணவு பொருட்கள் மற்றும் மருந்து பொருட்களை தடையின்றி பெற்றுக்கொள்ள இந்திய அரசாங்கத்துடன் கடனுதவி திட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ்வொப்பந்தத்தை செயற்படுத்தும் பொறுப்பு வர்த்தகத்துறை அமைச்சுக்கும், நிதியமைச்சுக்கும் மற்றும் தொடர்புடைய அரச நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.வர்த்தகத்துறை அமைச்சு இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் இவ் வருடத்திற்கு தேவையான அத்தியாவசிய மருந்து பொருட்கள் மற்றும் சீமெந்து, ஆடைகள், கைத்தொழில் நடவடிக்கைக்கு தேவையான மூலப்பொருட்கள், உரம் மற்றும் விலங்கு உணவு ஆகியவற்றை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

## மின் கட்டண அதிகரிப்பு ...

உரிய யோசனைகளை மின்சார சபை இரண்டு தினங்களுக்கு முன் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவுககு கையளித்துள்ளது. அந்த யோசனைகள் தற்போது ஆணைக்குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் நாணயத்தின் பெறுமதி குறைந்துவரும் நிலையில் கையிருப்பு தொடர்பில் சுதந்திரமான தீர்மானத்தை மேற்கொள்ள மத்திய வங்கி மேற்கொண்ட தீர்மானத்தோடுஏற்பட்டுள்ளமாற்றம்காரணமாக மேலும் சில திருத்தங்களை அதில் உள்ளடக்குவதற்கு மின்சார சபை தீர்மானித்துள்ளது. அதற்கிணங்க மின்சார சபையினால் தயாரிக்கப்படும் திருத்த யோசனைகள் இந்தவாரத்தில் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு கிடைக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## போலி கடவுச்சீட்டில்...

குறித்த பெண் 64 வயதுடைய பத்தரமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். இவர் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீர பிணைகளில் விடுதலை செய்யப்பட்டார்.

## முதல்வர் ஸ்டாலினை சந்திக்க... 02ஆம் பக்க தொடர்...

என தெரிவித்தனர். தமிழக மீனவர்கள் இழுவலை மீன்பிடி படகுகளை இலங்கை கடல் பகுதியில் பயன்படுத்தி மீன் பிடிப்பதால் சிறு மீன்குஞ்சுகள் முதல் பிடிக்கப்பட்டு மீன் வளம் அழிக்கப்படுகிறது. அதேநேரம், இலங்கை தமிழ் மீனவர்கள் பாரம்பரிய முறையில் செவில் வலை, தூண்டில் மீன்பிடிப்பில் மட்டுமே ஈடுபடுகின்றனர்.

இதனால் மீன்வளம் பாதுகாக்கப்படுகிறது. தமிழக மீனவர்கள் இரட்டை மடி, சுருக்கு மடிகளை பயன்படுத்தாமல் தங்களைப்போல் மீன்பிடி முறையை பயன்படுத்தினால் நிச்சயம் தடுக்க மாட்டோம், என்றனர். இதுகுறித்து தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு மனு அனுப்பினர். மேலும், ராமநாதபுரம் மாவட்ட நாட்டுப்படகு மீனவர்கள் நல உரிமைச்சங்கத்தினர் மூலம் அவர்களின் கடிதத்தை ராமநாதபுரம் கலெக்டர் சங்கர்லால் குமாவத்திடம் வழங்கி உள்ளனர்.அதில் இது தொடர்பாக பேச முதல்வர் ஸ்டாலினிடம் அனுமதி பெற்றுத்தர வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதுகுறித்து ராமநாதபுரம் மீன்வளத்துறை மூலம் முதல்வர் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 3500 மெற் தொன்... 02ஆம் பக்க தொடர்...

கப்பலுக்கு கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் அதனை தரையிறக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதில் இதுவரையில் 1,000 மெற்றிக் தொன் எரிவாயு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. லிட்ரோ நிறுவனத்தினால் நேற்று முன்தினம் 120,000 எரிவாயு கொள்கலன்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டன.

அத்துடன் நேற்றும் இன்றும் விநியோக நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக லிட்ரோ நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். குறித்த கப்பலில் உள்ள எரிவாயு எதிர் வரும் 2 நாட்களுக்கு போதுமானதான தெனவும் நாளை நாட்டை வந்தடையவுள்ள கப்பலில் உள்ள எரிவாயுவை உடனடியாக சந்தைக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் நேற்றைய தினமும் எரிவாயுவுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தமையை அவதானிக்க கூடியதாக இருந்தது.

## மோடியின் இலங்கை... 02ஆம் பக்க தொடர்...

மற்றும் பொருளாதார கூட்டுறவிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு (பிம்ஸ்டெக்) மாநாடு மார்ச் 30 ஆம் திகதி இலங்கையில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் கலந்துக்கொள்வதற்காக இந்திய உட்பட பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கொழும்பிற்கு வருகை தரவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை இலங்கை முன்னெடுத்துள்ளதுடன் உத்தியோகபூர்வ அழைப்பிதழ்களையும் கையளித்துள்ளன.

குறிப்பாக அண்மையில் இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த வெளிவிகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ், இந்திய வெளிவிகாரத்துறை அமைச்சர் எஸ்.ஜெயசங்கருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது பிம்ஸ்டெக் மாநாடு குறித்தும், இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பங்குப்பற்றல் தொடர்பில் கலந்துரையாடி உத்தியோகப் பூர்வமாக அழைப்பிதழ் வழங்கப்பட்டது. பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளான பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் தலைவர்களும் மாநாட்டில் கலந்துக்கொள்ள உள்ளனர்.

## உக்ரைன் துறைமுகம் ரஷ்ய... 02ஆம் பக்க தொடர்...

போரிட்டு வருகின்றனர். வரைபடத்தில் இருந்தே மொத்தமாக அழிக்கப்பட்ட நிலையில் சிதைந்துள்ளது மரியுபோல் நகரம்.இதனை தொடர்ந்து அடுக்குமாடி குடியிருப்புகளில் இருந்து, ரஷ்ய தாக்குதலில் சிக்கி பலியானவர்களை இதுவரை மீட்க முடியாமல் உறவினர்களும் அதிகாரிகளும் தவித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த இரு வாரங்களுக்கும் மேலாக சுமார் 400,000 மக்கள் வெளியேற முடியாமல் சிக்கியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. மின்சாரம், தண்ணீர், உணவு என அடிப்படை தேவைகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தரப்பு தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, மரியுபோல் நகரில் தாக்குதலை தீவிரப்படுத்த இருப்பதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிரேஷ்ட ஊடகவியலாளர்... 02ஆம் பக்க தொடர்...

தமிழ் தந்தி, மெட்ரோ, தினப்புயல், பீபீசி தமிழ் வானொலி, தமிழன் போன்ற ஊடகங்களில் ஊடகவியலாளராக கடமையாற்றினார். இறக்கும் வரை அவர் பனங்காடு தினகரன் நிருபராக கடமையாற்றினார். மனைவி இ.கௌரி மற்றும் பிள்ளைகளான ந.கரன் ( ஊடகவியலாளர்) ந.மிதுனாளினி ஆகியோருக்கு தினகரன் அனுதாபங்கங்களை தெரிவிக்கின்றது.

## துறைமுக பிரவேச வீதி... 02ஆம் பக்க தொடர்...

மேல் நிர்மாணிக்கப்படும் துறைமுக பிரவேச வீதி தொடர்பான நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கோபுரங்கள் மேல் நிர்மாணிக்கப்படும் துறைமுக பிரவேச வீதி பணிகள் முதல் இரண்டு ஆண்டுகளில், மெதுவான இடம்பெற்றதால் அதன் நிர்மாண முன்னேற்றம் 7% வரை குறைந்து இருந்தது. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் முழுமையான நிர்மாண முன்னேற்றம் 32% ஆக இருக்கும் என்றும், இலங்கையில் முதன்முறையாகப் பயன்படுத்தப்படும் புதிய தொழில்நுட்பமான பாலத்தின் பாகங்களை இணைக்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெறுவதாக திட்டப் பணிப்பாளர் கே.டபிள்யு. கண்டம்பி அமைச்சருக்குத் தெரிவித்தார்.

கொழும்பு வர்த்தக நகரின் நுழைவாயிலில் நிலவும் கடும் வாகன நெரிசலுக்கு நிரந்தர தீர்வாக இங்குருகடே சந்தியிலிருந்து புதிய துறைமுக நகரம் வரையிலான கோபுரங்களுக்கு மேல் புதிய அதிவேக நெடுஞ்சாலையை அமைக்க நெடுஞ்சாலைகள் அமைச்சும் வீதி அபிவிருத்தி அதிகார சபையும் திட்டமிட்டுள்ளன. சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் கோபுரங்கள் மீது அமைக்கப்பட்டுள்ளது இந்த வீதியின் விசேடமாகும்.

கோபுரங்களின் மீது செல்லும் துறைமுக பிரவேச வீதியின் தூரம் 5.3 கி.மீ. களாகும். நான்குவழிப்பாதையாக நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இங்குருகடே சந்தியிலிருந்து ஆரம்பமாகி காலி முகத்திடல் துறைமுக நகரத்தில் முடிவடையும் இந்த வீதியின் நிர்மாணப் பணிகளுக்கு 28,002 மில்லியன் ரூபா செலவாகும்.

## அபிவிருத்தி....

நாம் உங்களை மறக்கமாட்டோம், கைவிடமாட்டோம் என தமிழில் தெரிவித்தார்.

வடக்கிற்கு விஜயம் மேற்கொண்ட பிரதமர் நேற்று யாழ்ப்பாணம், மட்டுவிலில் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்தியநிலையத்தை திறந்து வைத்தார். இங்கு உரையாற்றிய பிரதமர், அந்தக் காலத்தில் யாழ்ப்பாணம் எங்களுக்கு வெகு தொலைவில் இல்லை. மிக நெருக்கமாக உணர்ந்தோம். யுத்தத்திற்கு முடிவு கட்டி மீண்டும் அந்த நிலையை உருவாக்க அடித்தளமிட்டதாகவும் குறிப்பிட்டார்.

உங்கள் அனைவரையும் சந்திப்பதில் சந்தோஷம் என தமிழில் உரையாற்றிய பிரதமர் மேலும் குறிப்பிடுகையில்,

அவசரகாலச் சட்டங்களை நீக்கி நாம் ஏற்படுத்திய மாகாண சபை நல்லாட்சியுடன் கலைக்கப்பட்டது. நல்லாட்சி காலத்தில் ஒரு வீதி அபிவிருத்தியோ அல்லது மின்சார திட்டமோ யாழ்ப்பாணத்திற்கு கிடைக்கவில்லை. நாட்டிற்கும் கிடைக்கவில்லை என்றும் சுட்டிக் காட்டினார்.

புதிய மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டிருந்தால் யாழ்ப்பாண மக்கள் இன்று இருளில் மூழ்கியிருக்க மாட்டார்கள் என்று தெரிவித்த பிரதமர், ஆனால் அந்த நல்லிணக்கத் திட்டத்திற்காக பில்லியன்கள் செலவிடப்பட்டன என்றார்.

சமாதானம் பற்றிய பாடலுக்கு பில்லியன்கள் செலவழிக்கப்பட்டன. ஆனால் யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு குடிநீர் குழாய் வழங்கப்படவில்லை.

நாங்கள் செய்து கொண்டிருந்த பணி 2015ல் நிறுத்தப்பட்டது. 2019ஆம் ஆண்டு மீண்டும் இந்த நாட்டைக் கைப்பற்றிய போது, நல்லாட்சியின் மூலம் பின்னோக்கிச் சென்ற நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப திட்டமிட்டோம் என்றும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தின் மூன்று யுகங்களை நான் கண்டிருக்கிறேன். 1970களில் யாழ்ப்பாணம் எப்படி இருந்தது என்பது எனக்கு நினைவிருக்கிறது. அப்போது யாழ் மக்களுக்கும் கொழும்பு மக்களுக்கும் இடையே சிறந்த தொடர்பு இருந்தது. யாழ்ப்பாணத்தில் சிங்கள முதலாளிமார் இருந்தார்கள்.

இங்கிருந்த பெரும்பாலான தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அப்போது கொழும்பில் இருந்தனர். இன்றும் அப்படித்தான். யாழ்ப்பாணத்திலிருந்து ரயிலிலே கொழும்பு வந்துசென்றனர்.

கொழும்பில் பணிபுரியும் அரச ஊழியர்கள் வெள்ளிக்கிழமை மாலை ரயிலில் ஏறி காலையில் யாழ்ப்பாணத்தை சென்றடைவர். அது ஒரு காலம். அந்தக் காலத்தில் யாழ்ப்பாணம் எங்களுக்கு வெகு தொலைவில் இல்லை. மிக நெருக்கமாக உணர்ந்தோம்.

அந்த சகாப்தம் 1980க்குப் பின்னர் திடீரென மறைந்தது. யாழ்ப்பாணம் செல்லும் ரயில் பாதையை உடைத்தனர். தெற்கிலிருந்து வடக்கு நோக்கியும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும் செல்ல வேண்டிய யாழ்தேவி நின்றது. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பண்பாட்டுப் பாலமாக யாழ்தேவியைப் பார்க்கிறேன்.

வடக்கு மக்கள் சுதந்திரத்தை இழக்க ஆரம்பித்தனர். வடக்கில் விவசாயி நெல் வயலுக்குச் செல்ல முடியவில்லை. மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியவில்லை. வடக்கு பதுங்கு குழியாக மாறியது.

சொந்த மண்ணில் சுதந்திரமாக வாழும் உரிமையை இழந்தனர். எந்த நேரத்திலும் தமது சொந்த வீடுகளைவிட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை உருவானது.

## மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு... (04ஆம் பக்கத் தொடர்)

1977 தொடக்கம் 1988 பெப்ரவரி வரை வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பயங்கரவாத நடவடிக்கை காரணமாக மரணமடைந்த பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 362 என்பதோடு, அங்கவீனமானவர்களின் எண்ணிக்கை 37 ஆகும். பொலிஸ் சரித்திரத்திலேயே துக்ககரமான சம்பவம் நடைபெற்றது 1990 ஜூன் 11 ஆம் திகதியாகும். அன்றையதினம் எல். ரீ.ரீ.ஈ அமைப்பினர் கிழக்குப் பிரதேசத்தில் நிராயுதபாணிகளான 417 பொலிசாரை கொலை செய்தார்கள். அவ்வேளையில் அரசாங்கமும் எல். ரீ.ரீ.ஈ அமைப்பும் மேற்கொண்டிருந்த யுத்தநிறுத்தமும் மீறப்பட்டது.

யுத்த காலத்தில் மக்களை பாதுகாப்பதற்காக ஆயிரக்கணக்கான பொலிஸ் சோதனைச் சாவடிகளை அமைத்து ஆயிரக்கணக்கான பொலிஸ் அதிகாரிகள் பங்கர் மற்றும் முகாம்களில் இருந்து பயங்கரவாதம் உக்கிரமடைந்த பிரதேசங்களில் சாதாரண மக்களை பயங்கரவாதிகளிடம் இருந்து பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். மனிதாபிமான நடவடிக்கை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் எல்.ரீ.ரீ.ஈ நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிகள் புலிகளின் குண்டுத் தாக்குதல்களால் மரணமடைந்தார்கள்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை 1983 ஆம் ஆண்டு யுத்தத்துக்கு தேவையான பூரண பயிற்சிகளுடன் உருவாக்கப்பட்டது. அவர்கள் எமக்காக, சட்டத்தை பாதுகாப்பதற்காக, நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்தார்கள். அதனால் பொலிஸ் நினைவு தினத்தை வீரம் மற்றும் நன்றியின் தினமாக கருதுவதில் தவறில்லை.

இதுவரை 3143 பொலிஸ் அதிகாரிகளை கடமையின் போது நாடு இழந்துள்ளது. யுத்தத்தில் இறந்த 2598 பேரைத் தவிர ஏனைய 545 பேரும் தமது நாளாந்த கடமைகளின் போதே கொல்லப்பட்டுள்ளார்கள். இதைத் தவிர யுத்தம் காரணமாக 1567 போலிஸ் அதிகாரிகள் அங்கவீனமுற்றுள்ளார்கள் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

யுத்தம் நிறைவு பெற்றிருந்தாலும் சட்டவிரோத ஆயுதப் பரிமாற்றம் இன்றும் எமது சமூகத்தில் காணப்படுகின்றது. யுத்தம் நடைபெறும் மற்றும் யுத்தம் நடைபெற்ற உலகில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது சட்டவிரோத ஆயுதங்கள் இலங்கையில் குற்றவாளிகளிடம் பெருமளவு இல்லாமையையிட்டு நாம் நிம்மதியடையலாம்.

இறுதியாக அண்மையில் நடைபெற்ற சம்பவமாக 2019 ஏப்ரல் 21ஆம் திகதி கிறிஸ்தவ தேவாலயங்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்யச் சென்று தெமட்டகொடை பிரதேசத்தில் மூன்று பொலிஸ் அதிகாரிகள் குண்டு ஒன்று வெடித்ததில் தமது கடமையின் போது உயிர்நீத்ததை குறிப்பிட வேண்டும்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 மார்ச் 21
திங்கட்கிழமை

## பனங்கள்ளு ஏற்றுமதி செய்ய முயற்சி



கரவெட்டி தினகரன் நிருபர்

வடக்கில் இருந்து பனங்கள்ளு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அவர், யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கைத்தொழில்வர்த்தகத்துறைசம்பந்தமான கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்

தற்போதைய சூழ்நிலையில் வர்த்தகத்துறை அமைச்சானது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இருந்து ஏற்றுமதியை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. ஒரு ஏற்றுமதியை செயற்படுத்துவதற்கான கோரிக்கைகளை நாங்கள் ஏற்றுக்கொண்டு அதனை செயல்படுத்த தயாராக உள்ளோம்.

அதன் ஒரு அங்கமாக பனங்கள்ளு உற்பத்தி கிராமம், பனங்கட்டி உற்பத்தி கிராமம், கடலட்டை உற்பத்தி கிராமம் போன்றவற்றை உருவாக்குவது தொடர்பான கோரிக்கைகள் ஏதாவது எமது அமைச்சுக்கு கிடைக்கப்பெற்றால் நாங்கள் அதற்கு ஆதரவளிக்கத் தயார். தற்போது நமது நாட்டுக்கு ஏற்றுமதி கட்டாயம் தேவையானது.

குறிப்பாக நுவரெலியாவில் கோப்பி, தேயிலை போன்றவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வடக்கில் இருந்து ஏற்றுமதி குறைவாகக் காணப்படுகின்றது. எனவே வடக்கில் இருந்து பனங்கள்ளை தயார் செயது ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்றார்.

# நாம் உங்களை மறக்கவும் மாட்டோம், கைவிடவும் மாட்டோம்

### யாழ்.மக்களை நோக்கி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமிழில் உரை

சாவகச்சேரி விசேட நிருபர்

நாம் உங்களை மறக்கவும் மாட்டோம், கைவிடவும் மாட்டோம் என யாழ்ப்பாண மக்களை நோக்கி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமிழில் தெரிவித்திருந்தார். யாழ்ப்பாணம் மட்டுவில் பொருளாதார மத்திய நிலையத் திறப்பு விழாவில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். அவர் தனது உரையில்; யாழ்ப்பாண மக்களை சந்திப்பதில் மகிழ்வடைகின்றேன். யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தியை நான் என் கண்களால் நேரில் காண்கிறேன். 1970களில் யாழ்ப்பாணம் இருந்த நிலைமை எனக்கு ஞாபகம் இருக்கின்றது. யாழ்ப்பாணம் எல்லோருக்கும் தெரிந்த ஓர் நகரம். எங்களுடைய காலத்தில் யாழ்ப்பாணம் கொழும்பு இடையே நல்ல தொடர்பு இருந்து வருகிறது. எனக்குத் தெரியும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையார் யாழ்ப்பாணம் வந்த போது இங்குள்ள மக்கள் அவரை மிளகாய் மாலை அணிவித்து கௌரவித்திருந்தனர். நாம் வடக்கு மக்கள் வாழக்கூடிய ஓர் நிலைமையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். நாம் வடக்கில் மாகாணசபையை உருவாக்கினோம். ஆனால் 2015 அந்த செயற்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. நாம் உருவாக்கிய வடக்கு மாகாண சபையை நல்லாட்சி காலத்தில் கலைத்தார்கள். அந்த நல்லாட்சி காலத்தில் யாழில் ஒரு வீதி கூட அபிவிருத்தி செய்யப்படவில்லை. உண்மையை சொல்ல வேண்டுமானால் முழு நாட்டிலும் அந்த நல்லாட்சி காலத்தில் அபிவிருத்தி நடக்கவில்லை. நல்லாட்சி காலத்தில் யாழ்ப்பாணத்தில் மின் நிலையம் ஒன்று அமைத்திருந்தால் இன்று யாழ்ப்பாண மக்கள் இருளில் இருந்திருக்க மாட்டார்கள். நாம் 2019இல் நாட்டை மீளக் கட்டியெழுப்பும் போது தான் கொரோனா பேரிடர் ஏற்பட்டது. கொரோனாவில் இருந்து இளைய சமுதாயத்தை மாத்திரமன்றி முதிய சமுதாயத்தையும் பாதுகாத்துள்ளோம் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.



# யாழ். பல்கலையில் யாழ். தமிழ்ச் சங்கத்தின் முப்பெரும் நிகழ்வுகள்





யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்திய சங்கப்பேழை நூல் வெளியீடு, உலகத் தாய்மொழி நாள் பேருரை மற்றும் 2019 உயர்தரப் பரீட்சையில் தமிழ்ப்பாடத்தில் அதிவிசேட சித்தி பெற்ற வடமாகாண மாணவர்கள் 154 பேருக்கான மதிப்பளிப்பு ஆகிய மூன்று நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா கலந்து கொண்டார்.

நிகழ்வில் வரவேற்புரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசனும் தமிழ்மொழி நாள் பேருரையை கிழக்குப் பல்கலைக் கழக மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் சி. சந்திரசேகரமும் அவருக்கான அறிமுகவுரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பொருளாளர் பேராசிரியர் தி.வேல்நம்பியும் சங்கப்பேழை நூல் வெளியீட்டுரையை நூலின் பதிப்பாசிரியர் லோ. துசிகரனும் நூலாய்வுரையை பேராதனைப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரனும் ஆற்றினர். நன்றியுரையை சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் கு. பாலசண்முகனும் நிகழ்ச்சி முன்னிலைப்படுத்தலை சங்கச் செயலாளர் இ.சர்வேஸ்வராவும் மேற்கொண்டனர்.

சங்கப்பேழை நூலை தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வெளியிட்டு வைக்க அதன் முதற்பிரதியை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் மாகாண மற்றும் வலயங்களின் தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் தமிழாசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். கௌரவம் பெற்ற மாணவர்களுக்கு ஐயாயிரம் ரூபா பணப்பரிசில், ஐந்து பெறுமதியான புத்தகங்கள் அடங்கிய பொதி மற்றும் சான்றிதழ் என்பன வழங்கப்பட்டன.

## விபத்தில் முதியவர் மரணம்

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு ஏ32 வீதியில் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் 61வயதான நபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார். தனங்கிளப்பு சந்திக்கு அருகாமையில் உள்ள கோவிலுக்கு சென்று விட்டு வீடு திரும்பிய நபரை வீதியால் பயணித்த கார் மோதியதில் இவ் அனர்த்தம் நேர்ந்துள்ளது.

இதில் கேரதீவு வீதி தனங்கிளப்பு பகுதியைச் சேர்ந்த 61 வயதான தம்பிமுத்து குணசிங்கம் என்பவரே சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மதுபான சாலைக்கு அனுமதி வழங்க வேண்டாம்

### பருத்தித்துறை பிரதேச செயலருக்கு மகஜர்

கரவெட்டி தினகரன் நிருபர்



பருத்தித்துறை நகர் பகுதியில் இயங்கி வந்த மதுபான சாலை புதிய இடம் ஒன்றிற்கு மாற்றப்படவுள்ளதாகவும் அங்கு இரண்டு ஆலயங்கள், தபாலகம், பாடசாலை உட்பட மக்கள் குடியேற்றங்கள் உள்ளதால் அதற்கு அனுமதி வழங்குவதை தடை செய்யுமாறு கோரியுள்ளனர். குறித்த பகுதியில் சுமார் நூறு மீட்டர் சூழலில் உள்ள வைரவர், மற்றும் முருகன் ஆலயங்கள் ஆகியவற்றின் பரிபாலன சபையினர் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு மகஜர் கையளித்துள்ளனர்.

பருத்தித்துறை நகர் பகுதியில் சிவன் ஆலயத்திற்க்கு முன்பாக இவ்வளவு காலமும் இயங்கிவந்த நிலையில் குறித்த மதுபான சாலை தொடர்ந்தும் இயங்குவதற்கு பருத்தித்துறை நகரசபை அனுமதி மறுத்துள்ளது. இந்நிலையிலேயே இது பிறிதொரு இடத்திற்கு மாற்றப்படவுள்ளது.

## மின் இணைப்பு தொடர்பில் 100 முறைப்பாடுகளுக்கு தீர்வு



வவுனியா விசேட நிருபர்

வவுனியாவில் மின் இணைப்பு தொடர்பில் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்ற 100 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழுவின் நுகர்வோர் விவகார பணிப்பாளர் யசந்த ரதுவிதான தெரிவித்துள்ளார்.

இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழு மின்சார சேவையுடன் இணைந்து வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடமாடும் சேவையை மூன்று தினங்களுக்கு முன்னெடுத்திருந்தது. இது தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் புதிய மின் இணைப்பு பெறுதல், மின் இணைப்பில் பெயர் மாற்றம் செய்தல், மின்மானி மாற்றுதல், மின் இணைப்பை இடமாற்றுதல் உள்ளிட்ட பல்வேறு தீர்க்கப்படாத பிரச்சனைகள் தொடர்பில் இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழுவினால் பிரதேச செயலகங்கள் ஊடாக முறைப்பாடுகள் பெறப்பட்டிருந்தன.

இவை தொடர்பில் வவுனியா மாவட்டத்தில் இருந்து இலங்கை பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு 100 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்ற நிலையில் அதற்கு தீர்வு காணும் முகமாக மின்சார சபையுடன் இணைந்து நடமாடும் சேவை ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது காணி ஆவணம் மற்றும் பல்வேறு பிரச்சனைகள் காரணமாக மின் இணைப்பு தொடர்பில் பிரச்சனைகளை எதிர்கொண்ட மக்களுக்கு மின்சார சபையின் ஊடாக தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டது. குறித்த நடமாடும் சேவையில் பலரும் கலந்து கொண்டு மின்சார சபையிடம் இருந்து தமக்கான தீர்வுகளையும் பெற்றுக் கொண்டனர்.

# முகநூல் காதலால் பதின்ம வயது சிறுமிகள் இருவர் துஷ்பியோகம்

### பெற்றோருக்கு தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறியதால் விபரீதம்

### செங்கலடி, யாழ். இளஞர்களுக்கு வலைவீச்சு

மாங்குளம் குறூாப் நிருபர்

முகநூல் காதலால் வீட்டை விட்டு வெளியேறிய இரண்டு பதின்ம வயது சிறுமிகளும் செங்கலடி மற்றும் யாழ்ப்பாணத்தில் பாலியல் துஷ்பியோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ள சமபவமொன்று முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதியில் பதிவாகியுள்ளது.

முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதியிலிருந்து காணாமற் போயிருந்த இரண்டு பதின்ம சிறுமிகளும் நேற்று முன்தினம் மாலை புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதி காணாமல் போன அவர்களை தேடும் நடவடிக்கையில் பெற்றோர், கிராமத்தினர், பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில் அவர்கள் இருவரும் மீட்கப்பட்டுள்ளனர்.

இரண்டு சிறுமிகளையும் காணவில்லயென பெற்றோர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடந்த 16ஆம் திகதி மாலை முறையிட்டுள்ளனர்.

இரண்டு சிறுமிகளும் (18) புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் வைத்து பொலிஸாரால் மீட்கப்பட்டு முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சிறுமிகளிடம் நடத்திய விசாரணையின் போது சிறுமிகளில் ஒருவர் முகநூல் ஊடாக மட்டக்களப்பு செங்கலடி பகுதி இளைஞர் ஒருவருடன் தொடரபை ஏற்படுத்தி கதைத்து பேசியுள்ளார். செங்கலடி இளைஞன் சிறுமியை அங்கு வருமாறு அழைத்துள்ளதையடுத்து சிறுமி தனது நண்பியுடன் வீட்டுக்குத் தெரியாமல் மிதிவண்டிகளில் மாலைநேர கல்விக்கு செல்வதாகக் கூறிவிட்டுச் சென்றுள்ளார். இவர்கள் மிதிவண்டிகளை பற்றைக் காட்டுக்குள் வீசிவிட்டு பஸ்சில் மட்டக்களப்பு செங்கலடிக்குச் சென்றுள்ளனர்.

செங்கலடி இளைஞன் இருவரையும் காரில் ஏற்றிச் சென்று தான் பேசிய சிறுமியுடன் பாலியல் உறவில் ஈடுபட்டதைத் தொடர்ந்து அவர்களை வீடு செல்ல அழைத்துக்கொண்டுவந்து யாழ்ப்பாணத்திற்கு செல்லும் பஸ்சில் ஏற்றி விட்டுள்ளார்.

இரண்டு சிறுமிகளும் யாழ்ப்பாணம் சென்று யாழ் நகரப்பகுதியில் சுற்றிதிரிந்த வேளை கடையொன்றில் பொருட்களை வாங்கியபோது, இரவாகியுள்ளது. இதன்போது இரண்டு சிறுமிகளுக்கும் உதவிசெய்வதாக கூறி இரண்டு இளைஞர்கள், சிறுமிகளை அழைத்துக்கொண்டு சென்று வீடொன்றில் தங்கவைத்து மற்றைய சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு பஸ்சில் இரண்டு சிறுமிகளும் ஏற்றி அனுப்பப்பட்டுள்ளதுடன் இரண்டு சிறுமிகளும் புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் (18) வந்திறங்கியுள்ளனர்.

புதுக்குடியிருப்பில் இரண்டு சிறுமிகளின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு இருவரும் கைதுசெய்யப்பட்டு முல்லைத்தீவு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர். இருவரிடத்திலும் மேற்கொள்ளப்பட்ட வாக்குமூலத்தைத் தொடர்ந்து இரண்டு சிறுமிகளும் மருத்துவ பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன். சிறுமிகள் இருவருடனும் பாலியல் துஷ்பிரயோகத்தை மேற்கொண்டவர்கள் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கொக்கட்டிச்சோலை

# தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் திருமந்திர அரண்மனை

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வளாகத்தில் திருமந்திர அரண்மனை நிர்மாணப்பணிகள் சிவராத்திரி தினத்தன்று ஆரம்பமாகி தொடர்கிறது. நிர்மாணப்பணிகள் வேகப்படுத்தப்பட்டு இந்தவருடத்திற்குள்ளே அரண்மனை நிறைவுறவேண்டுமென இலங்கை சிவபூமி அறக்கட்டளை நிதியத்தின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்தார்.



இலங்கை சிவபூமி அறக்கட்டளை நிதியத்தால் திருமந்திர அரண்மனையின் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் இதற்கான காணியை தமது ஆலய வளாகத்திற்கு அருகில் வழங்கியிருக்கின்றது. அவ் நிர்மாணப்பணிகளைப் பற்றி ஆலய நிர்வாகத்தினருக்கு விளக்கும் கலந்துரையாடலொன்று ஆலய வளாகத்திற்குள் தலைவர் பூ.சுரேந்திரராஜாவின் தலைமையில் (4) இடம்பெற்றது . இக் கலந்துரையாடலில் "ரிஷி தொண்டுநாத சுவாமிகளும்" கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இக் கலந்துரையாடலின்போதே கலாநிதி ஆறு.திருமுருகன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து விபரிக்கையில், நிர்மாணப்பணியில் கடினமான பகுதியை நாம் நிறைவு செய்துள்ளோம். கடினமான பணியாவது 108 சிவலிங்கங்களை கருங்கல்லினால் செதுக்குவதும், 3000 திருமந்திரப்பாடல்களை கருங்கல்லில் பொழிவதுமாகும். இதில் சிவலிங்க நிர்மாணம் முற்று முழுதாக பூர்த்தியாகிவிட்டது. திருமந்திரப்பாடல்களில் 800 பாடல்கள் மாத்திரம் இன்னும் பூர்த்தியடைய இருக்கின்றன. இவைகள் யாவும் ஒரு இலகுவான பணியல்ல. ஆயினும் எல்லையை தொட்டு நிற்கிறோம்.

எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு ஏற்ப இவ்வருட இறுதிக்குள் இதனை பூர்த்தியாக்க வேண்டும். பணிப்பொறுப்புக்களை ஏற்றவர்கள் அதற்கான காலவரையறைக்குள் முடிப்பதற்கு கடினமாக உழைக்க வேண்டும்.

இவ்விடயத்தில் கொக்கட்டிச்சோலை ஆலய நிர்வாகத்தின் அறங்காவலர் சபை அக்கறையோடு செயற்பட வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

## சைவ மஞ்சரி

## சங்கடஹர சதுர்த்தி

சதுர்த்தி திதியானது, விநாயகப் பெருமானை வேண்டி விரதம் இருக்க உகந்த நாள் ஆகும். எண்ணியது யாவற்றையும் அளிக்கும் இந்த சங்கடஹர சதுர்த்தி ஒரு எளிமையான விரதமாகும். பௌர்ணமிக்கு அடுத்து வரும் நான்காம் நாள், சங்கடஹர சதுர்த்தி. 'சங்கட' என்றால் 'துன்பம்', 'ஹர' என்றால் 'அழித்தல்'. துன்பங்களை அழிக்கும் விரதமே சங்கடஹர சதுர்த்தி. ஒவ்வொரு மாதமும் வரும் சங்கடஹர சதுர்த்தி நாளில் விரதம் இருந்தால், குடும்பத்தில் சுபிட்சம் உண்டாவதோடு, தடைகளின்றி எல்லா காரியங்களும் வெற்றியடையும். இந்த சதுர்த்தி திதியானது, விநாயகப் பெருமானை வேண்டி விரதம் இருக்க உகந்த நாள் ஆகும். எண்ணியது யாவற்றையும் அளிக்கும் இந்த சங்கடஹர சதுர்த்தி ஒரு எளிமையான விரதமாகும். இந்த விரதத்தை கடைப்பிடிப்பதால் நோய்கள் குணமடைந்து, உடல் ஆரோக்கியம் மேம்படும். வாழ்க்கையில் தொடர்ந்து பலவகை துன்பங்களுக்கு உள்ளாகிறவர்களுக்கு நிலையான சந்தோஷம் கிடைக்கும். மிகச் சிறப்பான கல்வி அறிவு, புத்திக்கூர்மை, நீண்ட ஆயுள், நிலையான செல்வம் என பலவிதமான நன்மைகளை அடைய முடியும். சனி தோஷத்தால் பாதிக்கப்படுபவர்கள் இவ்விரதத்தை அனுஷ்டித்தால், சனியின் தாக்கம் குறையும்.

வளர்பிறை சதுர்த்தியில் வானில் சந்திரனைப் பார்ப்பது அல்லது நான்காம் பிறையைப் பார்ப்பது கேடு விளைவிக்கும் என்பது பெரியோர்கள் வாக்கு. ஆனால், பவுர்ணமிக்குப் பிறகு வரக்கூடிய தேய்பிறை சதுர்த்தி மிகவும் சிறப்பு வாய்ந்தது. இதுவே சங்கடஹர சதுர்த்தி ஆகும். இது செவ்வாய்க்கிழமை வருவது மிகவும் விசேஷம். வருடத்தின் அனைத்து சங்கடஹர சதுர்த்தி வழிபாடுகளையும் செய்த பலன் ஒரு மகா சங்கடஹர சதுர்த்தியில் வழிபாடு செய்வதால் கிடைக்கப் பெறும். இந்த விரதம் பற்றிய புராணத் தகவல்கள் சிலவற்றை பார்க்கலாம்.

★ முதல் முதலில் தன் தாய் பார்வதி தேவிக்கு, கணபதியே இவ்விரதத்தைச் சொல்லி அருளினார்.

★ சங்கடஹர சதுர்த்தியின் மகிமையை முருகப்பெருமான், ஒரு முனிவருக்கு எடுத்துரைத்ததாக கந்த புராணம் குறிப்பிடுகிறது.

★ கிருஷ்ணர், நான்காம் பிறையை கண்டதால் அவருக்கு அபவாதம் ஏற் பட்டது. எனவே அவர் சங்கடஹர சதுர்த்தி விரதத்தை மேற்கொண்டு கணேசனை பூஜித்து அதிலிருந்து மீண்டார் என்றும் புராணங்கள் குறிப் பிடுகின்றன.

★ வனவாசத்தின் போது, கண்ணபிரான் இவ் விரதத்தைப் பற்றி பஞ்ச பாண்டவர்களிடம் எடுத்துரைத்ததாகவும், அதன்படி இதனை அனுஷ்டித்து யுதிஷ்டிரர் நாட்டை மீண்டும் அடைந்ததாகவும் புராணங்கள் தெரிவிக்கின்றன.

★ இந்த நாளில் தான், விநாயகப் பெருமானின் அருளைப் பெற்று, சந்திரன் சாப விமோசனம் அடைந்தான். எனவே இந்நாளில் சந்திரன் பிரதானமாகிறான்.

★ தமயந்தி நளனை அடைந்தது இந்த விரதத்தின் மகிமையால் தான் என்று நூல்கள் குறிப்பிடுகின்றன.

★ இந்த விரதத்தை முதன் முதலில் அங்காரகன் (செவ்வாய்) கடைப்பிடித்து நவக்கிரக பதவி அடைந்ததாக புராணங்கள் குறிப்பிடுகின்றன. எனவே தான் செவ்வாய்க்கிழமை வரும் விரதம் விசேஷமாக கருதப்படுகிறது.

## மானுடவியல்

(தொடர்)

### சிவகோசரியார்



65

அறிவு அருள் அடக்கம் தவம் சிவபத்தி முதலியவைகளெல்லாம் திரண்டொருவடிவம் எடுத்தாற்போன்றவரும், நல்வினை தீவினைகளால் வரும் ஆக்கக்கேடுகளிலே சமபுத்தி பண்ணுகின்றவரும், யாவரையும் கோகிப்பிக்க வல்லமகா சௌந்திரியமுள்ள பெண்கள் வலிய வந்து தம்மைத் தழுவினும் பரமாணுப்பரிமாணமாயினும் சிந்தந்திரியாமல் அவர்களைத் தாயென மதிக்கும் மகாமுனிவரும், திருக்காளத்தியப்பரைத் தினந்தோறும் சைவாகம விதிப்படி அருச்சிப்பவருமாகிய சிவகோசரியார் என்பவர் இருந்தார். பிரமமுகூர்த்தத்திலே எழுந்து, பொன்முகலியாற்றிலே ஸ்நானம் பண்ணி, சுவாமியை அருச்சிக்கும் பொருட்டுத் திருமஞ்சனமும் பத்திர புஷ்பமும் எடுத்து, சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டு, சுவாமி சந்நிதனத்திலே போனார். போகும் பொழுது அங்கே வெந்த இறைச்சியும் எலும்பும் கிடக்கக் கண்டு நடுநடுங்கி, குதித்துப் பக்கத்திலே ஓடினார்.

ஓடி நின்று, "தேவாதிதேவரே! தேவரீருடைய சந்நிதானத்தை அடைதற்கு அஞ்சாத துஷ்டராகிய வேட்டுவப்புலையர்களே இந்த அநுசிதத்தைச் செய்தார்கள் போலும், அவர்கள் இப்படிச் செய்து போதற்குத் தேவரீர் திருவுளம் இசைந்தீரோ" என்று சொல்லி, பதறி அழுது விழுந்து புரண்டார்.

பின்பு 'சுவாமிக்கு அருச்சனை செய்யாமல் தாழ்த்தலால் பயன் யாது' என்று நினைந்து, அங்கே கிடந்த இறைச்சியையும் எலும்பையும் கல்லையையும் திருவலகினால் மாற்றி, சம்புரோக்ஷணஞ்செய்து, மீளப் பொன் முதலியாற்றிலே ஸ்நானஞ் செய்து, திரும்பிவந்து, வேத மந்திரத்தினாலே சுத்திசெய்து, உருத்திரசமா நமகத்தினால் சுவாமிக்கு அபிஷேகம் பண்ணி பத்திரபுஷபங்களால், அருச்சனை செய்தார்.

திருமுன்னே நின்று, இரண்டு கைகளையும் சிரசின்மேலே குவித்து, இரண்டு கண்களினின்றும் ஆனந்த பாஷ்பஞ்சொரிய திருமேனியெங்கும் மயிர்பொடிப்ப, அக்கினியில் அகப்பட்ட மெழுகுபோல மனம் மிக உருகி இளசு, நாத்தழும்ப, கீத நடையுள்ளதாகிய சாமவேதம் பாடினார்.

பாடியபின் பலமுறை பிரதக்ஷிணஞ்செய்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, அருமையாக நீங்கிப் போய், தபோவனத்தை அடைந்தார். இவை ஒருபுறம் நிகழ்கிறது. முன்னே வேட்டையாடுதற்கு மலைச்சாரலிலே சென்ற திண்ணனார் பன்றி மான் கலை மரை கடமை என்னு மிருகங்களைக்கொன்று, அவைகளினிறைச்சியை முன்போலப் பக்குவப்படுத்தி, தேக்கிலையில் வைத்து, கோற்றேனைப் பிழிந்து, அதனோடு கலந்து, முன்போலத் திருமஞ்சனமும் புஷ்பமுங்கொண்டு, மலையிலே ஏறி, சுவாமிசந்நிதானத்தை அடைந்து, முன்போலப் பூசைசெய்து, இறைச்சிக் கல்லையைத் திருமுன்னே வைத்து, "இந்த இறைச்சி முன்கொண்டுவந்தது போலன்று, இவை பன்றி மான் கலை மரை கடமை என்கின்ற மிருகங்களின் இறைச்சி, இவைகளை அடியேனும் சுவைத்துப் பார்த்திருக்கின்றேன். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**

## அறநெறி அறிவுநொடி



### கே. ஈஸ்வரலிங்கம்
### தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

***18935) எந்த நாளில் வீட்டிலிருந்து ஆடை, ஆபரணங்கள், பொன்பொருள் இவைகளை எவருக்கும் கொடுக்கக் கூடாது?***

*புதன்கிழமை அன்று*

***18936) அப்படிக் கொடுத்தால் என்ன நடக்கும்?***

*உங்கள் கையில் இருக்கும் மகாலட்சுமி அடுத்தவரிடம் சென்றுவிடுவாள் என்று சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது.*

***18937) எந்த நாட்களில் யாருக்கும் அரிசி, நெல், கோதுமை போன்ற எந்த ஒரு உணவு பண்டத்தையும் இனாமாக தரக்கூடாது?***

*வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை அன்று*

***18938) பிரச்சினைகள் நீங்குவதற்கு ஏதாவது ஒரு பரிகாரத்தை செய்து வந்தால் கவனத்தில் கொள்ள வேண்டியது என்ன?***

*தோலாலான செருப்புகள், பர்ஸ், பெல்ட் இவைகளை உபயோகிப்பதை நிறுத்தி விட வேண்டும்.*

***18939) இவற்றை ஏன் தவிர்க்க வேண்டும்?***

*ஏனென்றால் இவைகள் அணிந்துகொண்டு செய்யும் எந்த ஒரு பரிகாரமும் பலிக்காது.*

***18940) கணவனின் அன்பை முழுமையாக மனைவி பெற வேண்டுமென்றால் என்ன செய்யலாம்?***

*விசாக நட்சத்திரத்தில் மனைவி விரதமிருந்து முருகப் பெருமானையும் வள்ளியையும் வழிபட வேண்டும்.*

***18941) நம்முடைய கர்மாவை மாற்றக்கூடிய சக்தி எதற்கு உண்டு?***

*அன்னதானத்திற்கு உள்ளது.*

***18942) யாருக்கு அன்னதானம் வழங்க வேண்டும்?***

*வீடு, வாசல், சொந்தம், பந்தம், தொழில் இவைகளை இழந்தவருக்கு அன்னதானம் அளிப்பது மிகவும் சிறந்ததாகும்.*

***18943) பொதுவாகவே ஒரு நாளை நாம் தொடங்குவதற்கு முன் என்ன செய்வது நல்லது?***

*இறைவனின் ஏதாவது ஒரு மந்திரத்தை ஜெபிப்பது நல்லது என்பது சாஸ்திரம்.*

***18944) இப்படி மந்திரத்தை உச்சரித்த உடன் என்ன செய்வது சாலச் சிறந்தது?***

*ஒரு டம்ளர் இளநீர் குடிப்பது நல்லது.*

***18945) இவ்வாறு குடித்தால் நடக்கும்?***

*ஜெபித்த மந்திரத்தின் பலனை உடனடியாக பெற்றுவிடலாம் என்று சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது.*





கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய பங்குனி உத்திரத் தேர்த்திரு விழாவையொட்டி (17) ஆலய கிழக்கு மாட வீதியிலிருந்து புறப்பட்டு தெற்கு மாடவீதி, மேற்கு மாட வீதி,வடக்கு மாடவீதிகளில் சுவாமிகள் இரு சிவிகைகளிலும் அலங்கார முத்தேர்களிலும் பக்தர்களின் வெள்ளத்திற்கு மத்தியில் உலா வருகை இடம்பெறுவதை படங்களில் காணலாம்.

(படங்கள்: வட கொழும்பு தினகரன் நிருபர்)

## நாதப் பிரம்ம யோகம் - 11



மிக ஆச்சரியமான ஒரு அவதானம் உலோகங்கள் இசையை உறிஞ்சிக்கொள்கின்றன என்பது. சில பரிசோதனைகளில் சில ஆபரணங்கள், கருவிகள் செய்யும் போது இசையைப் பயன்படுத்தும் போது அவை மிகவும் பொலிவுடன் உறுதியுடனும் உருவாகுவது அவதானிக்கப்பட்டுள்ளது. நீண்டகாலம் சாஸ்திரீய சங்கீதம் பயிலப்பட்ட கட்டடங்கள் இசை பயில்வதற்கு ஏற்ற இலகுவான இடங்களாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அத்தகைய இடங்களுக்கு செல்பவர்கள் இனிமையான அனுபவத்தைப் பெறுவதுடன், மனதிற்கு இன்பமாகவும், உயர்நத உணர்வு பெறுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

மெல்லிசையும் அதனுடன் அமைதியும் ஒரு நல்ல இசையின் இலக்கணமாகும். உயர் சுருதி ஒலியும், அதிக சத்த த்துடன் கூடிய மெட்டுக்கொண்டவற்றை அவை நல்ல சந்தம் உடையதாக இருந்தாலும் இசை என்று கூற முடியாது. ஒரு தொழிற்சாலையில், இரயிலில் இருக்கும் இரைச்சல் கூட சந்த த்துடன் இருப்பினும் அவை இரைச்சலாகத்தான் இருக்குமே அன்றி இசையாக இருப்பதில்லை. எமது சமூகத்தில் நடைபெறும் திருமணங்களில் பெரிய ஒலிபெருக்கிகளை வைத்து எழுப்படும் ஒலிகளும் இத்தகைய இரைச்சல்களே. இவை இசையாக கொள்ளப்படுவதில்லை. இத்தகைய பெரிய சத்தங்கள் இரைச்சல்களாகவும் ஒலிமாசாகவுமே கருத்ப்படுகிறது. இசையாக கருதப்படுவதில்லை.

இசை என்பது மெல்லிய, மெட்டுக்களுடன், ஒத்திசைவுடன் காதுகளுக்கு இனிமையையும், மனதிற்கு அமைதியையும் தந்து மனதின் சலனத்தைக் குறைத்து இதயத்தினை அமைதிப்படுத்தும் ஓசையாக இருக்க வேண்டும். இது எவருடைய தூக்கத்தைக் கெடுப்பதாக இருக்காமல் ஒருவனின் மனதிற்கு அமைதியைத் தந்து நல்ல நிம்மதியான தூக்கத்தைத் தரக்கூடியது. இசையானது ஒருவனுக்கு உணர்ச்சிகளிலிருந்து விடுபடும் ஞானத்தியும், அகத்தினை ஆராயும் அமைதியினையும், ஆழமான அமைதியையும் அனுபவிக்கும் ஆற்றலைத் தரவேண்டும். இசையுடன் தொடர்புடையவர்கள் இந்த தன்மையை இசை அடைய இசையை உபயோகிப்பவர்கள் அனைவரும் தமது தீய எண்ணங்களை அகற்றி தெய்வ எண்ணங்களைத் தூண்டக் கூடிய வகையில் உணர்ச்சிகளையும், எண்ணங்களை தமது வாழ்க்கையின் ஒவ்வொரு அமிசங்களிலும் உருவாக்கிக் கொள்வதன் மூலமே இதைச் சாத்தியமாக்க முடியும்.

புராணக்கதைகளில் தேவரிஷி நாரதர் பூவுலகத்தில் எப்படி ஆன்மீக வளர்ச்சி எப்படி இருக்கிறது? அதை வளர்ப்பது எப்படி என்ற எண்ணத்துடன் கடவுளை அடையும் வழி எது? ஏன் கடவுளை அடைவது கஷ்டமான காரியமாக இருக்கிறது போன்ற கேள்விகளுடன் வைகுண்டத்திற்குச் சென்றார். **(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்








கொழும்பு, புதுச்செட்டித் தெரு ஸ்ரீஸ்ரீராதா கிருஷ்ண ஆலயத்தில் ஸ்ரீ சைதன்ய மகாப்பிரபுவின் அவதாரத்தையொட்டி கடந்த 17ஆம் 18ஆம் திகதிகளில் கௌர பூர்ணிமா விழா வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் இடம்பெற்ற நிகழ்வுகளில் சிலவற்றைப் படங்களில் காணலாம்.

# தசாப்தம் காணும் அஸ்ஹர் மாதிரி ஆரம்பப் பாடசாலை -அக்குறணை





## இன்றைய நாளிதழில் சில வரிகள் தூவிட வாய்ப்பளித்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்



எஸ். ஏ. எப் .ஜிம்னாஸ் (அதிபர் சேவை)

அக்குறணை மண்ணில் தடம் பதித்து தசாப்தம் காணும் அஸ்ஹர் மாதிரி ஆரம்பப் பாடசாலை தனது 10 ஆவது ஆண்டு நிறைவை ஜனவரி 19ஆம் திகதி பூர்த்தி செய்தது. இதனை முன்னிட்டு விழாக்கோலம் பூண்டுள்ள எமது பாடசாலை இன்று 'மேன்மையான தசாப்தம்' எனும் தொனிப்பொருளில் கௌரவிப்பு, பரிசளிப்பு நிகழ்வினை பாடசாலை வளாகத்தில் நடாத்துவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

2011 ஆம் ஆண்டு 1000 பாடசாலைகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் அஸ்ஹர் தேசிய பாடசாலை உள்வாங்கப்பட்டதையடுத்து வேறாக்கப்பட்ட அதன் ஆரம்பப்பிரிவும் மூடப்பட்ட குருகொடை முஸ்லிம் பாலிகா பாடசாலையின் ஆரம்பப்பிரிவும் இணைந்து குருகொடை முஸ்லிம் பாலிகா பாடசாலையின் மண்ணிலேயே மறு உருவாக்கம் பெற்ற புதிய ஆரம்பப் பாடசாலையே எமது தற்போதைய அஸ்ஹர் மாதிரி ஆரம்பப் பாடசாலை ஆகும்.

நாடளாவிய ரீதியில் 2012 ஆம் ஆண்டு பல மாதிரி ஆரம்பப் பாடசாலைகள் உருவாக்கப்பட்ட போதிலும் இப்பாடசாலையின் ஆரம்பமும் வரலாறும் தனித்துவமானதே! தனது பெயரில் ஊட்டப் பாடசாலையின் பெயரை சுமந்து வலம் வரும் ஒரு மாகாண பாடசாலையாக எமது பாடசாலை அமைந்திருப்பது சிறப்பம்சமாகும்.

2012.01.19 இல் ஆரம்பித்த எமது பாடசாலையின் 10 வருட பூர்த்தியை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகளை மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் ஒன்றியம் மற்றும் நலன்விரும்பிகளின் உதவிகள் ஒத்தாசைகளுடன் ஒழுங்கமைக்கவும் நிறைவேற்றவும் முடிந்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

2012 ஆம் ஆண்டு புதிதாக உருவெடுத்த இப் பாடசாலையின் முதல் அதிபர் நான்கு வருட கால சேவைக்குப் பின்னர் இரண்டாவது அதிபராகப் 2016.01.19ஆம் திகதி பொறுப்பேற்ற எஸ். ஏ.எப். ஜிம்னாஸ் ஆகிய நான் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கான என்னாலான அர்ப்பணிப்பையும் உழைப்பையும் வழங்கி வருகிறேன். பாடசாலையை பொறுப்பேற்று 6 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக என்னோடு கைகோர்த்து அர்ப்பணிப்புடன் செயலாற்றும் எனது ஆசிரியர் குழாம் தன்னலம் பாராமல் இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்

பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் 2020-2022



குழு செயலாளர் உட்பட உறுப்பினர்கள்' பழைய மாணவர் ஒன்றிய உறுப்பினர்கள், பெற்றார்கள், நலன்விரும்பிகள் மாணவர்கள்,பழைய மாணவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைக் கூறிக் கொள்வதோடு எனக்கு எப்போதும் உதவியாகவும் ஒத்தாசையாகவும் இருக்கும் எனது குடும்பத்தினருக்கும் வழிகாட்டிக்கொண்டிருக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் மனமார்ந்த நன்றிகளையும் பிரார்த்தனைகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தசாப்த நிறைவை முன்னிட்டு

1..மாணவர்களுக்கான பல்வேறு ஆக்கத்திறன் வெளிப்பாடு போட்டி நிகழ்ச்சிகள் மற்றும் பரிசளிப்பு நிகழ்வு

2.பழைய மாணவர்களையும் தற்போதைய மாணவர்களையும் பங்கேற்கச் செய்யும் வகையிலான 3 நாள் கண்காட்சி

3.2022.01.19ஆம் திகதியன்று சகல மாணவர்களும் தனது பாடசாலையின் பிறந்த நாளை உணரும் வகையிலான கொண்டாட்ட நிகழ்வும் காலைக்கூட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

### தசாப்த விழாவில்

1.பாடசாலையின் வளர்ச்சி கண்ணோட்டம் அடங்கிய காணொளி வெளியிடல்

2.பாடசாலை வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு

3. நினைவு மலர் வெளியீடு

4.இணைய வலையமைப்பு அமுலாக்கல் நிகழ்வு

5.பாடசாலையின் முதல் ஆசிரியர்கள்,ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், சேவையாற்றும், இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்,உதவியாசிரியர்கள் கௌரவிப்பு

7.மாணவர்களின் கலை கலாசார நிகழ்ச்சிகள் மேடையேற்றல்

### தசாப்த விழாவின் பிரதம அதிதிகள்

மத்திய மாகாண பிரதான மற்றும் கல்விச் செயலாளர் ஜி. எச். எம். ஏ. பிரேமசிங்ஹ பிரதம அதிதியாகவும் மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ஜி. அமரசிறி பியதாச கௌரவ அதிதியாக கலந்து சிறப்பிக்கின்றனர்.அத்தோடு மாகாண கல்வித் திணைக்கள மேலதிக கல்விப் பணிப்பாளர் சி.டி.ஜி.மாயாதுன்ன, கட்டுகஸ்தோட்டை வலயக் கல்விப் பணிப்பாளர் முத்ரிதா யாப்பாரத்ன,தமிழ் மொழி மூல உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். எம். ராஸிக் மேலும் பல பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

### 10 வருட பூர்த்தி செய்த நிலையில் வரலாற்று சாதனைகள்

2022 நடைபெற்ற 2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 18 மாணவர்களைச் சித்தியடையச் செய்து கட்டுகஸ்தோட்டை வலய தமிழ் மொழி மூல பாடசாலைகளில் அதிக மாணவர்களை சித்தியடையச் செய்த முன்னணி பாடசாலையாக இருப்பதோடு மட்டுமன்றி ஜே. எம். ஷரப் என்ற மாணவன் 190 புள்ளிகளைப் பெற்று மாகாணத்தில் அதிக புள்ளிகள் பெற்ற தமிழ்மொழி மூல மாணவனாக திகழ்வதும் வரலாற்றில் பதியப்பட வேண்டிய மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

## சிகரம் தொடும் அக்குறணை அஸ்ஹர் மாதிரி ஆரம்பப் பாடசாலை 2012 - 2022



பிரதி அதிபர்
என். எம். எஸ். பரீதா

முதலாம் தசாப்தம் கடந்த இரண்டாம் தசாப்தத்தில் நுழைந்துள்ள எமது பாடசாலையின் பெருமிதம் கொள்ளக்கூடிய வரலாற்றுக் குறிப்பு இது........

ஒவ்வொரு பாடசாலையும் காலத்துக்குக் காலம் வருடாந்த பூர்த்தி விழாக்களைக் கொண்டாடும், வருடங்கள் கடந்து செல்கையில் பாடசாலையின் சகல வழிகளிலான அபிவிருத்திகளும் ஆரோகணத்திலும், தவறுகள் மற்றும் குறைகள் அவரோகணத்திலும் செல்ல வேண்டும். அந்த வகையில் ஏனைய பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாகவும், முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் எமது பாடசாலை வரலாறு நிச்சயம் அமையும்.

2022. 03. 17,18,19 ஆம் திகதிகளில் இடம் பெற்ற கண் காட்சி புகைப்படங்கள் சில...



வசதி,வனப்போடு இருக்கும் எமது பாடசாலை கடந்து வந்த பாதையில் பலரின் தியாகமும் அர்ப்பணிப்பும் பதிந்துள்ளது என்பது மறக்க முடியாத உண்மையாகும்.

2011ஆம் ஆண்டில் ஆட்சியிலிருந்த அரசாங்கத்தின் கல்விக் கொள்கையில் உதித்த ஆயிரம் பாடசாலைகளின் அபிவிருத்தி திட்டம் அக்காலத்தில் நாடுமுழுவதும் பரபரப்பாக பேசப்பட்ட விடயம், நாட்டிலுள்ள பிரபல பாடசாலைகள் ஆயிரத்தினை தெரிவு செய்து அவற்றை அத்திட்டத்தில் உள்வாங்கும் செயற்பாட்டை மாகாண கல்வித் திணைக்களங்கள் மூலம் மத்திய கல்வியமைச்சு மேற்கொண்டது.

இதில் கட்டுகஸ்தோட்டை வலயக்கல்வி அலுவலகத்தின் சிபாரிசில் இத்திட்டத்திற்குள் அக்குறணை பிரதேசத்தின் மிகப்பெரிய பாடசாலையான அஸ்ஹர் தேசிய பாடசாலை உள்வாங்கப் பட்டது. அப்போது அஸ்ஹர் தேசிய பாடசாலையின் அதிபராக இருந்த ஜனாப். ஏ. ஆர். எம்.உவைஸ் அவர்களின் தலைமையில் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஒன்றிணைந்து கல்வி அதிகாரிகளின் ஆலோசனைகளுடன் பிரதேச அரசியல்வாதிகளின் ஒத்துழைப்புடன் புதிதாக ஒரு ஆரம்பப் பாடசாலையை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் புதிய பாடசாலைக்கான இடமொன்றைப் பெறுவதிலிருந்த கஷ்ட நிலைமை காரணமாக அக்குறணை 7ம் கட்டை குருகொடை சந்தியில் 1942 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, சுமார் 70 வருடங்கள் பூர்த்தியான போதும் வளப்பற்றாக்குறைகளுடன் மூடப்படும் நிலையில் இயங்கிக் கொண்டிருந்த க/குருகொடை முஸ்லிம் பாலிகா வித்தியாலயத்தை மூடி புதிதாக அவ்விடத்தில் ஆரம்பப் பாடசாலை ஒன்றை அமைப்பது என்ற முடிவை எடுத்தனர். அதன்படி கட்டுகஸ்தோட்டை வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய திருமதி சி.டி.ஜி. மாயாதுன்னவின் சிபாரிசுடன் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினர் ரிஸ்வி பாரூக்கின் வேண்டுகோளின் படி மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவின் உத்தரவுக்கிணங்க மத்திய மாகாண கல்வியமைச்சு செயலாளரின் அனுமதியுடன் மாகாண கல்விப் பணிப்பாளர் ஈ.பி,டி.கே. ஏக்கநாயக்க அவர்களால் புதிய ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டு 19.01.2012 இல் புதிய பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.





மேலே பெயர் குறிப்பிட்டவர்களுடன் அப்போதைய, மத்திய மாகாண கல்விப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்த கல்வி அதிகாரி ஜனாப். என். எம். நஸார் உட்பட இதில் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய கல்வி அதிகாரிகள், அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட பெற்றோர், அஸ்ஹர் பழைய மாணவ சங்கத்தினர், நலன் விரும்பிகள் அனைவரும் வரலாற்றில் பதியப்பட வேண்டியவர்களே,

அதிபர் சேவை தரம் 2 அதிபரான ஜனாப். ஏ.எம்.எம். ஸரூக் அவர்களை முதலாவது அதிபராகக் கொண்டு தரம் ஒன்றில் நான்கு சமாந்தர வகுப்புகளுடன் 147 மாணவர்களுடன் ஆரம்பமானது.இப்பாடசாலை ஆரம்பத்தில் மிக மோசமான பௌதீக வளங்களுடனேயே இருந்தது.

80 x 20 என்ற அளவுள்ள மிகப்பழைமை வாய்ந்த கட்டடத்தை புனர்நிர்மாணம் செய்து புதிய நான்கு வகுப்புகளையும் அதிபர் காரியாலயத்தையும் அமைத்து இயங்கச் செய்தல், பாதுகாப்பு சுவர்கள் கட்டுதல், கற்றலுக்குரிய சூழலை ஒழுங்கமைத்தல் போன்ற சகல விதமான உதவிகளையும் வசதிகளையும் அஸ்ஹர் தேசிய பாடசாலை பழைய மாணவர் ஒன்றியம் மற்றும் தரம் 1 வகுப்பின் பெற்றோர்;கள் ஆகியோர் வழங்கியமை வரலாற்றின் பதிவுகளாகும்.

10 வருட நிறைவை ஒட்டி 2022. 01. 19 அன்று பாடசாலை காலைக் கூட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் சில.....



அபிவிருத்திக் குழு மற்றும் அஸ்ஹர் பழைய மாணவர் சங்கம் என்பவற்றின் கோரிக்கைக்கேற்ப முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஜனாப் ரிஸ்வி பாரூக்கின் வேண்டுகோளுக்கு இணங்க மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவின் மாகாண நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டவேலைகள் படிப்படியாக முடிவடைந்த போது அதிகரித்த மாணவர் தொகைக்கும், ஆசிரியர் தொகைக்கும் ஏற்ப இடப் பற்றாக்குறை ஓரளவு தீர்ந்தது.

பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள்,பழைய மாணவர்கள் மூலம் பாடசாலையின் பாதுகாப்பு மதில்கள், வேலிகள், மலசலகூட வசதிகள், படிக்கட்டுகளின் ஒழுங்கமைப்புகள், பிரதான மண்டபத்திற்கு பதிலான தற்காலிக ஒன்றுகூடல் கூடாரம் போன்ற இன்னோரன்ன விடயங்கள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டன. இவற்றின் போது பாடசாலை அபிவிருத்திக் குழுவின் மூலம் வழங்கப்பட்ட ஒத்தாசையும் ஆலோசனைகளும் பங்களிப்பும் அளப்பரியது. தற்போதைய அதிபரின் காலத்திலேயே இப்பாடசாலை முழுமையான ஆரம்பப் பாடசாலையாக மாற்றம் பெற்றது.

ஆசிரியர் குழாம்



2016ஆம் ஆண்டிலேயே இப்பாடசாலை முதன்முதலாக பொதுப்பரீட்சையான தரம் 5 புலமைப் பரீட்சைக்கு மாணவர்களை அனுப்பியது. அதில் 12 மாணவர்கள் சித்தியடைந்ததுடன் அதிகமான மாணவர்கள் 70க்கு மேல் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். தொடர்ந்தும் ஒவ்வொரு வருடங்களிலும் சிறந்த அடைவை எய்திக்கொண்டிருக்கிறது.

வளத்தேவைகளைப் பொறுத்தவரை முன்னாள் அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்தின் முதலிரு மாடிகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதுடன் அதிலேயே அதிபர் காரியாலயம், வாசிப்பு அறை, கற்றல் வள நிலையம் இயங்குகின்றன. அரச நிதியிலிருந்து கட்டப்பட்ட பாதுகாப்பு மதிலும் ஒழுங்குபடுத்தி பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

தற்போது தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை சுமார் 740 மாணவர்களையும் 24 ஆசிரியர்களையும் 01 கல்விசாரா ஊழியர்களையும் கொண்டு மாவட்டத்தின் பிரபல ஆரம்பப் பாடசாலையாக இயங்குகிறது.



அனைத்து பாடவிதான, இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் ஈடுபடுகிறது. இவ்வாறு பாடசாலை மட்டப் போட்டிகள் நடைபெற்று எமது மாணவர்கள் கோட்டமட்ட, வலயமட்ட, மாகாண மட்ட தேசிய மட்டப் போட்டிகளிலும் சாதனை புரிந்த வருகின்றனர். எமது இணைப்பாட செயற்பாடுகளாக வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி, வருடாந்த கல்விச் சுற்றுலா, சிறுவர் சந்தை, ஆங்கில தினவிழா, தமிழ்த் தின விழா, மீலாத் விழா, வாசிப்புப் போட்டிகள் என்பவற்றுக்கு மேலதிகமாக வர்ண சீருடைத் தினம் என்ற தினமானது 2018ஆம் ஆண்டு முதன் முதலில் எமது பாடசாலையிலேயே அறிமுகப் படுத்தப்பட்டது.



ஒவ்வொரு வருடமும் சுமார் 600க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்தாலும் நான்கு சமாந்தர வகுப்புகளுக்குரிய மாணவர்களை மாத்திரமே சேர்த்துக்கொள்ள முடிகிறது.

மேலும் 4ம், 5ம், வகுப்புகளில் கற்கும் மாணவர்களிலிருந்து வருடா வருடம் தெரிவு செய்யப்படும் மாணவர் தலைவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் அவர்கள் மூலமாகவும் ஏனைய மாணவர்களுக்கு சிறந்த ஒழுக்க விழுமியங்களை கற்பிக்க பாடசாலை ஆசிரியர்கள் முன்னின்று செயற்படுவதாலும், பெற்றோர்களுக்கு தேவையான நேரங்களில் வழிகாட்டல் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து நடாத்துவதனாலும், *SBPTD* மூலம் ஆசிரியர் வாண்மை விருத்திக்காக தொடர் செயற்றிட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுவதனாலும் தேவையான நேரங்களில் நவீன தொழிநுட்ப முறைகளைப் பயன்படுத்தி எமது ஆசிரியர்கள் கரிசனையோடு கற்பிப்பதனாலும் எப்போதும் உயிரோட்டத்தோடு இந்தப் பாடசாலை உள்ளதனால் பிள்ளைகள் விரும்பி வரும் பாடசாலையாக இது மிளிர்கிறது. அதனாலேயே தான் மத்திய மாகாணத்தில் இடைவிலகல் மிகவும் குறைந்த பாடசாலைகளில் ஒன்றாக எமது பாடசாலையும் உள்ளது.



## மத்திய மாகாண கல்வி அமைச்சு செயலாளரின் வாழ்த்துச்செய்தி




ஜீ . எச். எம். ஏ. பிரேமசிறி
செயலாளர்,
பிரதான மற்றும் கல்வி அமைச்சு,
மத்திய மாகாணம்

அக்குறணை அஸ்ஹர் மாதிரி ஆரம்பப் பாடசாலையின் பத்தாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வாழ்த்துச் செய்தியை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். 2012ஆம் ஆண்டு மாதிரி ஆரம்பப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு, இதுவரை பல சாதனைகளை மரபுரிமையாகப் பெற்றுள்ள இக்கல்லூரி மாதிரிப் பாடசாலையின் கருத்தை உணர்ந்து, மாகாணத்தில் தனித்துவமான பாடசாலையாக மாறி சமூகம் மத்தியில் பிரபல்யமடைந்துள்ளதை நான் பாராட்டுகிறேன்.

கடந்த காலத்தில் கல்லூரி மாணவர்களுக்கு அர்த்தமுள்ள வெற்றிகரமான வாழ்க்கையை உருவாக்கத் தேவையான வாழ்க்கைக்கான வழிமுறைகளை நீங்கள் வளர்த்திருக்கலாம். மேலும் உடல், சமூக, உயிரியல் மற்றும் பௌதீக விடயங்களுடனும் நல்லுணர்வுள்ள தொடர்புகள் மூலமும் வெற்றியை அனுபவிக்கக்கூய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் கூடிய நல்ல குழந்தைகளை தேசத்திற்கு வழங்கியிருப்பீர்கள் என நினைக்கிறேன்.

கல்வியின் தேசிய இலக்குகளை அடைவதற்கான நற்பண்புகளையும் நெறிமுறைகளையும் குழந்தைகளின் மனதில் பதிய வைப்பது பள்ளி அமைப்பின் பொறுப்பாகும். இது தான் சகல மதத்தினதும் எதிர்ப்பார்ப்புமாகும். இதனை வழங்கும் முயற்சியினை தங்களது பாடசாலைச் செயற்பாடுகள் மூலம் காணக்கூடியதாகவுள்ளது. குழந்தைகளின் மனதில் இத்தகைய தரமான



எண்ணங்களை உருவாக்குவதில் நடைமுறை அனுபவத்தை வழங்குவதோடு பள்ளிக்கும் சமூகத்திற்கும் இடையிலான பிணைப்பை வலுப்படுத்துவதும், கல்வியின் தனித்துவமான அம்சங்களும், அத்தகைய நினைவுப்பதிவுகள் மற்றும் கௌரவமான குறிப்புகளும் விலைமதிப்பற்றவை. அவ்வாறான கல்வியை வழங்குவதற்கான ஆய்வு, அறிவுச் செயற்பாடுகளில் ஆசிரியர்களே ஈடுபடுகின்றனர். மாணவர்களுக்குத் தேவையான அடிப்படைத்திறன்களுக்கு முன்னோடியாக அவர்களை மாற்றுவதில், பங்களிக்கின்ற கல்லூரியின் ஆசிரியர்களைப் பாராட்டுகின்றேன். பள்ளியின் முதல்வர் திருமதி. எஸ். ஏ. எப். ஜிம்னாஸ் அவர்களின் பங்களிப்பையும் பாராட்டுகின்றேன்.

மக்களின் நிலைபேண்தகு தன்மைகளை கல்வியானது உறுதி செய்ய வேண்டும். புதிய போக்குகள் மற்றும் சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் கல்வியின் தேசிய நோக்கத்தை மேலும் மேம்படுத்தி, தீவிரமாக முன்னோக்கிச் செல்லும் பணியின் வெற்றியை அடைய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.



எம். சதுர்தீன் ...
மாத்தளை சுழற்சி நிருபர்

# கிழக்கின் குரல்



# றம்புக்கன் ஓயா நீர்த்தேக்க பிரதேசத்தில் 2700 மூலிகை கன்றுகள் நடும் திட்டம்

## கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் ஆரம்பித்து வைப்பு

நிந்தவூர் குறூப் நிருபர்

ஜனாதிபதியின் செழுமையான தொலை நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ், 30 சதவீதத்தால் காடுகளை உயர்த்தும் தேசிய கருத்திட்டதை உயிர்ப்பிக்கும் நோக்கில், அம்பாறை மாஹா ஓயா நில்கல வனப் பாதுகாப்பு பிரதேச றம்புக்கன் ஓயா நீர்த்தேக்க பிரதேசத்தில், 2,700 மூலிகை கன்றுகள் நடும் திட்டம் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் வெள்ளிக்கிழமை (18) ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஶ்ரீதர், கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல், இராஜாங்க அமைச்சர் சிறிர ஜயக்கொடியின் கிழக்கு மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளின் அபிவிருத்தி இணைப்பு அதிகாரி வைத்தியர் ஏ.சி.டில்சாத், கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் பணிப்பாளர் சுலைமாலெப்பை நாசிறுான் மற்றும் இராணுவ அதிகாரிகள், பொலிஸார், பழங்குடியினர், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இலங்கையில் அருகிவரும் மூலிகை மரங்களை உருவாக்கி அதன் மூலம் பாரம்பரிய வைத்தியத்திற்கு தேவையான உள்ளூர் மருந்து உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதுடன், பாரம்பரிய வைத்திய முறைகளை செயற்படுத்தும் தொலை நோக்கத்திற்காகவே இத்திட்டம் ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் :

பாரம்பரிய வைத்திய முறையின் மூலம் இயற்கையோடு ஒன்றித்த வாழ்க்கை முறையினையும், நஞ்சற்ற ஒரு தேசத்தையும், சமூதாயத்தையும் உருவாக்குவதற்காக சிறந்த வேலைத்திட்டங்களை ஜனாதிபதி நடைமுறைப்படுத்தி வருகிறார்.

ஜனாதிபதியின் அனைத்துத் திட்டங்களையும் உடனுக்குடன் அமுல்படுத்தும் வகையில் கிழக்கு மாகாணம் முன்னின்று செயற்பட்டு வருகின்றது என இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

# பொலிசாரின் பாதுகாப்புடன் சமையல் எரிவாயு விநியோகம்



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சனிக்கிழமை (19) சமையல் எரிவாயு விநியோகம் இடம் பெற்றது.

கொழும்பிலிருந்து லிற்றோ சமையல் எரிவாயு போத்தல்கள் மட்டக்களப்புக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து, சமையல் எரிவாயு விநியோகம் இடம் பெற்றது.

பொலிஸ் பாதுகாப்புடன் இதனை பொது மக்களுக்கு விநியோகித்தனர்.

இதனை பெற்றுக் கொள்ள பொது மக்கள் காலையிலிருந்து நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

சமையல் எரிவாயு தட்டுப்பாட்டினால் பல ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள், உணவகங்கள் மூடப்பட்ட நிலையில் சிற்றுண்டிச் சாலைகள், உணவகங்களுக்கு சமையல் எரிவாயு வழங்கப்பட்டன.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த லிற்றோ எரிவாயு நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட ஏக விநியோகஸ்தர்களான எஸ்.எஸ்.எம். சொல்கார் , நிறுவனத்தின் உரிமையாளர் இப்றாகீம் கடந்த 12ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்துக்கு சமையல் எரிவாயு 1000 போத்தல்கள் வந்தன. அதனை அன்றே மாவட்டம் முழுவதும் பிரித்துக் கொடுத்தோம்.

அதன் பிறகு சனிக்கிழமை 1000 சமையல் எரிவாயு போத்தல்கள் வந்துள்ளது. இதனை மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் பிரித்து வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

# 'ஆளுமைக்கு மண்ணின் மரியாதை' கௌரவிப்பு விழா

அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று ஆர்.கே. அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'ஆளுமைக்கு மண்ணின் மரியாதை' கௌரவிப்பு நிகழ்வு சனிக்கிழமை (19) அட்டாளைச்சேனை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



அமைப்பின் தலைவர் எம்.எம். றுக்ஸான் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வின் போது, அண்மையில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராக பதவியுயர்வு பெற்ற இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர் கலாநிதி எம்.கோபாலரத்தினம் பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இன, மத பேதமின்றி கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு பிரதேசங்களிலும் பல பதவிகள் வகித்து பல்வேறான சேவைகளை ஆற்றி தற்போது கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராக பதவியேற்றுள்ள இலங்கை நிருவாக சேவை சிரேஷ்ட அதிகாரியான கலாநிதி எம்.கோபாலரத்தினத்தின், சிறந்த சேவை மற்றும் பதவியுயர்வு போன்றவற்றுக்காக ஆளுமைக்கான மண்ணின் மரியாதை கௌரவிப்பு இடம்பெற்றது.

இதேவேளை, கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் எம்.கோபாலரத்தினத்தின் சேவையினைப் பாராட்டி அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள பல்வேறு சமூக சேவை அமைப்புக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததுடன், அவரின் கடந்த காலத்தின் தன்னல மற்றதும் பாகுபாடற்றதுமான சேவை தொடர்பில் பல்வேறு துறைசார் முக்கியஸ்தர்கள் கருத்துரைகளையும் நிகழ்த்தினர்.

# தடுப்பூசி பெற்று கொள்ளாதவர்களுக்கு நடமாடும் சேவை ஊடாக தடுப்பூசி

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

ஒலுவில் விசேட நிருபர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் இதுவரை கொவிட் எவ்வித தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு நடமாடும் சேவை ஊடாக தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி டாக்டர் ஜ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

ஒவ்வொரு சுகாதார வைத்திய திகாரி பிரிவுகள் தோறும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதார அதிகாரிகளால் வீடுவீடாக கொவிட்19 தடுப்பூசி அட்டை பரிசோதிக்கப்பட்டு வருவதாகவும், இதுவரை கொவிட் 19 முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு நடமாடும் சேவை மூலம் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.



இதுவரை தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் அலட்சியமாக இருந்துவிடாமல் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்குச் சென்று தமக்கான தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

வெளிநாடு செல்பவர்களுக்கு பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாடு செல்பவர்கள் தமக்கான தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

முதலாவது, இரண்டாவது தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் கொரோனா தாக்கத்திலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும், மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக் கொள்ளும் பட்சத்தில் முழுமையாக பாதுகாக்க முடியுமெனவும் குறிப்பிட்டார்.

இரண்டாவது தடுப்பூசி பெற்று 03 மாதங்கள் பூர்த்தியானவர்கள் இது வரை மூன்றாவது தடுப்பூசியை பெற்று கொள்ளாத 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டுவருவதாகவும் தெரிவித்தார். சுகாதார நடைமுறைகளை தொடர்ந்தும் கடைப்பிடிக்குமாறும், மக்கள் அவதானமாக இருக்குமாறும் கேட்டுள்ளார்.

# அக்கரைப்பற்று மாநகரில்"கோப்பிறஸ்" விற்பனை நிலையம் திறந்து வைப்பு

பாலமுனை விசேட நிருபர்

"சுபீட்சத்தின் நோக்கு" அரசாங்கத்தின் தேசிய கொள்கை வேலைத் திட்டத்திற்கமைவாக கிழக்கு மாகாணத்தில் "கோப்பிறஸ்" பல்பொருள் விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இதற்கமைவாக அக்கரைப்பற்று மாநகரிலும் "கோப்பிறஸ்" விற்பனை நிலையமொன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

குறித்த கோப்பிறஸ் பல்பொருள் விற்பனை நிலையத்தினை அக்கரைப்பற்று மத்திய பலநோக்கு கூட்டுறவு சங்கக் கட்டடத்தில் திறந்து வைக்கும் நிகழ்வு, எதிர்வரும் வியாழக்கிழமை (24) சங்கத்தின் தலைவர் ஓய்வு நிலை அதிபர் எம்.பி.ஏ. ஹமீட் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி. முத்துபண்டா, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம். அஸ்மி ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைக்கவுள்ளனர்.

கூட்டுறவு சேவைகள் சந்தைப் படுத்தல் அபிவிருத்தி, நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் நிதியில் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் மாகாணத்திலுள்ள 16 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் இவ்வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முதல் தடவையாக மாணவி சித்தியடைந்து சாதனை

கிண்ணியா மத்திய நிருபர்



திருகோணமலை, கருமலைஊற்று முஸ்லிம் வித்தியாலய மாணவி நுஸ்ரத் அலி அதா ஸரிஹ் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இது குறித்து பாடசாலை அதிபர்கே.எம்.எம் நவாஸ் கருத்து தெரிவிக்கையில்,

பாடசாலை ஆரம்பித்து 10 வருடகால வரலாற்றில் முதல் தடவையாக இந்த மாணவி சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை தேடிக் கொடுத்துள்ளார். கடந்த ஆறு வருடங்களாக மாணவர்கள் இந்த பரீட்சைக்கு தோற்றிய போதும் இதுவரை எவரும் சித்தி அடைய வில்லை.

எனவே இந்த மாணவி பாடசாலையின் வரலாற்றில் சித்தி அடைந்த முதல் மாணவி என்ற சாதனையை பெற்றுக் கொண்டுள்ளார். இது பாடசாலை சமூகத்துக்குகிடைத்த தொரு உந்து சக்தியாகும்.

எனவே முதலாம் தரத்தில் இருந்து ஐந்தாம் தரம் வரையும் கற்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

# கந்தளாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வு

கந்தளாய் தினகரன் நிருபர்



கந்தளாய் பிரதேச செயலகத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவின் ஏற்பாட்டில் "ஒரு நாடு, ஒரு பொருள், ஒரு உலகம் நீங்கள்" என்ற தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் சனிக்கிழமை (19) இடம்பெற்றது.

பெண்களுக்கான கால்நடை கடன் மற்றும் சுழல் கடன் வழங்கல், பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் விநியோகம் மற்றும் மரக்கன்றுகள், பெண்கள் சவால்களுக்கு முகங்கொடுத்து உறுதியுடன் இருப்பதற்கும், வலுவான எதிர்கால சந்ததியை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதற்கும் பெண்கள் சகல துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என கந்தளாய் பிரதேச செயலாளர் தனது சிறப்புரையில் தெரிவித்தார்.

கந்தளாய் சட்ட உத்தியோகத்தர் பெண்களுக்கு எதிரான சட்ட வன்முறைகள் மற்றும் பெண்களுக்கான சட்டப் பாதுகாப்பு மற்றும் ஒரு பெண்ணாக எவ்வாறு செயற்படுவது என்ற தலைப்பில் தெளிவுபடுத்தினார். இந்நிகழ்வில் இலங்கை வங்கி, அரச சார்பற்ற நிறுவனங்கள், பெண்கள் சங்கங்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டார்கள்.



மட்டக்களப்பு குருக்கள்மடம் அருள்மிகு ஶ்ரீ முருகன் ஆலயத்தில் நடைபெற்ற வருடாந்த திருவிழாவின் இறுதி நாள் ஜோதிட கலாமணி சிவஶ்ரீ ஜி.என் திருக்கணேஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற 1008 சங்காபிஷேக நிகழ்வின் போது.

படங்கள்: ஆரையம்பதி தினகரன் நிருபர்

# சர்வதேச செய்திகள்

## 'ஹைப்பர்சோனிக்' ஏவுகணை தாக்குதலை நடத்தியது ரஷ்யா



உக்ரைனில் முதல் முறையாக புதிய கின்சல் ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளை பயன்படுத்தியதாக ரஷ்யா அறிவித்துள்ளது. அதனைக் கொண்டு நாட்டின் வடக்கில் இருக்கும் ஆயுதக் களஞ்சியம் ஒன்றை அழித்ததாக அது குறிப்பிட்டுள்ளது.

“இவானோ பிரான்கிஸ்க் பிராந்தியத்தின் டிலியாட்டின் கிராமத்தில் இருக்கும் ஏவுகணைகள் மற்றும் விமான வெடிபொருட்களைக் கொண்ட பெரிய நிலத்தடி களஞ்சியம் ஒன்று ஹைப்பர்சோனிக் ஏரோபாலிஸ்டிக் ஏவுகணைகளுடன் கின்சல் விமான ஏவுகணை அமைப்பினால் தாக்கி அழிக்கப்பட்டது” என்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் இகோர் கொனசென்கோவ் தெரிவித்துள்ளார். இந்தப் பிராந்தியம் நேட்டோ உறுப்பு நாடான ருமேனியாவின் எல்லையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இராணுவ நடவடிக்கை ஒன்றில் ரஷ்யா முதல் முறை ஹைப்பர்சோனிக் ஏவுகணையை பயன்படுத்தியது 2016 ஆம் ஆண்டு சிரியாவில் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்ய தாக்குதல்: உக்ரைன் படை வீரர்கள் பலரும் பலி



உக்ரைனிய இராணுவ முகாம் ஒன்றின் மீது ரஷ்யா நடத்திய தாக்குதலில் பெரும் எண்ணிக்கையான படையினர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

வடக்கு முனையில் இருக்கும் மைகோலைவ் நகரில் இருக்கும் இந்த முகாம் மீது மூன்று ரஷ்ய ஏவுகணைகள் தாக்குதல் நடத்தியபோது அங்கு சுமார் 200 படையினர் உறங்கிக் கொண்டிருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காயமடைந்த சுமார் 57 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றதாக மற்றொரு தரப்பு தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை பற்றி உத்தியோகபூர்வமாக உறுதி செய்யப்படவில்லை.

“குறைந்தது 50 சடலங்கள் இடிபாடுகளில் இருந்து மிட்கப்பட்டன. இடிபாடுகளில் இன்னும் எத்தனை பேர் சிக்கியுள்ளனர் என்று தெரியவில்லை” என்று மக்சிம் என்ற இராணுவ வீரர் ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

## இந்திய மத்திய அரசினால் 1.75 கோடி வீடுகள் நிர்மாணம்

பிரதமரின் ஊரக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 1.75 கோடி வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதாக இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் இது தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்கு மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் சாத்வி நிரஞ்சன் ஜோதி எழுத்து மூலம் அளித்த பதிலில் கூறியிருப்பதாவது: பிரதமரின் ஊரக வீடு கட்டும் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 2.28 கோடி வீடுகள் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில்,



மார்ச் 9ஆம் திகதி நிலவரப்படி 1.75 கோடி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## உலகின் மகிழ்ச்சியற்ற நாடாக ஆப்கான் பதிவு



உலகின் மகிழ்ச்சியான நாடுகள் வரிசையில் ஆப்கானிஸ்தான் கடைசி இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த ஓகஸ்ட் மாதம் தலிபான்கள் அந்த நாட்டை கைப்பற்றும் முன்னர் இருந்தே அது இந்த நிலையை பெற்றுள்ளது.

நேற்று கொண்டாடப்பட்ட உலக மகிழ்ச்சி தினத்தை ஒட்டி வெளியிடப்பட்ட வருடாந்த அறிக்கையில் இது வெளியாகியுள்ளது.

இந்தக் கணக்கெடுப்பில் இருக்கும் 149 நாடுகளிலேயே ஆப்கான் கடைசி இடத்தை பிடித்துள்ளது. அந்த நாட்டின் மகிழ்ச்சிப் புள்ளி 2.5 ஆக உள்ளது. இதில் உலகில் இரண்டாவது மகிழ்ச்சி அற்ற நாடாக லெபனான் இருப்பதோடு பொட்ஸ்வானா, ருவாண்டா மற்றும் சிம்பாப்வே கடைசி ஐந்து இடங்களில் இருக்கும் எஞ்சிய நாடுகளாகும்.

இதில் 7.8 புள்ளிகளை பெற்றிருக்கும் பின்லாந்து தொடர்ந்து நான்காவது ஆண்டாக முதல் இடத்தை பிடித்துள்ளது. தொடர்ந்து டென்மார்க், சுவிட்சர்லாந்து, ஐஸ்லாந்து மற்றும் நெதர்லாந்து முதல் ஐந்து இடங்களில் உள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளின் அடிப்படையிலேயே ஆய்வாளர்கள் இந்த முடிவை வெளியிட்டுள்ளனர்.

## உடன்பாட்டுக்கு வாய்ப்பு



தீர்க்கமான விவகாரங்கள் தொடர்பில் உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையே இணக்கம் ஒன்றை நெருங்கி இருப்பதாகவும் சில விடயங்களில் இணக்கம் எட்டப்பட்டிருப்பதாகவும் துருக்கி வெளியுறவு அமைச்சர் மெவ்லுத் கவசொக்லு தெரிவித்துள்ளார்.

உடன்பாடு ஒன்றை நோக்கி எட்டப்பட்டிருக்கும் முன்னேற்றத்தில் இருந்து இரு தரப்பும் பின்வாங்காவிட்டால், போர் நிறுத்தம் ஒன்றுக்கு வாய்ப்பு இருப்பதாகவும் டெய்லி ஹரியத் பத்திகைக்கு அளித்த போட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரஷ்யாவின் தாக்குதல்களால் மரியுபோல் நகரில் ‘பேரழிவு’

மரியுபோல் நகர் மீதான ரஷ்யாவின் முற்றுகையை ஒரு போர் குற்றம் என்று அழைத்திருக்கும் உக்ரைன் ஜனாதிபதி வொலொடிமிர் செலென்ஸ்கி, மூலோபாயம் கொண்ட அந்த நகர் ரஷ்யாவின் தொடர் தாக்குதல்களால் பெரும் பாதிப்பை சந்தித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

“இந்த அமைதியான நகர் மீது ஆக்கிரமிப்பாளர்கள் செய்திருப்பது பயங்கரமானது. அது நூற்றாண்டு காலத்திற்கு நினைவில் இருக்கும்” என்று நேற்று தனது வீடியோ உரையில் செலென்ஸ்கி தெரிவித்தார்.

முற்றுகைக்கு மத்தியில் பெரும் அழிவை சந்தித்திருக்கும் இந்த நகரில் ரஷ்யப் படைகள் ஆழமாக ஊடுருவி வருகின்றன. கடும் மோதல்கள் காரணமாக பிரதான இரும்புத் தொழிற்சாலை ஒன்று மூடப்பட்டிருப்பதோடு உள்ளூர் நிர்வாகம் மேலும் மேற்கத்திய உதவிகளை கோரியுள்ளது.

உக்ரைன் போரில் பெரும் பாதிப்புக்கு உள்ளான நகராக மரியபோல் மாரியுள்ளது. இங்கும் மின்சாரம், குடிநீர் இன்றி மக்கள் நிலவறைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.



“சிறுவர்கள், வயதானவர்கள் இறந்து வருகிறார்கள். இந்த நகரம் பூமியில் இருந்து அழிக்கப்பட்டுள்ளது” என்று மரியுபோல் பொலிஸ் அதிகாரியான மிகைல் வெர்ஷ்னின் இடிபாடுகள் சிதறிக் காணப்படும் வீதியில் நின்றபடி வீடியோ பதிவு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் 400 குடிமக்கள் அடைக்கலம் பெற்றிருந்த கலைக் கல்லூரி ஒன்றின் மீது ரஷ்யப் படை நேற்று ஞாயிற்றுக்கிழமை குண்டு வீசியதாக மரியுபோல் நகர சபை குறிப்பிட்டுள்ளது.

உக்ரைன் போர் ஆரம்பித்தது தொடக்கம் இதுவரை 847 பேர் கொல்லப்பட்டிருப்பதாக ஐ.நா கணித்தபோதும் உண்மையான எண்ணிக்கை இதனை விடவும் அதிகமாக இருக்கலாம் என்று அது குறிப்பிட்டுள்ளது.

இந்தப் போரால் 3.3 மில்லியனுக்கும் அதிகமான உக்ரைனியர்கள் நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர்.

## சீனாவில் ஓர் ஆண்டுக்கு பின் முதல் கொரோனா மரணங்கள்



சீனாவில் கடந்த ஓர் ஆண்டுக்கு மேற்பட்ட காலத்தில் இரு கொரோனா உயிரிழப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஒமிக்ரோன் திரிபு காரணமாக சீனாவில் நோய்த் தொற்று சம்பவங்கள் உச்சத்தைத் தொட்டிருக்கும் நிலையிலேயே இந்த உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன.

இதில் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் ஜிலின் மாகாணத்திலேயே இந்த உயிரிழப்புகள் பதிவாகி இருப்பதாக தேசிய சுகாதார அணைக்குழு தெரிவித்துள்ளது.

கடைசியாக 2021 ஜனவரியில் சீன தலைநிலத்தில் கொரோனா உயிரிழப்பு பதிவான நிலையில் தற்போது நோய்த் தொற்றினால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 4,638 ஆக உள்ளது.

சீனாவில் கடந்த சனிக்கிழமை 4,051 புதிய தொற்று சம்பவங்கள் பதிவாகின. நோய்த் தொற்றுக்கு எதிராக பல நகரங்களில் கடும் கட்டுப்பாடுகள் அமுலில் உள்ளன.

## ரஷ்யாவுக்கு அவுஸ்திரேலியா 'அலுமினா' ஏற்றுமதித் தடை

அவுஸ்திரேலியா, ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யும் அதன் அலுமினாத் தாதுப்பொருட்களைத் தடை செய்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்ததைக் கண்டிக்கும் நடவடிக்கைகளில் இந்தத் தடையும் ஒன்றாக அமைவதாய் அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்தது.

ரஷ்யாவின் அலுமினாத் தேவைகளில் 20 வீதத்தை அவுஸ்திரேலியா பூர்த்திசெய்து வந்தது. அலுமினியத்தின் உற்பத்திக்கு அலுமினாத் தாதுப்பொருள் தேவை.

அவுஸ்திரேலியாவின் தடை நடவடிக்கையால் ரஷ்யாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருளான அலுமினியத்தின் உற்பத்தி பாதிக்கப்படும் என்று நம்பப்படுகிறது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் நெருங்கியவர்கள் என்று நம்பப்படும் 443 வணிகர்கள் மீது மொத்தம் 446 தடைகளை அவுஸ்திரேலியா விதித்துள்ளது.



## ரஷ்ய விண்வெளி வீரர்களின் மஞ்சள் ஆடையால் குழப்பம்

சர்வதேச விண்வெளி நிலையத்தில் இணைந்த ரஷ்ய விண்வெளி வீரர்கள் மஞ்சள் நிற ஆடை அணிந்திருந்தது, உக்ரைனுக்கு ஆதரவானது என்று மேற்கத்திய ஊடகங்கள் வெளியிட்ட செய்தியை ரஷ்யா நிராகரித்துள்ளது.

“சில நேரங்களில் மஞ்சள் நிறம் என்பது வெறுமனே மஞ்சள் நிறம் தான்” என்று ரஷ்ய விண்வெளி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

“புதிய விண்வெளி வீரர்களின் விண்வெளி அங்கி அந்த மூன்று விண்வெளி வீரர்கள் பட்டம் பெற்ற மொஸ்கோ தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் சின்னமாகும். எல்லா இடங்களிலும், எல்லாவற்றிலும் உக்ரைன் கொடியை பார்ப்பது முட்டாள்தனமானது” என்று அது குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச விண்வெளி நிலையம் ரஷ்யா, அமெரிக்கா, கனடா, ஜப்பான் மற்றும் பல ஐரோப்பிய நாடுகளின் கூட்டுத் திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.



## சிரிய ஜனாதிபதி அசாத் அரபு நாட்டுக்கு பயணம்



பதினொரு ஆண்டுகளுக்கு முன் சிரிய உள்நாட்டு போர் ஆரம்பிக்கப்பட்ட பின் சிரிய ஜனாதிபதி பஷர் அல் அஸாத் அரபு நாடு ஒன்றுக்கு முதல் முறை பயணம் மேற்கொண்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு சென்ற அவர் பல செல்வாக்கு மிக்கவர்களை சந்தித்துள்ளார். முன்னர் அரபு அண்டை நாடுகளால் தனிமைப் படுத்தப்பட்டிருந்த அஸாத் மீண்டும் தனது உறவை பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதை இது காட்டுகிறது.

எனினும் இந்த விஜயம் பற்றி எதிர்ப்பை வெளியிட்டிருக்கும் அமெரிக்கா, பெரும் ஏமாற்றத்தை தருவதாக குறிப்பிட்டுள்ளது.

2011 மார்ச் மாதம் ஆரம்பமான சிரிய உள்நாட்டு யுத்தத்தில் இதுவரை 350,000க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக ஐ.நா குறிப்பிட்டுள்ளது.

## ஸ்பெயினுக்கான அல்ஜீரிய தூதுவர் திரும்ப அழைப்பு

சர்ச்சைக்குரிய நிலப்பகுதியில் மொரோக்கோவின் தன்னாட்சி திட்டத்திற்கு ஆதரவு வழங்கிய ஸ்பெயினின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நாட்டுக்கான தனது தூதுவரை அல்ஜீரியா திரும்ப அழைத்துக் கொண்டுள்ளது.

ஸ்பெயினின் இந்த திடீர் முடிவை கண்டிப்பதாக அல்ஜீரிய வெளியுறவு அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. பல தசாப்தங்களாக மோதல் இடம்பெற்று வரும் மொரோக்கோ மற்றும் அல்ஜீரியாவுக்கு இடையிலான நிலப்பகுதி தொடர்பில் ஸ்பெயின் இதுவரை காலமும் மத்தியஸ்த நிலைப்பாட்டையே பேணி வந்தது.




இங்கு தமது இறைமையின் கீழ் மேற்கு சஹாரா தன்னாட்சியை வழங்கும் மொரோக்கோவின் திட்டத்தை ஆதரிப்பதாக ஸ்பெயின் வெளியுறவு அமைச்சர் ஜோஸ் மனுவேல் அல்பெரஸ் கடந்த வெள்ளிக்கிழமை குறிப்பிட்டிருந்தார்.

## பள்ளிவாசலுக்கு கோடாரியுடன் வந்த ஆடவர் மடக்கிப் பிடிப்பு



கனடா பள்ளிவாசல் ஒன்றில் கடந்த சனிக்கிழமை காலை தொழுகையின்போது கோடாரி மற்றும் கரடிகளை கட்டுப்படுத்த பயன்படுத்தும் திரவம் ஒன்றை தெளித்து தாக்குதல் நடத்த முயன்ற நபரை அங்கு வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

ஒரு வழிபாட்டாளர் அந்த ஆடவரிடம் இருந்து கோடாரியை பறித்திருப்பதோடு, சம்பவ இடத்திற்கு பொலிஸார் வரும் வரை அவர் பிடித்து வைக்கப்பட்டுள்ளார் என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. மிசிசவுகா புறநகர் பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தை அடுத்து 24 வயதான ஆடவர் கைது செய்யப்பட்டு அவர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சில வழிபாட்டாளர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகி இருப்பதாக பள்ளிவாசல் இமாம் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டில் பணிபுரிகின்ற இலங்கையர்கள் மற்றும் பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிப் பெறுகைகளை பெற்றுக்கொள்பவர்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நாணயம் வைத்திருப்போருக்கு

## இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலிடுவதற்கான வாய்ப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## இலங்கை அபிவிருத்தி முறிகள்

வழங்கல்

(ஐக்கிய அமெரிக்க டொலரில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள்)

பொதுப்படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**முதலீடும் தீர்ப்பனவும் : 2022 மார்ச் 18 இலிருந்து திறக்கப்படும் அத்துடன் மறுஅறிவித்தல் வரை திறக்கப்பட்டிருக்கும்**

| | | |
|---|---|---|
| நாணயம் | : | ஐக்கிய அமெரிக்க டொலர் |
| காலம் மற்றும் வட்டி வீதம் | : | தயவுசெய்து கீழே அட்டவணையைப் பார்க்க |
| வட்டிக் கொடுப்பனவுகள் | : | ஆண்டிற்கு இரு தடவை |
| முதலீட்டுத் தொகை | : | குறைந்தபட்சம் 1,000 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் மற்றும் 1,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களின் பெருக்கங்களிலிருந்து |
| வரி | : | இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலிடுவதற்கு பிடித்துவைத்தல் வரி இல்லை |
| வழங்கும் அலுவலகம் | : | பொதுப்படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி |
| முறிகளைக் கொள்வனவு செய்வதற்காக குறித்துரைக்கப்பட்ட முகவர்கள் | : | தெரிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் |

உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறித்துரைக்கப்பட்ட முகவர் ஊடாக அல்லது முதலீட்டாளர்களினால் நேரடியாக fopdd@cbsl.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்கப்படலாம். முதலீட்டாளர்களால் நேரடியாகச் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் முதலீட்டு ஏற்பாடுகளுக்காக முதலீட்டாளர் விரும்புகின்ற பெயர்குறிக்கப்பட்ட முகவருக்கு விண்ணப்பம் அனுப்பப்படும்.

கொண்டுவரப்பட்ட முதலீட்டுத் தொகை மீது 50 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட ஊக்குவித்தல் அத்துடன்/ அல்லது கையாளுதல் கட்டணம் பெயர்குறிக்கப்பட்ட முகவர்களுக்கு ஊக்குவிப்பாக வழங்கப்படும். இக்கட்டணம் முதலீடுகளின் ஏற்பாட்டாளர்களுடன்[1] சேர்த்து பெயர்குறிக்கப்பட்ட முகவர்களால் பகிரப்படலாம்.

[1] இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீட்டினைக் கொண்டு வருகின்ற ஏதேனும் நிறுவனம் அல்லது தனிப்பட்டவர்.

### கிடைக்கப்பெறுகின்ற இலங்கை அபிவிருத்தி முறியின் முதிர்ச்சிகளும் முதலீட்டிற்கு ஏற்புடைய நிலையான வீதங்களும்[2]

| 2022 மார்ச் 18 அன்று உள்ளவாறான எஞ்சியுள்ள முதிர்ச்சி | ஏற்புடைய நிலையான வீதம் (ஆண்டுக்கான சதவீதம்) |
|---|---|
| 7 மாதம் | 8.50 |
| 10 மாதம் | 8.75 |
| 1 வருடம் 1 மாதம் | 8.85 |
| 1 வருடம் 10 மாதம் | 8.90 |
| 2 வருடம் 1 மாதம் | 8.92 |
| 2 வருடம் 10 மாதம் | 8.95 |
| 3 வருடம் 10 மாதம் | 8.95 |
| 4 வருடம் 4 மாதம் | 8.95 |
| 4 வருடம் 9 மாதம் | 8.95 |

[2] அடுத்த இலங்கை அபிவிருத்தி முறி ஏலத்தின் தொடக்கம் வரை மாற்றமின்றி காணப்படும். மேலே குறிப்பிட்ட இணைய இணைப்பினூடாக அணுகக்கூடிய முன்வைப்பு தகவல் ஆவணத்தில் மேலதிக விபரங்கள் கிடைக்கப்பெறுகின்றன.

### பெயர்குறிக்கப்பட்ட முகவர்கள் அட்டவணை

அக்குபிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட், தொலைபேசி: 2206297| இலங்கை வங்கி தொலைபேசி: 2448830| கப்பிட்டல் அலையன்ஸ் லிமிடெட், தொலைபேசி: 2317725| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி, தொலைபேசி: 2330406| டொயிஷ் வங்கி ஏஜி, கொழும்பு கிளை, தொலைபேசி: 2447062| எச்எஸ்பிசி வங்கி பிஎல்சி, தொலைபேசி: 2350000| பெஸ்ட் கப்பிட்டல் ரெசரீஸ் பிஎல்சி, தொலைபேசி: 2639881-2| ஹட்டன் நசனல் வங்கி பிஎல்சி, தொலைபேசி: 2664850-3| இந்தியன் வங்கி, தொலைபேசி: 2447163| இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தொலைபேசி: 5324422| எம்சிபீ பாங் லிமிடெட், தொலைபேசி: 2448765| நஷனல் டெவலப்மென்ட் பாங்க் பிஎல்சி, தொலைபேசி: 2446994| நேஷன்ஸ் ரஸ்ட் வங்கி பிஎல்சி, தொலைபேசி: 4313100| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடெட், தொலைபேசி: 2425010| பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி, தொலைபேசி: 4667508| மக்கள் வங்கி, தொலைபேசி: 2206754-6| பப்ளிக் பாங்க் பேர்காட், தொலைபேசி: 2576289 (நீடிப்பு இல: 250)| சம்பத் வங்கி பிஎல்சி, தொலைபேசி: 2305841-2| செலான் வங்கி பிஎல்சி, தொலைபேசி: 2456303| யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி, தொலைபேசி: 2374133| வெல்த் ரஸ்ட் செக்குரிட்டீஸ் லிமிடெட், தொலைபேசி: 2675091-4.

### தகைமையுடைய முதலீட்டாளர்கள்

(அ) உள்முக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக அவர்களுடைய வதிவிட அந்தஸ்தினைப் பொருட்படுத்தாது வெளிநாடுகளின் பிரசைகள்

(ஆ) உள்முக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கைப் பிரசைகள்.

(இ) தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளை, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளை அல்லது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுக் கணக்குகளை வைத்திருப்போர்.

(ஈ) உள்முக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் அல்லது இலங்கைக்கு வெளியில் பதிவுசெய்யப்பட்ட பங்குடமைகள்.

(உ) உள்முக முதலீட்டுக் கணக்குகள் ஊடாக இலங்கைக்கு வெளியில் நிறுவப்பட்ட நாட்டு நிதியங்கள், பிராந்திய நிதியங்கள், பரஸ்பர நிதியங்கள், கூறு நம்பிக்கைகள் மற்றும் நிறுவனசார் முதலீட்டாளர்கள்.

(ஊ) இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்.

(எ) வெளிநாட்டு நாணய வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்.

வழங்கல் பற்றிய மேலதிக தகவல்களையும் விண்ணப்பப் படிவங்களையும் தரப்பட்ட இணைய இணைப்பின் அல்லது QR குறியீட்டின் ஊடாக மூன்று மொழிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**https://www.cbsl.gov.lk/Sri-Lanka-Development-Bonds**

குறிப்பு: இலங்கை அபிவிருத்தி முறிகளை பெற்றுக்கொள்ளல் தொடர்பான தேவையான அறிவுறுத்தல்கள் இலங்கை மத்திய வங்கியால் அனைத்து வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. முன்வைப்பு தொடர்பான விபரங்கள் 2022 மார்ச் 18ஆம் திகதியிடப்பட்ட முன்வைப்பு ஆவணத்தில் கிடைக்கப்பெறுகின்றது.

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மூலம் வழங்கப்படும்

# இலங்கை அபிவிருத்தி முறிகள்

வழங்கல்

# விண்ணப்பப் படிவம்

ஐக்கிய அமெரிக்காவில் ஏற்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் காரணமாக, இலங்கை அபிவிருத்தி முறிகள் வழங்கலின் காலச்சட்டகத்திற்குள் ஐக்கிய அமெரிக்காவில் இவ்வழங்கலை மேற்கொள்வதற்கான சாத்தியப்பாடு காணப்படவில்லை. அதற்கமைய, இவ்வழங்கல் ஐக்கிய அமெரிக்காவிற்கு அல்லது ஐக்கிய அமெரிக்க ஆட்களுக்கு நீடிக்கப்படவில்லை. இலங்கை அபிவிருத்தி முறிகள், ஐக்கிய அமெரிக்காவிற்கு அல்லது அந்நாட்டினுள் அல்லது ஐக்கிய அமெரிக்க ஆட்களுக்கு வழங்கப்படாமல், விற்கப்படாமல், மீள்விற்பனை செய்யப்படாமல், வாக்குறுதியளிக்கப்படாமல், மாற்றப்படாமல், குறித்தொதுக்கப்படாமல் அல்லது விநியோகிக்கப்படாமல் இருக்கலாம். ஐக்கிய அமெரிக்காவிற்குள் அல்லது ஐக்கிய அமெரிக்க ஆளொருவருக்கு இலங்கை அபிவிருத்தி முறிகளின் எத்தனிக்கப்பட்ட ஏதேனும் விற்பனை, மீள்விற்பனை, வாக்குறுதி, மாற்றல், குறித்தொதுக்கல் அல்லது விநியோகம் என்பன இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படமாட்டாது அல்லது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஐக்கிய அமெரிக்காவில் உள்ள அல்லது ஐக்கிய அமெரிக்காவிலிருந்து தோன்றுகின்ற முகவரியொன்றுடன் அல்லது ஐக்கிய அமெரிக்காவிற்கு இலங்கை அபிவிருத்தி முறிகளை விநியோகிப்பதற்கு கோருகின்ற இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கான ஏதேனும் விண்ணப்பம் அல்லது ஐக்கிய அமெரிக்க ஆளொருவருக்கு இலங்கை அபிவிருத்தி முறிகளின் மாற்றல் பற்றிய ஏதேனும் அறிவித்தல் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**(விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்வதற்கு முன்னர் இலங்கை அபிவிருத்தி முறிகளின் "வழங்கல் ஆவணத்தில்" தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை தயவுசெய்து பார்க்கவும்)**

கண்காணிப்பாளர்
பொதுப்படுகடன் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01.
இலங்கை

கனம் ஐயா,

2022 மாச்சு 18ஆம் திகதியிடப்பட்ட இலங்கை அரசாங்கத்தினால் (வழங்குநர்) வழங்கப்பட்ட "வழங்கல் ஆவணத்தின்" நியதிகளுக்கமைவாக இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலிடுவதற்காக நான்/நாங்கள் இத்தால் விண்ணப்பிக்கின்றேன்/விண்ணப்பிக்கின்றோம். சொல்லப்பட்ட வழங்கல் ஆவணத்தை உரியவாறு வாசித்து புரிந்துகொண்டேன்/புரிந்துகொண்டோம் என்றும் வழங்கலுக்கு ஏற்புடைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் முழுமையாக அறிந்துகொண்டுள்ளேன்/ அறிந்துகொண்டுள்ளோம் எனவும் நான்/ நாங்கள் உறுதிப்படுத்துகின்றேன்/உறுதிப்படுத்துகின்றோம். விண்ணப்பத்தை முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்றுக்கொள்வதற்கான அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை வழங்குநர் கொண்டுள்ளார் என நான்/நாம் மேலும் அறிவேன்/அறிவோம்.

வழங்கல் ஆவணத்திற்கமைவாக உங்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறான என்னால்/ எங்களால் விண்ணப்பிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறியை/ முறிகளை கொள்வனவுசெய்வதற்கு இத்தால் உடன்படுகின்றேன்/ உடன்படுகின்றோம். எனக்கு/ எங்களுக்கு வழங்கப்படக்கூடிய இலங்கை அபிவிருத்தி முறியின்/முறிகளின் உடமையாளராக/ உடமையாளர்களாக பதிவுசெய்யப்படுவதற்கு என்னை/ எங்களை இயலச்செய்வதற்கு எனது/ எமது பாகத்தின் மீது, ஏதேனுமிருப்பின், தேவைப்படுகின்றவாறு அத்தகைய ஏனைய அனைத்து ஆவணங்களிலும் நான்/ நாங்கள் கையொப்பமிடுவேன்/ கையொப்பமிடுவோம் என்றும் தேவைப்படுகின்றவாறு அத்தகைய ஏனைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கும் நான்/ நாங்கள் இத்தால் பொறுப்பேற்றுக்கொள்கின்றேன்/ பொறுப்பேற்றுக்கொள்கின்றோம். இவ் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான எனது/ எமது பெயர்/ பெயர்கள், முகவரி/முகவரிகள் மற்றும் ஏனைய விடயங்களை உங்களுடைய புத்தகங்களிலும் பதிவுகளிலும் பதிவுசெய்வதற்கு உங்களுக்கு நான்/நாங்கள் இத்தால் அதிகாரமளிக்கின்றேன்/ அதிகாரமளிக்கின்றோம்.

சொல்லப்பட்ட வழங்கல் ஆவணத்தின் நியதிகளுக்கமைவாக நான்/நாங்கள் தகுதியுடைய முதலீட்டாளர்/ முதலீட்டாளர்கள் எனவும் வழங்கல் ஆவணத்தின் நியதிகளுக்கமைவாக ஏதேனும் தகுதியின்மைக்கு உட்படவில்லை எனவும் நான்/நாங்கள் இத்தால் உறுதியளிக்கின்றேன்/ உறுதியளிக்கின்றோம்.

இவ்விண்ணப்பத்தின் அடிப்படையில் எனக்கு/ எங்களுக்கு இலங்கை அபிவிருத்தி முறி/ முறிகள் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில், நான்/ நாங்கள், இலங்கை அபிவிருத்தி முறிக்கு அத்துடன் வழங்கல் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்புடைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு நிபந்தனையின்றியும் மாற்றமுடியாதவாறும் நான்/ நாங்கள் பிணிக்கப்படுவதற்கு பொறுப்பேற்கின்றேன்/ பொறுப்பேற்கின்றோம்.

**1. விண்ணப்பதாரியின் விபரங்கள்**

1.1 தலைப்பு: திரு. / திருமதி. / செல்வி. / வண. / கலாநிதி. / வேறு.

1.2 கடைசிப் பெயர்

1.3 முதலெழுத்துக்கள்

1.4 முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்

1.5 அஞ்சல் முகவரி

1.6 தொலைபேசி இலக்கம்

1.7 தொலைநகல் இலக்கம்

1.8 மின்னஞ்சல் முகவரி

1.9 தேசியம் / கூட்டிணைவு நாடு

1.10 தகைமை: அ / ஆ / இ / ஈ / உ / ஊ / எ (தயவுசெய்து கூட்டினுள் ✓ அடையாளம் இடவும்)

1.11 வரி அடையாள இலக்கம் (TIN)

1.12 அடையாள அட்டை இலக்கம் (தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/பதிவு)

**2. விண்ணப்பிக்கும் முதிர்ச்சிக் காலம்**

2.1
- 7 மாதங்கள்
- 10 மாதங்கள்
- 1 ஆண்டு 1 மாதம்
- 1 ஆண்டு 10 மாதங்கள்
- 2 ஆண்டுகள் 1 மாதம்
- 2 ஆண்டுகள் 10 மாதங்கள்
- 3 ஆண்டுகள் 10 மாதங்கள்
- 4 ஆண்டுகள் 4 மாதங்கள்
- 4 ஆண்டுகள் 9 மாதங்கள்

(தயவு செய்து கூட்டினுள் ✓ அடையாளம் இடவும்)

**3. விண்ணப்பிக்கும் தொகை (ஐ.அ.டொலர்களில்)**

3.1 இலக்கங்களில்

3.2 எழுத்துக்களில்

**4. வட்டி வீதம்**

4.1 இலக்கங்களில்

4.1.1 நிலையான வீதம் அடிப்படைப் புள்ளிகள்

4.2 எழுத்துக்களில்

4.2.2 நிலையான வீதம்

4.3 தீர்ப்பனவுத் திகதி அடிப்படைப் புள்ளிகள்

**5. வட்டி கொடுப்பனவுகள் மற்றும் முதன்மைத்தொகை மீள்கொடுப்பனவிற்குமான அறிவுறுத்தல்கள்**

5.1 நீங்கள் கொடுப்பனவுகளை எவ்வாறு பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்கள்? காசோலை / வங்கியில் நேரடியாக வரவு வைத்தல்

5.2 வங்கிக் கணக்கொன்றிற்கு நேரடியாக வரவு வைப்பதன் மூலம் நீங்கள் கொடுப்பனவுகளைப் பெற விரும்பினால், தயவுசெய்து பின்வரும் தகவல்களை வழங்கவும்.

5.2.1. கணக்கு இலக்கம்

5.2.2 வங்கியின் பெயர்

5.2.3 வங்கியின் முகவரி

5.2.4 வங்கி அடையாளக் குறியீடு (BIC), அறிந்திருப்பின்

**6. நியமிக்கப்பட்ட பெயர் குறிக்கப்பட்ட முகவர்**

என்னால் வழங்கப்பட்ட மேற்குறித்த விடயங்கள் யாவும் உண்மையானதெனவும் சரியானதெனவும் நான் சான்றுபடுத்துகின்றேன்

**7. விண்ணப்பதாரியின் கையொப்பம்** ........................................ **திகதி** ............................

**8. பெயர் குறிக்கப்பட்ட முகவரினால் பூரணப்படுத்தப்படல் வேண்டும்**

8.1 பெயர் குறிக்கப்பட்ட முகவரின் பெயர்

8.2 முகவரி

**9. முதலீடானது ஒழுங்கேற்பாளரினால் வசதிப்படுத்தப்படுமாயின்,**

9.1 ஒழுங்கேற்பாளரின் பெயர்

9.2 தொலைபேசி இலக்கம்

9.3 மின்னஞ்சல் முகவரி

**பெயர் குறிக்கப்பட்ட முகவரின் கையொப்பம்** ........................................ **முத்திரை** ............................

**திகதி** ............................

இணைந்த விண்ணப்பங்கள், கட்டுக்காப்பு ஒழுங்கேற்பாடுகள் அல்லது பெயர்குறித்தல் ஒழுங்கேற்பாடு போன்றவற்றிற்காக தயவுசெய்து வழங்கப்பட்டுள்ள QR குறியீட்டினூடாக விண்ணப்பத்தை தரவிறக்கம் செய்துக்கொள்ளவும்.

முனைவர் எம். இசட். எம். ஆசிம்
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்
பொதுப்படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 1

தொலைபேசி : 2477011
தொலைநகல் : 2477687, 2477718 /9
http:// www.cbsl.gov.lk

# நகர்வலம்



## அமுத விழா ஆண்டில் நடத்தும் நிறுவுனர் தின விழாவும், தமிழிசைச் சங்கமும்

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் அமுத விழா ஆண்டில் நடாத்தும் நிறுவுனர் தின நிகழ்வு 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வட மாகாண உள்ளூராட்சி அலுவலக செயலாளரான திரு. இலட்சுமணண் இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக பணிப்பாளரான திரு.யதுகுலசிங் அநிருத்தனன், வெள்ளவத்தை மக்கள் வங்கி முகாமையாளரான திரு.க.சி. மணிமாறன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

"தமிழ்ச் சங்கம் கடந்து வந்த பாதை" எனும் தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத்தலைவர் திரு.மா.கணபதிப்பிள்ளை அவர்கள் சிறப்புரையை நிகழ்த்தவுள்ளார்.

செல்வி வைசாலி யோகராஜா "தமிழிசை" வழங்க, அணியிசையாக வயலின் திரு.ச.திபாகரன், மிருதங்கம் திரு.வி.வேனிலான் ஆகியோர் வழங்குவர். நன்றியுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க பொதுச்செயலாளர் திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி ஆற்றுவார்.

தென் மாகாணத்தில்;

## மரக்கறி உற்பத்தி செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிக்க திட்டம்

### விவசாய திணைக்களம் 09 மில். ஒதுக்கீடு

மாத்தறை தினகரன் நிருபர்

தென் மாகாணத்தில் வர்த்தக ரீதியில் மரக்கறி உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இதற்காக தென்மாகாண விவசாய திணைக்களம் 09 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஏ.யூ வேலரத்ன தெரிவித்தார்.

காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் இந்த வேலைத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர். இவ் விவசாயிகளுக்குத் தேவையான சேதனப் பசளை, மரக்கறி விதைகள் மற்றும் தொழில் நுட்ப ஆலோசனைகள் என்பன மாகாண விவசாயத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

கால், அரை ஏக்கர்களில் மரக்கறி செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை ஊக்குவித்து மரக்கறி உற்பத்திகளை அதிகரிப்பதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும் என செயலாளர் ஏ.யூ வேலரத்ன மேலும் தெரிவித்தார். தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் தற்போது மரக்கறி செய்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் இவ் விவசாயிகள் உற்பத்தி செய்யும் மரக்கறிகள் புத்தாண்டு காலத்தில் சந்தைக்கு விற்பனைக்காக வரும் என்றும் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## களுத்துறை மாவட்டத்தில் முதல் இடம் பெற்று சாதனை




ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தமிழ் மொழி மூலம் 182 மதிப்பெண்களைப் பெற்று களுத்துறை மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றுள்ள களுத்துறை முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலய மாணவி செல்வி ஆய்ஷத் ருகையா அர்ஷாத் தனது கல்லூரிக்கும் களுத்துறை மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவர் அர்ஷத் ஜமால், ஆசிரியை நஸூஹா ரியால் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியாவார். இவரை களுத்துறை நகர சபை உருப்பினர் ஹிஷாம் ஸுஹைல் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார்.

## யானை - மனித மோதலை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை

### இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க

திறப்பனை தினகரன் நிருபர்



மகவிலச்சிய பிரதேச செயலக பிரிவில் ஏற்பட்டுள்ள யானை மனித மோதலை குறைக்கும் நோக்கில் வேலை திட்டம் ஒன்றை முன்னெடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்சமயம் இப் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மின்சார வேலிகளுக்கு அருகாமையில் பாதுகாப்பான காவல் அரண்களை அமைத்து இதற்காக சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார். இவ் வேலை திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதோடு இதனால் மின்சார வேலிகளுக்கு பாதுகாப்புக் கிடைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் காட்டு யானைகள் கிராமிய பிரதேசங்களுக்குள் படையெடுப்பதை தவிர்த்துக்கொள்ளும் வாய்ப்பும் கிடைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ் வேலை திட்டம் மகவிலச்சியயாய 4, கரம்பகொல்லாவ ஆகிய கிராமிய பிரதேசங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை பார்வையிட அமைச்சர் இப் பகுதிகளுக்கான விஜயம் ஒன்றை அண்மையில் மேற்கொண்டிருந்தார். குறிப்பிட்ட இத் திட்டம் வெற்றியளிப்பின் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுப்பதாகவும் ராஜாங்க அமைச்சர் இதன்போது மேலும் தெரிவித்தார்.



ஈராக் நாட்டின் பக்தாத்தைச் சேர்ந்த ஷேக் அப்துல் காதர் ஜீலானி காதிர் ஒழுங்கு நிறுவுனர் ஹாஷிம் அல் ஜெய்லானி அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட போது கையடக்கத் தொலைபேசி விற்பனையாளரும் கிறின் வெயார் டெக்னோலெஜிஸ் பிரைவட் லிமிட்டெட் உரிமையாளரும் பிரபல வியாபாரியுமான அல்ஹாஜ் தாஹிர் ஸித்தீக் உட்பட குடும்பஸ்தர்கள் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகத்தில் வரவேற்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். படம்: கொழும்பு மத்திய விசேட நிருபர்

## செல்வன் அத்பி 172 புள்ளிகள்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்



கெப்பிதிகொல்லாவ கல்வி வலத்திற்குட்பட்ட ஹொரவப்பொத்தானை வீரச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் வெளியான புலமைப்பரிசில் பரீட்சையில் எம்.எச்.எம். அத்பி என்ற மாணவன் 172 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இவர் எஸ்.எம்.எம்.ஹனீபா (ஆசிரியர்), எச்.எம்.நஸ்மியா ஆசிரியை ஆகியோரின் புதல்வராவார்.



பொருட்களின் விலை ஏற்றத்தால் மக்கள் பொருட்களை குறைந்தளவிலே கொள்வனவு செய்வதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். கொழும்பு ஐந்தாம் குறுக்குத்தெரு மரக்கறிச் சந்தையில் (19) பெருமளவான மரக்கறி மற்றும் பழ வகைகள் இருந்தும் மக்கள் குறைந்தளவு பொருட்களை கொள்வனவு செய்வதைக் காண முடிந்தது. படம்: ஏ.எஸ்.எம்.ஜாவித்

## கொழும்பு பெரிய பள்ளிவாசலில் வருடாந்த பிறைக்குழு மாநாடு



பேருவளை விசேட நிருபர்

கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள் ஒழுங்கு செய்த வருடாந்த பிறைக் குழு மாநாடு அதன் தலைவரும் வத்தளை அபூஹுரைரா அரபுக்கல்லூரி அதிபருமான கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.பி.எம். ஹிஷாம் (பத்தாஹி) தலைமையில் (20) பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

ஹிஜ்ரி 1443 ரமழான் மற்றும் ஷவ்வால் மாதங்களுக்குண்டான தலைப் பிறைகளின் வானியற் கணிப்பீடுகள் என்ற தலைப்பில் மௌலவி எம்.ஆர் அப்துர் ரஹ்மானும், பிறை பார்த்தலின் முக்கியத்துவம் என்ற தலைப்பில் மௌலவி ஏ.எல்.எம் மஸீன் மஹ்தூமி (ஹஸனி) யும் தலைப் பிறையை தீர்மானிப்பதில் சாட்சியத்தின் வகிபாகம் என்ற தலைப்பில் மௌலவி சீ.ஐ.எம் அஸ்மீர் (ஹஸனி) யும், கொழும்பு பெரிய பள்ளிவாசலின் கடந்த கால வரலாறு என்ற தலைப்பில் மௌலவி ஏ.எச்.ஏ சுஹைப் ஹஸனியும் உரை நிகழ்த்தினர்.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபைத்தலைவர் எம். தௌபீக் ஸுபைர் உட்பட மற்றும் பலரும் இங்கு உரை நிகழ்த்தினர்.

இம்மநாநாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசலின் அகில இலங்கை ரீதியிலான உப பிறைக்குழுக்களின் உறுப்பினர்கள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், இமாம்கள், அரபுக் கல்லூரிகளின் உஸ்தாத்மார்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள் உட்பட உலமாக்கள், புத்திஜீவிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## பாத்திமா சாரா 166 புள்ளிகள்

பாணந்துறை மத்திய குறூப் நிருபர்



அண்மையில் வெளியாகிய 5ஆம் தரம் புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் படி பாணந்துறை அல்பஹ்ரியா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவி எம்.ஆர். பாத்திமா சாரா 166 புள்ளிகள் பெற்று தனது பாடசாலையில் இரண்டாம் நிலையில் சித்தியடைந்து பாடசாலைக்கும், பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவர் பாணந்துறை தொட்டவத்தையைச் சேர்ந்த முகம்மது ரம்ஸீன், ஸீனதுல் பர்ஸானா தம்பதிகளின் புதல்வியாவார்.

மேற்படி மாணவிக்கு பாடசாலை சமூகம் பாராட்டு தெரிவித்துள்ளது.

## வீடொன்றிலிருந்து பெறுமதியான தங்க நகைகள் கொள்ளை

அநுராதபுரம் தினகரன் நிருபர்

மாமினியாவ பகுதியிலுள்ள வீடொன்றில் 15 இலட்சத்துக்கும் அதிகம் பெறுமதி வாய்ந்த தங்க நகையினை கொள்ளையடித்துச் சென்றுள்ள சம்பவமொன்று இடம் பெற்றுள்ளதாக மரதன்கடவல பொலிஸார் தெரிவித்தனர்.

மரதன்கடவல பொலிஸ் பிரிவிலுள்ள மாமினியாவ பகுதியிலுள்ள வீடொன்றிலேயே கடந்த 17 ஆம் திகதி இரவு இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, சம்பவ தினத்தன்று இரவு முகமூடிகளை அணிந்த வண்ணம் கூரிய ஆயுதங்களுடன் வீட்டுக்குள் புகுந்த மூவரே வீட்டு உரிமையாளர்களை அச்சுறுத்தி தங்க நகையினை கொள்ளையடித்து விட்டு தப்பிச் சென்றுள்ளதாக வீட்டு உரிமையாளரினால் பொலிஸ் நிலையத்தில் செய்துள்ள முறைப்பாட்டிலிருந்து மேலும் தெரிய வந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய கொள்ளையர்களை கைது செய்வதற்காக வேண்டி மரதன்கடவல பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பொருளாதார திட்டம் அவசியம்

### ஐ.தே.க இரத்தினபுரி அமைப்பாளர் ஆனந்தகுமார்



மோசமான பொருளாதாரக் கொள்கைகளால் நாடு பாரதூரமான பொருளாதார நெருக்கடிகளை சந்திக்க நேரிட்டுள்ளது. இந்த பொருளாதார நெருக்கடிகளை மத்தியதர வர்க்கத்தாலே எதிர்கொள்ள முடியாதுபோயுள்ள சூழலில் மிகவும் வருமானம் குறைந்த பெருந்தோட்ட மக்களால் எவ்வாறு சுமைகளை தாங்கிக் கொள்ள முடியும் என கேள்வியெழுப்பியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் கேள்வியெழுப்பியுள்ளார். அத்துடன் உடனடியாக பெருந்தோட்ட மக்கள் தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சமகால பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

கடந்த 2019ஆம் ஆண்டு இறுதியில் நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. அதற்கு முன்னர் பொருளாதார முகாமைத்துவத்தை நான்கு வருடங்களாக பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் ஐ.தே.க மேற்கொண்டிருந்ததை காணமுடியும்.

அரசாங்கத்தின் வரிக் கொள்கைகள் மற்றும் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பில் ஆரம்பத்திலேயே ஐ.தே.க எச்சரித்திருந்தது.

பெட்ரோல், டீசல் தொடர்பில் முறையான பொறிமுறையொன்று எமது அரசாங்கத்தில் காலத்தில் பேணப்பட்டது. இன்று அவ்வாறில்லை. கடந்த சில வாங்களாக பெற்றோல் டீசலின் விலை உலக சந்தையில் அதிகரித்திருந்தது. அதைபோல் உள்நாட்டு சந்தையிலும் பன்மடங்காக எரிபொருள் விலை உயர்ந்துள்ளது.

ஆகவே, கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரசாங்கம் விசேட பொருளாதாரத் திட்டங்களை முன்மொழிந்து உடனடியாக அதனை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டுமென அவர் கேட்டுள்ளார்.



சுபிட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்தின் கீழ் கிராம அதிகாரி பிரிவு மட்டத்தில் வறிய குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் நோக்கின் பிரகாரம் பண்டாரகம பிரதேச செயலகப் பிரிவல் தெரிவு செய்யப்பட்ட குடுபங்களுக்கான வீடமைப்பு நிதியுதவி வழங்கும் நிகழ்வு தொகுதியின் ஶ்ரீலங்கா பொதுசன முன்னணி அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் குடும்பங்களுக்கு நிதியுதவி காசோலை வழங்கி வைப்பதைப் படத்தில் காணலாம். படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்

## புத்தளத்தில் டெங்கு ஒழிப்பு திட்டம் முன்னெடுப்பு



புத்தளம் தினகரன் நிருபர்

புத்தளம் நகர் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் டெங்கு அபாயம் அதிகரித்து வருகின்ற காரணத்தினால் புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம். ரபீக்கின் வழிகாட்டலின் கீழ், நகரசபையினால் பாரிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் தில்லையடி, சதாமியாபுரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது.

புத்தளம் நகரசபை உறுப்பினர் ரனீஸ் பதூர்தீன் தலைமையில் சக நகரசபை உறுப்பினர் டில்ஷானின் நெறிப்படுத்தலுடன் இத்திட்டம் சிறந்த முறையில் நடைபெற்றது.

இந்நிகழ்வை புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், தில்லையடி பள்ளிவாசல் சம்மேளனம், தில்லையடி மகளிர் மற்றும் இளைஞர் விளையாட்டு கழகங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுக்கு நகரசபை தனது முழு வளங்களையும் வழங்கி பங்களிப்புச் செய்ததுடன் அப் பகுதிகளில் பல வடிகான்களும் நகர சபையால் துப்புரவு செய்யப்பட்டமை விசேட அம்சமாகும்.

# இளம் யுவதி சடலமாக மீட்பு

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி சிவன் கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் சனிக்கிழமை காலை தூக்கிட்ட நிலையில் அவரது வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் பணியாளராகப் பணியாற்றும் 19வயது யுவதி ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். உயிரிழந்த யுவதியின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நானுஓயாவில் நடமாடும் சேவை





நுவரெலியா பிரதேச செயலகத்திற்கு உட்பட ஏழு கிராம சேவகர் பிரிவை சேர்ந்தவர்களை ஒன்றிணைத்து மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலை ஆரம்ப கல்வி இராஜாங்க அமைச்சர் பியால் நிசாந்த சில்வா ஏற்பாட்டில் நானுஓயா நாவலர் தமிழ் பாடசாலையில் நடமாடும் சேவை ஒன்று நேற்றைய தினம் நடைபெற்றது.

இதன் போது கூப்பன் வழங்காத முதியோர்களுக்கு கூப்பன் பதிவு செய்தல், இறப்பு, பிறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்கள் வழங்குதல், தேசிய அடையாள அட்டைக்கான புகைப்படம் எடுத்தல், பதிவு மேற்கொள்ளுதல் ஆகியவற்றுக்கான சேவை, பொலிஸ் முறைப்பாடுகள் உள்ளிட்டவை மேற்கொள்ளப்பட்டன.

இந் நடமாடும் சேவையில் கலந்து கொண்டவர்களுக்கு கொரோனா வைரஸ் பெருந்தொற்றுப் பரவல் பற்றிய தகவல்கள், புதுவிவரங்கள் மற்றும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. இவ் நிகழ்வில் நுவரெலியா மாவட்ட உதவி செயலாளர், பிரதேச செயலாளர் ஆகியோர் உட்பட அரச முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

## 5 வருடங்களுக்கு மேல் பணியாற்றிய 1034 பேருக்கு இடமாற்றம்

தம்புள்ள தினகரன் நிருபர்

மத்திய மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் அரச சேவையில் இணைந்து 05 வருடங்களுக்கு அதிக காலமாக ஒரே இடதத்தில் கடமையாற்றிய 1034 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுப்பதற்கு மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

492 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கும் 542 அபிவிருத்தி உத்தியோகத்தரகளுக்கும் இவ்வாறு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாகாண சபைகளுக்குரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் உள்ளிட்ட நிறுவனங்கள் பலவற்றில் நீண்ட காலமாக பணியாற்றி வந்த 734 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் 651 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு இடமாற்றங்களை பெற்றுக் கொடுத்ததுடன் இடமாற்றத்தை ஏற்றுக் கொள்ள முடியாமைக்கு ஏதேனும் அத்தியாவசிய காரணங்களிருப்பின் அத்தகையவர்கள் மேன் முறையீடு செய்வதற்கு அவகாசம் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு கடந்த பெப்ரவரி மாதம் அவர்களுடைய பெயர் பட்டியல் இணையத்தளத்தில் வெளியிட்டிருந்தது.

குறித்த அப்பெயர் பட்டியலில் 1385 பெயர்கள் உள்வாங்கப்பட்டிருந்த போதிலும் மேன் முறையீடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் இடமாற்றப் பெயர் பட்டியலில் உள்வாங்கப் பட்டிருந்தோரின் எண்ணிக்கை 1034ஆக மாற்றமடைந்தது.

கிடைக்கப்பெற்ற மேன் முறையீடுகள் கவனத்திற் கொள்ளப்பட்ட பின்னர் 252 முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் 111 அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டதாக அரசசேவைகள் ஆணைக்குழு இறுதியாக வெளியிட்டுள்ள இறுதி இடமாற்றப் பட்டியலில் குறிப்பிட்டுள்ளது.

அதன் பிரகாரம் மேல்முறையீட்டின் மூலம் இரத்துச் செய்யப்பட்ட இடமாற்றங்களின் எண்ணிக்கை 363 ஆகும்.

ஆரம்பத்தில் தெரிவிக்கப் பட்டிருந்த இடமாற்றப் பட்டியலின் பிரகாரம் மாகாண பிரதான நசெயலாளர் அலுவலகத்திலிருந்து 48 பேருக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களில் 24 பேர் மேன் முறையீட்டின் மூலம் தமது இடமாற்றங்களை இரத்துச் செய்து கொண்டுள்ளனர்.

கண்டி மாநகர சபையில் பணியாற்றிய 82 பேருக்கு ஆணைக்குழுவின் மூலம் வழங்கப் பட்ட இடமாற

### சார்க் நாடுகளின் புற்றுநோய் நிபுணர்களின்

# சங்க தலைவராக வைத்தியர் நடராஜா ஜெயக்குமார் தெரிவு



சார்க் நாடுகளின் புற்றுநோய் நிபுணர்களின் சங்கத்தின் தலைவராக மஹரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையின் புற்றுநோய் வைத்திய நிபுணர் நடராஜா ஜெயக்குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சார்க் நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி நேற்று (19) இணையவழி ஊடாக இடம்பெற்ற தலைவர் தெரிவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தற்போது மஹரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையில் வைத்திய நிபுணராக கடமையாற்றும் வைத்திய நிபுணர் ஜெயக்குமார் தெரிவு செய்யப்பட்டதுடன் செயலாளராக வைத்தியர் எஸ்.செந்தூரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தலைவராக தெரிவு செய்யப்பட்ட வைத்தியர் ஜெயக்குமார் யாழ்ப்பாணத்தில் போர் முடிவுற்று மீளத் திரும்பிய காலப்பகுதியில் தெல்லிப்பழையில் புற்றுநோய் பிரிவை ஏற்படுத்தி மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கியிருந்தார். அதுமட்டுமல்லாது வைத்தியத் துறையில் சிறந்து விளங்கியமை மிகக்குறைந்த வயதில் யாழ் மாநகர சபையால் வழங்கப்படும் யாழ் விருதையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கோடியக்கரை கடற்கரையில் கரை ஒதுங்கிய ஆளில்லா மர்ம படகு; சுங்கத் துறையினர் விசாரணை

(மன்னார் குறூப் நிருபர்)

நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த கோடியக்கரை மீன்பிடி துறை முகத்தில் இருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் காத்தான் ஓடை என்ற கடற்கரை பகுதியில் இலங்கையைச் சேர்ந்த கண்ணாடி இழை படகு ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை (20) காலை கரை ஒதுங்கியுள்ளது.

மீனவர்கள் வழங்கிய தகவல்களுக்கு அமைவாக கோடியக்கரை சுங்கத்துறை அதிகாரி கண்காணிப்பாளர் ஸ்டெல்லா மேரி உத்தரவின் பேரில் சுங்கத்துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று படகை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டுள்ளனர். குறித்த படகில் (OFRPA0851 KCH ) என்ற இலக்கம் காணப்படுகின்றது. குறித்த படகு மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வந்த படகா? அல்லது கடத்தல் தொழிலுக்கு பயன்படுத்தப்படும் படகா ? இப் படகில் யாரும் வந்தனரா என்பது குறித்தும் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் கியூ பிராஞ்ச் பொலிசார் மற்றும் கடலோர பாதுகாப்பு குழுமத்தினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை

(கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நிலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு)

### களஞ்சிய வளாகம் மற்றும் வீட்டை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்

### கேள்விக்கான அழைப்பு (IFB)

கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, நாவல வீதி, இல. 177 எனுமிடத்தில் அமைந்துள்ள கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் மாதாந்த வாடகை/ குத்தகை அடிப்படையில் கீழேயுள்ள களஞ்சியம் மற்றும் கட்டிட தேவைப்பாடுகளுக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**01. 50,000 சதுர அடி களஞ்சிய வளாகம்**
**02. 05 அறைகளுடான வீடு**
**03. 5000 சதுர அடி களஞ்சிய வளாகம்**

**அதற்கான அடிப்படை தேவைப்பாடுகள் கீழ்க்காணுமாறு அமையும்**

**01. 50,000 சதுர அடி களஞ்சிய வளாகத்திற்காக தேர்ந்தெடுக்கப்படும் தகவுத்திறன்.**

1. நீர்கொழும்பு, சரக்கு கந்த கடற்கரையில் இருந்து 10KM இற்குள் பமுனுகம, வத்தளை, ஜாஎல பிரதேசத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
2. 50,000 சதுர அடி தரைப் பிரதேசத்தில் இருத்தல் வேண்டும்.
3. களஞ்சியத்திற்குள் 20 அடி மற்றும் 40 அடி அளவிலான கொள்கலன்கள். Container Lifters மற்றும் Fork Lifters செயற்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
4. களஞ்சியம், பாதுகாப்பு கேட் மற்றும் மதிலால் சூழப்பட்டிருத்தல், பாதுகாப்பு கூடம் இருத்தல், களஞ்சியம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள வளாகம் முழுமையாக உள்ளடக்கப்படுமாறு CCTV கெமரா அமைப்பு இருத்தல் கட்டாயமானது.
5. களஞ்சியத்தின் உள்ளகம் போதுமான ஒளி கிடைக்குமாறு மற்றும் போதுமான காற்றோட்டம் கிடைக்குமாறு உருவாக்கப்பட்டிருத்ததல் வேண்டும்.
6. கட்டிடத்திற்கு ஒதுக்கப்பட்ட மீட்டருடன் மின் இணைப்பு இருப்பதுடன் அங்கு 5AMP மற்றும் 15AMP Plug Points இருத்தல் வேண்டும்.
7. கட்டிடத்திற்கு ஒதக்கப்பட்ட மீட்டருடன் நீர் இணைப்பு இருப்பதுடன் $1m^3$ இற்கு மேற்பட்ட கொள்ளளவு கொண்ட நீர் தாங்கி இருத்தல் வேண்டும்.
8. கொள்கலன்களுக்கு பிரவேசிப்பதற்கு போதுமான பிரவேச வழி வசதிகள் இருப்பதுடன் குறைந்தபட்சம் 20 அடி Container 5ஐ நிறுத்தி வைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
9. போதுமான துப்புரவேற்பாட்டு வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
10. காணி மற்றும் பிரவேச பாதை மழை நீரில் மூழ்காத இடமாக இருத்தல் வேண்டும்.
11. முறையான தீயணைப்பு உபகரண அமைப்பு பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
12. களஞ்சிய வளாகத்தின் உள்ளகம் குத்தகை பெறுநரின் தேவைப்பாட்டின் அடிப்படையில் புதுப்பிப்பதற்கு குத்தகை தருநர் இணங்குதல் வேண்டும்.

**02. வீட்டிற்கான தேர்ந்தெடுக்கும் தகவுத் திறன்கள்**

1. நீர்கொழும்பு, சரக்கு கந்த கடற்கரையிலிருந்து 10Km இற்குள் பமுனுகம வத்தளை. ஜாஎல பிரதேசத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
2. குறைந்தபட்சம் டபள் கட்டிலுடன் 5 அறைகள் இருத்தல் வேண்டும்.
3. போதுமான துப்புரவேற்பாட்டு வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. பாதுகாப்பு வாயிற்கதவு மற்றும் மதிலால் சூழப்பட்டிருத்தல் வேண்டும்.
5. கட்டிடத்துக்கென ஒதுக்கப்பட்ட மீட்டருடன் மின்சாரம் மற்றும் நீர் இணைப்புக்கள் இருத்தல் வேண்டும்.
6. குறைந்தபட்சம் 5 வாகனங்கள் நிறுத்தி வைக்கக்கூடிய வசதிகள் இருத்தல் வேண்டும்.
7. காணி மற்றும் நுழைவுப் பாதை மழைநீரில் மூழ்காது இருத்தல் வேண்டும்.

**03. 5000 சதுர அடி களஞ்சிய வளாகத்திற்காக தேர்ந்தெடுக்கும் தகவுத்திறன்**

1. கொழும்புத்துறைமுகம் மற்றும் திக்ஓவிட்ட துறைமுகம் அருகில் (10Km எல்லைக்குள்) அமைந்திருத்தல்
2. 5000 சதுர அடி தரைப் பிரதேசம் இருத்தல் வேண்டும்.
3. களஞ்சியத்திற்குள் 20 அடி/ 40 அடி அளவான கொள்கலன்களை செயற்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
4. களஞ்சியம் பாதுகாப்பு வாயிற்கதவும் மற்றும் மதிலால் சூழப்பட்டிருத்தல் வேண்டும்.
5. கட்டிடத்திற்கு ஒதுக்கப்பட்ட மீட்டருடன் மின்சாரம் மற்றும் நீர் இணைப்பு இருத்தல் வேண்டும்.
6. போதுமான துப்புரவேற்பாட்டு வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
7. களஞ்சியம் மற்றும் அதன் சுற்றுச்சூழல் முழுமையாக உள்ளடக்குமாறு CCTV கெமரா அமைப்பு இருத்தல் வேண்டும்.
8. கொள்கலன்களை அடைவதற்கு போதுமான பிரவேச பாதை வசதிகள் இருத்தல் வேண்டும்.
9. காணி மற்றும் பிரவேச பாதை மழை நீரில் மூழ்காத இடமாக இருத்தல் வேண்டும்.
10. முறையான தீயணைப்பு உபகரண அமைப்பு பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
11. பாதுகாப்பு கூடம் மற்றும் அலுவலகமொன்று இருத்தல் வேண்டும்.
12. களஞ்சியம் முழுமையாக உள்ளடக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

**பொதுவான விடயங்கள்**

01. மேற்கண்டவாறே களஞ்சிய வளாகம் மற்றும் வீடு வாடகைக்கு/ குத்தகைக்கு வழங்குவதற்கு ஆர்வம் காட்டுகின்றவர்கள் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது சகல விபரங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி வசதிகள் மற்றும் அதற்கு மேலதிகமாக காணப்படும் ஏனைய வசதிகள் பொன்றவை பற்றிய விபரங்களை விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் ஆவணங்களின் பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன், இவ் விலைமனுக்களின் மூலப்பரதி (original) மற்றும் - நகல் பிரதி (Duplicate) என வேறு இரு உறைகளில் இட்டு பின்னர் அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில இட்டு பொறியிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
02. கட்டிடம் வாடகைக்கு வழங்குதல் பற்றிய விலைமனுக்களை சமர்ப்பிக்க வேண்டியது உரிமையாளர் அல்லது அங்கீகாரம் பெற்ற நபர் மூலம் மாத்திரமே களஞ்சிய வளாகம் அல்லது வீட்டிற்காக வேறு வேறாக விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம்.
03. குறித்த உள்ளூராட்சி அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்ட கட்டிடத்தின் வரைபடம், அனுகூலச் சான்றிதழ், சொத்துக்களுடன் சம்பந்தப்பட்ட உறுதி அல்லது தேவையெனில் அட்டோர்ணி தத்துவபத்திரம், வளவின் வரைபடம் போன்றவற்றின் பிரதியொன்றை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. விலைமனுக்கள் உள்ளடக்கப்பட்ட விண்ணபத்தை சமர்ப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘மாதாந்த வாடகை/ குத்தகை அடிப்படையில் களஞ்சிய வளாகம் அல்லது வீட்டை வழங்குதல்’ என்று குறிப்பிடுதல் வேண்டும்.
05. இடைத்தரகர்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் விலைமனுக்கள் பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் இல்லையெனில் கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிடல் வேண்டும். உங்களது விலைமனுக்களை 2022.04.05ம் திகதி 14.00 மணிக்கு முன் குறித்த முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும் அத்துடன் அதன் பின்னர் கிடைக்கும் கேள்விகள் ஏற்கப்பட மாட்டாது.
06. விலைமனுக்கோருதல் முடிவடைந்தவுடன் கொழும்பு -05, நாராஹேன்பிட்ட, நாவல வீதி, இல. 177 எனுமிடத்தில் அமைந்துள்ள கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமையகத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்வி சமர்ப்பிப்போருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்க வாய்ப்பளிக்கப்படும்.
07. மேலதிக விபரங்களை தொ.பே.இல. 2554006 அல்லது 2554373 மூலம் நீடிப்பு 101 அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர் (கேள்விச் சபை),**
**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை**
**இல. 177, நாவல வீதி, நாராஹேன்பிட்ட**
**கொழும்பு-05.**

## பதவி வெற்றிடங்களிற்காக விண்ணப்பம் கோரல்

### தேசிய பொலிஸ் ஆணைக்குழு

**தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் கீழ்க்குறிப்பீடப்படும் பதவிக்காக தகைமையுள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

I **மாகாணப் பணிப்பாளர் பதவி (சப்ரகமுவ மாகாணம்)**
**பதவிகளின் எண்ணிக்கை 01**

- அரச சேவையில் நிறைவேற்றுச் சேவை வகுதியின் 1 தரத்தின்/ விஷேட தரத்தின் அல்லது நிகரான ஏதேனும் பதவியொன்றில் பணியாற்றி ஓய்வு பெற்ற அலுவலரொருவராக இருத்தல் வேண்டும்.
- சிங்கள மொழி தவிர்ந்த ஆங்கிலம்/தமிழ் மொழி தொடர்பான அறிவு மேலதிக தகைமை ஆகும்.
- விசாரணை நடவடிக்கைகள் தொடர்பான அனுபவம் விஷேட தகைமையாகும்.
- ஒப்பந்த அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு நியமனம் செய்யப்படுவர்.
- மாகாணத்தில் வசிக்கும் நபர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- அனைத்துக் கொடுப்பனவுகளுடன் மாதம் ரூபா 60,000/- இற்கான கொடுப்பனவு வழங்கப்படும்.
- விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித்தினத்தன்ற 67 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

02. இதற்கான விண்ணப்பதாரர்கள் தம் சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பமொன்றை 2022.04.30ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் தேசிய பொலிஸ் ஆணைக்குழு, இலக்கம் 09 கட்டிடம், BMICH வளாகம், கொழும்பு -07 எனற் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும்.

**செயலாளர்,**
**தேசிய பொலிஸ் ஆணைக்குழு,**
**இலக்கம் 09, கட்டிடம்,**
**BMICH வளாகம்,**
**கொழும்பு -07.**


சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

325

தொழில்துறை
பொது

கட்டுமானப் பணிக்கு கூலி வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. தொடர்பு கொள்வதற்கு: 0775497185, 0760095539, 0783307979.
020995

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.


## விலைமனுக்களுக்கான அழைப்பு

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு**

**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் - PROJECT ID: P 163305**
**கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம்**
**மண்முனை தெற்கு எருவில் பற்று பிரதேச சபை – களுதாவளை**

01. உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவை நோக்கி உலக வங்கியிடம் இருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு கடன் நிதி ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு ஒப்பந்த இல.:- LDSP/EP/BT/MS&EP/PS/PTI/2022, மண்முனை தெற்கு எருவில் பற்று பிரதேச சபை, களுவாஞ்சிக்குடியில் மீன் சந்தை ஒன்றின் நிர்மாணத்திற்கான கொடுப்பனவுகளுக்கு இந்தக் கடனில் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு களுவாஞ்சிக்குடியில் மீன் சந்தை ஒன்றை நிர்மாணிப்பதற்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து மட்டக்களப்பு மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச சபை சார்பில் உள்ளூர் நிர்வாக பெறுகைக்குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
03. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
04. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதியை பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தரம் மற்றும் சிறப்புத்தன்மையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
05. விலைமனு ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் தகைமை தேவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. விலைமனு ஆவணத்தின் (பிரிவு 5) அட்டவணையில் மேலதிக விபரங்கள் தரப்பட்டுள்ளன.
06. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தலைவர்/ செயலாளரிடம் இருந்து (தொ. இல.: 0652250075, தொலைநகல்: 0652059877, மின்னஞ்சல் - msep-ps@yahoo.com) மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு எந்த ஒரு வேலை நாட்களிலும் 9.00 மணி தொடக்கம் 16.00 மணி வரை கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
07. மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500.00 ரூபாவை செலுத்தி 2022.03.21 ஆம் திகதி தொடக்கம் 2022.04.04ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை களுதாவளை, மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச சபையின் தலைவர்/ செயலாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக இருத்தல் வேண்டும்.
08. விலைமனுக்களை 2022.04.05 ஆம் திகதி 15.00 மணி அல்லது அதற்கு முன்னர் களுதாவளை மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச சபை தலைவர்/ செயலாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனு ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
09. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதிக்கு பின் 2022.06.21 ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
10. அட்டவணையில் தரப்பட்டுள்ள விபரத்தின்படி விலைமனுக்களானது விலைமனுபிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
11. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு களுதாவளை, மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச சபையில் 2022.03.28 ஆம் திகதி 10.00 மணிக்கு இடம்பெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தமது சொந்த செலவில் இந்த விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்கலாம்.
12. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன் எந்த நேரத்திலும் இந்த பெறுகையை ரத்துச் செய்ய அல்லது மீளப்பெற தொழில் வழங்குநருக்கு உரிமை உள்ளது.

| வேலை மற்றும் விலைமனு இல. விபரம் | விலையிட முடியுமான விலைமனு தொகை (VAT தவிர்த்து) (மில். ரூபா) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம்/ நிபுணத்துவம் | தேவையான விலைமனுபிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை தொகை ரூபா | செல்லுபடிக் காலம் |
| களுவாஞ்சிக் குடியில் மீன் சந்தையின் நிர்மாணம் LDSP/EP/BT/ MS&EP /PS/ PTI/2022 | 6.61 | 120 நாட்காட்டி தினங்கள் | C7 மற்றும் அதற்கு மேல் கட்டிடம் | 67,000.00 | 2022.07.19 |

**தலைவர்**
**மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச சபை களுதாவளை**
**2022.03.21**




மாத்தறை மாவட்ட சாரணர் இயக்கத்தின் வருடாந்த மாநாடு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் பங்களிப்புடன் மாத்தறை மாவட்டத் தலைமையகத்தில் நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் மடிக்கணினி மற்றும் உபகரணங்களை வழங்கி வைப்பதையும் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன, விசேட ஆணையாளர் கபில குமார, மாவட்ட ஆணையாளர் இந்திக்க பிரசன்ன ஆகியோர் அருகில் இருப்பதையும்காணலாம்.



அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் களுத்துறை மாவட்ட கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் நேற்று (20) பாணந்துறை ஹேனமுல்லை செரண்டிப் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்ட உலமாக்கள் மத்தியில் பேருவளை கிளைத்தலைவர் அஷ்ஷெய்க் ரிழ்வான் (நளீமி) மற்றும் மாவட்ட கிளைத்தலைவர் அஷ்ஷெய்க் பர்ஹான் (நளீமி) ஆகியோர் உரையாற்றுவதை படங்களில் காணலாம்.

# எழுவில அலவிய்யாவில் மூன்று மாணவர்கள் சித்தி

**மொறட்டுவை மத்திய விசேட நிருபர்**

அண்மையில் வெளியான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் பாணந்துறை எழுவில அலவிய்யா முஸ்லிம் மகா வித்தியாலயதிலிருந்து பரீட்சைக்கு தோற்றியவர்களுள் மூன்று மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக பாடசாலையின் அதிபர் ஏ.ஜே.எம்.புர்கான் தெரிவித்தார். சித்தியடைந்த மாணவர்களான,

அமானி சிபாரிஸ் (174 புள்ளிகள்), அம்லஹ் மஹபூப் (161 புள்ளிகள்), உஸ்மான் ஜிப்ரி (153 புள்ளிகள்) ஆகியோர் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

# காஸ் தட்டுப்பாடு காரணமாக மண்ணெண்ணெய் உபயோகம் 850 மெ.தொன்னாக அதிகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் காஸ் தட்டுப்பாடு காரணமாக மண்ணெண்ணெய்ப் பாவனை வெகுவாக அதிகரித்துள்ளது.

சாதாரணமாக நாளாந்தம் 600 மெட்ரிக் தொன் மண்ணெண்ணெயே தேவைப்பட்டதுடன் அது தற்போது 850 மெட்ரிக் தொன்னாக அதிகரித்துள்ளது.

அதேவேளை கடந்த வியாழக்கிழமை நிதி வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ள காஸ் தொகையில் மூன்றில் இரண்டு மடங்கு காஸ் இதுவரை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் 70 ஆயிரம் காஸ் சிலிண்டர்களும், அதற்கு முந்திய தினம் 1,10,000 காஸ் சிலிண்டர்களும் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலிலிருந்து காஸை விரைவாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றால் சில தினங்களில் மீண்டும் காஸ் தட்டுப்பாடு ஏற்படலாம் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

### மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

## உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP) – P163305

## ஆர்வ வெளிப்பாட்டுக்கான கோரிக்கை (REOI)

### 2022 ஆம் ஆண்டுக்காக வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் திட்ட அமுலாக்கல் பிரிவுகளுக்கு (PIU) தனிப்பட்ட ஆலோசகர்களை பணியமர்த்தல்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு (SMPCLGA) உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் (EU) இருந்து நிதி உதவியுடன் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தை (LDSP) செயற்படுத்துகிறது. இந்தத் திட்டம் வடக்கு, கிழக்கு, வட மத்திய மற்றும் ஊவா மாகாண சபைகள் ஊடாக செயற்படுத்தப்படுகிறது.

செயல்திறன் கொண்ட மற்றும் பொறுப்புடைய உள்ளூர் சேவை வழங்கல் மற்றும் பொறுப்புக்கூறும் அரசுக்காக வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் வட மத்திய மாகாணங்களில் உள்ளூர் அரசுகளை வலுப்படுத்துவதற்கு (அதாவது: மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள்) LDSP நோக்கம் கொண்டுள்ளது. சேவை வழங்கலை மேம்படுத்தல் மற்றும் பிரசைகளுக்கு தமது பொறுப்புக்கூறலை நிறுவனமயப்படுத்துவதற்கு இந்த மாகாணங்களில் அனைத்து 134 உள்ளூர் அரச நிர்வாகங்களுக்கும் (LGA) அடிப்படை பரிமாற்றங்கள் (BT) மற்றும் செயல்திறன் பரிமாற்றங்களை (PT) LDSP வழங்குகிறது. தேவைகளை பூர்த்தி செய்வதற்கு குறுகிய கால அடிப்படையில் அலோசகர்களை பணியமர்த்துவதற்கு LDSP - உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் திட்ட இணைப்பு பிரிவு (PCU) உத்தேசித்துள்ளது. இந்த ஆலோசகர்கள் திட்ட அமுலாக்கல் பிரிவின் திட்டப் பணிப்பாளர் அல்லது பிரதித் திட்டப் பணிப்பாளர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் பணியாற்றுவார்கள். தனிப்பட்ட ஆலோசகர்கள் குறிப்பு விதிகளின்படி (TOR) முக்கியமான இலக்குகளை வழங்குவதற்கு நிறைவேற்றுவதற்கு பொறுப்பாக இருப்பார்.

**PCU வுக்கான நிதி முகாமைத்துவ ஆலோசகர் - LDSP/PCU/IC/FMC/1**
**(ஒரு பதவிநிலை)**

**ஒப்படையுடன் தொடர்புபட்ட குறிப்பிட்ட பணிகள்**

பொது சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கு உள்ளூர் அரச நிர்வாகங்களுக்குள் முடிவுகள் அடிப்படையிலான நிதியுதவிக்கு மனநிலையில் மாற்றம் தேவை. அதனால், ஊடாடுதல், ஆலோசனை மற்றும் பணியை கற்றல் செயற்பாட்டை பின்பற்றி ஏறுமான போக்கு ஒன்றில் செயல்திறன் பரிமாற்றங்களை அறிமுகம் செய்வதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது. திட்ட இணைப்பு பிரிவின் ஓர் அங்கமாக, அடைவுகளில் கடுமையான முடிவுகள் மற்றும்/ அல்லது துல்லியமற்ற அறிக்கைகளை உள்ளூர் அரச நிர்வாகங்கள் தவிர்த்து அச்சுறுத்தல்களை குறைப்பதற்கு ஆரம்ப PT சுற்றுகளின்போது உள்ளூர் அரச நிர்வாகங்களுக்கு நெருக்கமான ஆதரவை வழங்க வேண்டும். அதனால், உலக வங்கி மற்றும் ஆசிய அறக்கட்டளையுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பில், உள்ளூர் அரச நிர்வாகங்களின் திட்டங்கள், செயல்முறை, ஏற்பாடு மற்றும் BT மற்றும் PT இரு செயற்பாட்டின் முகாமைத்துவத்துடன் நெருக்கமாக பின்தொடர்வதற்கு ஆலோசகர் பொறுப்பாக இருப்பார். ஒப்படையின் நோக்கத்திற்கு ஏற்ப, ஆலோசகர் பின்வரும் பணிகளில் ஈடுபடுதல் வேண்டும்:

**பணி ஒன்று: *PCU* வின் சார்பில் *BT* மற்றும் *PT* செயற்பாடுகளுக்கு உதவுதல்**

**பணி இரண்டு: *PT* அறிமுக செயற்பாடு தொடர்பில் கொழும்பில் அமைச்சு, உலக வங்கி மற்றும் *EU* வுக்கு அறிவித்தல்**

**தனிப்பட்ட ஆலோசகர்களுக்கு இருக்க வேண்டியது:**

**அடிப்படை தகைமைகள் மற்றும் அனுபவங்கள் - கட்டாயம்**

a) நிதி முகாமைத்துவம், பொருளியல், பொது நிர்வாகம் அல்லது சம்பந்தப்பட்ட துறை உட்பட சம்பந்தப்பட்ட துறை ஒன்றில் ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம்.

b) சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றின் பட்டப் பின்படிப்பு பட்டம் அல்லது முழு அங்கத்துவம்

c) அரச நிதி முகாமைத்துவ திட்டங்களின் ஆய்வு, முறைப்படுத்தல் மற்றும் செயற்படுத்தலில் குறைந்தது 10 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான வேலை அனுபவம்.

**மேலதிக தகைமைகள் மற்றும் அனுபவங்கள்**

1. அரச நிதி முகாமைத்துவ திட்டங்களின் ஆய்வு, முறைப்படுத்தல் மற்றும் செயற்படுத்தலில் முகாமைத்துவ அனுபவம்
2. வெளிநாட்டு நிதித் திட்டங்களுக்காக கணக்கியல் துறையில் குறைந்தது 5 ஆண்டுகள் முகாமைத்துவ அனுபவம்
3. திட்ட/ செயற்திட்ட முகாமைத்துவ திறன்களை நிரூபித்தல்; வலுவான வாடிக்கையாளர் அவதானம் ஒன்றுடன் சிக்கலான வளர்ச்சி பிரச்சினைகளுக்கு சமநிலையான தீர்வுகளை கண்டறிவதற்கு புதுமையாக மற்றும் மூலோபாயமாக சிந்திக்கும் திறன் மற்றும் குழுவாக உள்ள திறன்கள் மற்றும் பிரச்சினையை தீர்த்தல், சிறந்த ஆளிடை திறன்
4. தரமான மற்றும்/ அல்லது தரமான ஆராய்ச்சி முறைகள் மற்றும் பகுப்பாய்வில் அனுபவம்
5. ஆங்கிலத்தில் சிறந்த முறையில் உரையாடல் மற்றும் எழுதும் தொடர்பாடல் திறன் அவசியமாகும்.
6. உ.வ. நிதி முறைகள், EU நிதியுடனான அனுபவம் மற்றும் நிரூபிக்கப்பட்ட அனுபவம் மற்றும் நன்கொடையாளர் நிதி மற்றும் அரச திட்டங்களை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் அனுகூலமாகும்

**1. தனிப்பட்ட ஆலோசகர்களை பணியமர்த்தல் - பொறியியலாளருடன் பெறுகை ஆலோசகர் (கிழக்கு மாகாணம்) – LDSP/IC/PC/EP/1**
**2. தனிப்பட்ட ஆலோசகர்களை பணியமர்த்தல் - பொறியியலாளருடன் பெறுகை ஆலோசகர் (வட மத்திய மாகாணம்) – LDSP/IC/PC/NCP/1**
**3. தனிப்பட்ட ஆலோசகர்களை பணியமர்த்தல் - பொறியியலாளருடன் பெறுகை ஆலோசகர் (வட மாகாணம்) – LDSP/IC/PC/NP/1**
**4. தனிப்பட்ட ஆலோசகர்களை பணியமர்த்தல் - பொறியியலாளருடன் பெறுகை ஆலோசகர் (ஊவா மாகாணம்) – LDSP/IC/PC/UP/1**

**(நான்கு பதவி நிலைகள்)**

**ஒப்படையுடன் தொடர்புபட்ட குறிப்பிட்ட பணிகள்**

a) பெறுகை திட்டத்திற்கு அமைய LGA மூலம் பெறுகை நடைமுறைகளை சரியான நேரத்திற்கு செயற்படுத்துவதை உறுதி செய்வதற்கு PIU வில் பிரதி திட்ட பணிப்பாளருடன் (மாகாணம்) ஒருங்கிணைப்பு.

b) பெறுகை கையேடு மற்றும் திட்ட செயற்பாட்டு கையேட்டில் (POM) பரிந்துரைக்கப்பட்டவற்றை பெறுகை நடைமுறையை பின்பற்றி பொருட்களை கையகப்படுத்தல், வேலைகள், சேவைகள் மற்றும் ஆலோசனைகளை உறுதிப்படுத்துவதற்கான விலைமனு ஆவணங்களை தயாரிப்பதில் LGA களுக்குள் நெருக்கமான உதவி மற்றும் பணியாளர்களை கண்காணித்தல்.

c) மாகாணங்கள் மற்றும் பயனாளிகளில் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப திணைக்களங்களில் இருந்து குறிப்பு விதிகள் அல்லது தொழில்நுட்ப விபரக்குறிப்புகளை சரியான நேரத்தில் பெறுவதை உறுதி செய்வதற்கு PIU வில் பிரதித் திட்ட பணிப்பாளருடன் நெருக்கமாக பணியாற்றல்.

d) அடிப்படை அமைப்புகள் மற்றும் செயல்திறன் அமைப்புகளின் கீழ் செயற்படுத்தப்படுவதற்கு உப திட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட வடிவமைப்பு, மதிப்பீடு, BOQ தயாரிப்பதற்கு PIUவுக்கு உதவுதல்.

e) பகுதி கொடுப்பனவுகள் மற்றும் கட்டணங்களை சரிபார்ப்பதன் கட்டணச்சீட்டை சமர்ப்பிப்பதற்கு உதவி மற்றும் அறிவுறுத்தல் மூலம் ஒப்பந்ததாரர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் செயல்முறையை துரிதப்படுத்துவதற்கு LGAகள் மற்றும் PIUவுக்கு வழிகாட்டல்.

f) உலக வங்கி மற்றும் LDSP வழிகாட்டல்கள் தொடர்பில் முக்கியத்துவம் அளித்து பெறுகை விவகாரங்களை கையாள்வதில் LGA பணியாளர்களின் பெறுகை முகாமைத்துவத்தில் திறனை கட்டியெழுப்புவதில் உதவுதல்.

g) மாதாந்த அடிப்படையில் பெறுகை முன்னேற்ற அறிக்கைகளை மாவட்ட மட்டத்தில் தயாரித்தல், ஏனைய விடயங்களை முன்னிலைப்படுத்தல், ஏனைய ஒப்பந்த, தடைகளை எதிர்கொள்ளல் மற்றும் PCU கவனத்திற்கு தேவையான வேறு ஏதேனும் பிரச்சினைகள் தொடர்பிலான செயற்பாட்டின் முன்னேற்றம்.

**தனிப்பட்ட ஆலோசகர்களிடம் இருக்க வேண்டியது:**

**அவசியமான அடிப்படை தகைமைகள் மற்றும் அனுபவம்**

a) ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பட்டயத்துடன் B.Sc சிவில் பொறியியலில் பட்டம்
b) நிர்மாணம் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் முதுமாணி பட்டம்/ பட்டப்பின் பட்டம்
c) பெறுகை அல்லது சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா/ சான்றிதழ்
d) வெளிநாட்டு நிதித் திட்டங்களில் சம்பந்தப்பட்ட துறையில் வேலை அனுபவத்தில் குறைந்தது 05 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**மேலதிக தகைமைகள் மற்றும் அனுபவங்கள்**

01. பெறுகை மற்றும் தொழில்நுட்பம் சம்பந்தமான பணி தொடர்பில் மாகாண/ உள்ளூர்/ சமூக மட்டத்தில் குறைந்தது 03 ஆண்டுகள் பணி அனுபவம்.
02. உலக வங்கி/ ADB/ JICA நிதி அளிக்கப்பட்ட திட்டங்களில் குறைந்தது 03 ஆண்டுகள் பணி அனுபவம் (உலக வங்கிக்கு இணக்கமான பெறுகை நடைமுறையை பயன்படுத்தியதில் அறிவு மற்றும் அனுபவம்)
03. இணையதளம் மற்றும் மின்னஞ்சல், MS Project மற்றும் primavera தொடர்பான அடிப்படை மென்பொருள் பயன்பாடுகளை பயன்படுத்துவதில் தேர்ச்சி மற்றும் அனுபவம் (Excel, Word, PowerPoint அல்லது தொடர்புபட்டவை).
04. ஆங்கிலத்தில் சரளம்

**PCU** வுக்காக பெறுகை சூழல் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆலோசகர் (**ESSMC**) – **LDSP/IC/PCU/ESSG/1**
**(ஒரு பதவிநிலை)**

**ஒப்படையுடன் தொடர்புபட்ட குறிப்பிட்ட பணிகள்**

a) திட்ட செயற்பாடுகளின் இணக்க பாதுகாப்பை (சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதுகாப்பு) உறுதி செய்வதற்காக ESSC பொறுப்பாக இருப்பார்.
b) ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்படும் அபாய தணிப்பு நடவடிக்கை/ செயற்பாடுகளை கண்காணித்தல்.
c) தேவை அடிப்படையில் சமூக அச்சுறுத்தல் தணிப்பு செயற்பாடுகள் தொடர்பில் ESMPகளின் மீளாய்வு மற்றும் இற்றைப்படுத்தல்.
d) திட்டம் தொடர்பில் சம்பந்தப்பட்ட நிர்வாகங்கள் மற்றும் பொதுமக்களை அறிவூட்டல் (பயன்பாட்டு மாற்றம் மற்றும் விரிசல் ஆய்வு முதலியவற்றின் தேவை) மற்றும் அதன் செயற்படுத்தலை கண்காணித்தல்;
e) குறைபாடுகள், முறைப்பாடுகளை பெறுதல்/ செயலில் உள்ள குறை தீர்க்கும் வழிமுறைகள் மற்றும் பின்தொடர்தல்களை நிறுவுதல்.
f) நிர்மாண செயற்பாடுகளின்போது பொதுமக்கள் மற்றும் வீதிப் பயனர்களுக்கு ஏற்படும் இடையூறை தவிர்த்தல் (சத்தம், தூசி, வடிகால் தடை, அணுகலை இழப்பது, நீர்த் தடங்கல் மற்றும் வெள்ளம், தேவையற்ற வாகன நெரிசல் தாமதங்கள், விபத்து அச்சுறுத்தல்கள் முதலியன)
**(உ) விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி எனப் பூரணப்படுத்தி தனித்தனி உறைகளில் சேர்த்து, மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி எனக் குறிப்பிட்டு முத்திரையிட்டு, அவற்றை மீண்டும் ஓருறையில் சேர்த்து அவ் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வர்த்தக கட்டிடத்தொகுதியின் / ஆதனத்தின் பெயர் மற்றும் கடை அறை இலக்கம் குறிப்பிடப்பட்டு மாநகர ஆணையாளர், மாநகர சபை, மாத்தளை என்ற முகவரிக்கு 2022.04.11 அன்று மு.ப.10.00 இற்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது மாநகரக் கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கபபட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் நேரடியாகச் சேர்த்தல் மேற்கொள்ளல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.**

**(ஊ) இவ்விலைமனுத் தொடர்பான மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் தொ.பே.இல.066-2232966 மூலம் மாநகர கணக்காளரை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.**

**(எ) சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் அல்லது அதன் பகுதி ஒன்றை ஏற்றுக்கொள்ளல் தொடர்பான முழுமையான உரிமை மாத்தளை மாநகர சபைக்கு உரித்தாகும்.**

**2022.03.16 ஆம் திகதி**
**மாத்தளை மாநகர சபை அலுவலகத்தில்**

U.N.**மாதுவகே**
**மாநகர ஆணையாளர், மாத்தளை**

# விலைமனு அழைத்தல்

## குப்பை உறைகளைக் கொள்வனவு செய்தல்

## கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை

## களுபோவில – தெஹிவளை

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக்குழுத் தலைவரினால் இவ்வைத்தியசாலையின் பல்வேறு பிரிவுகளிற்காக குப்பை உறைகளை கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. இதற்காக ஆர்வமுள்ள தரப்பினர் படிவக் கட்டணமாக ரூபா 2,000.00 இற்கான மீளளிக்கப்படாத கட்டணத்தை கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டுடன், தம் தேசிய ஆளடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2022.03.21 முதல் 2022.04.04 வரை வார வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.00 வரை இவ் வைத்தியசாலையின் நிதிப்பிரிவில் இதற்கான விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

02. விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் "கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில - தெஹிவளை - குப்பை உறைகளைக் கொள்வனவு செய்தல் - 2022.04.05" எனக்குறிப்பிட்டு 2022.04.05 அன்று மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, "தலைவர், பிராந்தியப் பெறுகைக்குழு, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில - தெஹிவளை" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புவதற்கு அல்லது கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப்பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம். 2022.04.05 அன்று மு.ப.10.00 இற்கு கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுத்திறக்கப்படும்.

3. விலைமனுக்கள் இரண்டு பிரதிகளாக மூலப்பிதி மற்றும் நகல்பிரதி எனக்குறிப்பிட்டு தனித்தனி உறைகளில் சேர்த்து அவ்விரு உறைகளையும் ஒருறையில் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.

4. விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அதே இடத்தில் அவை திறக்கப்படுவதுடன், விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் அளிக்க பெற்ற பிரதிநிதியொருவர் அவ்வேளையில் சமுகமளித்திருக்கலாம்.

5. விலைமனுப்படிவங்களை, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் இலவசமாக பரிசீலனை செய்து கொள்ளலாம்.

6. அரச ஒப்பந்தங்களை மற்றும் நிபந்தனைகளை அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு விலைமனுப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

7. குறித்த விலைமனுவை முழுமையாக அல்லது அதன் பகுதி ஒன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பிராந்திய பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

8. மேலதிக விபரங்களிற்காக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளரை அழைக்கவும் (தொ.பே - 0112763038)

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,**
**களுபோவில - தெஹிவளை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மேற்கத்திய மாகாண சபையின் மாகாண பொறியியல் நிறுவனம் 2022 ஆம் ஆண்டிற்காக சிவில் மற்றும் மின்சார வேலைகளுக்காக பராமரிப்பு ஒப்பந்தக்காரரொருவரை தெரிவு செய்தல்

1. 2022 ஆம் ஆண்டிற்காக (பராமரிப்பு, மேம்பாடுகள் மற்றும்/ அல்லது புதுப்பித்தல் வேலை) ஒப்பந்தக்காரரின் இணக்கத்துடன் பொறியியலுக்கான பிரதான செயலாளரினால் தீர்மானித்தவாறு மேற்கத்திய மாகாண சபை புதிய கட்டிடத்தொகுதி மற்றும் பழைய மாகாண சபை கட்டிடம் அல்லது வேறேதாவது கட்டிடத்திற்கு விகித விலைமனுக்கோரல் அடிப்படையில் பராமரிப்பு ஒப்பந்தக்காரரொருவரை தெரிவு செய்வதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மாகாண பொறியியல் நிறுவனத்தின் சார்பாக கட்டிட பணிப்பாளரின் பெறுகைக்குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

2. தகுதியுள்ள விலைமனுதாரர்கள் (தனிநபர், கம்பனி அல்லது கூட்டுமுயற்சி) பின்வரும் தகைமைத் தேவைப்படுத்தல்களுக்கு அமைந்தொழுகுவதுடன் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவுமிருத்தல் வேண்டும்.

   (அ) கட்டிட நிர்மாணத்தில் சி-6 மற்றும் சி-5 தரங்களை CIDA பதிவில் கொண்டிருத்தல் வேண்டும்.

   (ஆ) ஒப்பந்தக்காரர்கள் வியாபார பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக தகைமைக்காக விலைமனுதாரருக்கு தேவைப்படும் தகைமைகள் பின்வருமாறு:

   - கடந்த ஐந்து (5) வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையிலிருந்து பெறப்பட்ட வருடாந்த நிதிப்புரள்வின் சராசரி பெறுமதியானது ஆகக் குறைந்தது பதினைந்து (15) மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - ஏனைய ஒப்பந்தரீதியிலான பொறுப்புக்களுக்காக ஒதுக்கப்பட்டதன் பின்னர் அத்துடன் ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதாவது முற்பணக்கொடுப்பனவுகள் நீங்கலாக ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும்/ அல்லது கடன் வசதிகள் 2.5 மில்லியன் ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றவராகவும் பதிவுச் சான்றிதழானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 204 ஆம் இலக்கத்தின் 5 ஆம் மாடியின் மேற்கத்திய மாகாண சபையின் மாகாண பொறியியல் நிறுவன தலைமையக பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 011-2092526. தொலைநகல்: 011-2092505).

5. 2022 மார்ச் 21 ஆம் திகதியிலிருந்து 2022 ஏப்ரல் 4 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரியின் பெறுகை அலகிற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

6. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 77 நாட்கள் வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

7. 2022 ஏப்ரல் 5 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 204 ஆம் இலக்கத்திலுள்ள 5 ஆம் மாடியின் மேற்கத்திய மாகாணத்திற்கான பொறியியல் நிறுவன பெறுகை அலகின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், கட்டிடங்களுக்கான பணிப்பாளரின் பெறுகைக் குழு, பொறியியல் நிறுவனம் (மே.மா) 5 ஆம் மாடி, இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். (விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைமனுதாரர்களின் முன்னிலையில் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்).

8. ஏற்கனவே குறிப்பிட்டுள்ள விலைகள் ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து 12 மாத காலப்பகுதிக்கு சாத்தியமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் இதற்காக எவ்வித விலை அதிகரிப்பும் செலுத்தப்பட மாட்டாது.

9. விலைமனுதாரர்கள் ''அங்கீகரிக்கப்பட்ட கட்டிட அட்டவணை விலைகளை" (BSR-2022) சமர்ப்பிக்கும்படி (indicate a percentage in "Form of BID" ) அறிவுரை வழங்கப்படுவதுடன் இந்த அடிப்படையிலேயே பராமரிப்பு, மேம்படுத்தல்கள் மற்றும்/ அல்லது புதுப்பித்தல் வேலை ஆகியவற்றை தயாரிப்பதற்கான மதிப்பீடுகளாக அமையும்.

10. அனைத்து விலைமனுக்களும் மீளளிக்கப்படும் விலைமனு பிணையான இரண்டு இலட்சம் ரூபாவை (200,000 ரூபா) மாத்திரம் பிரதி பிரதான செயலாளர் (பொறியியல்) பொறியியல் நிறுவனம் (மே.மா), 5 ஆம் மாடி, இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மீளளிக்கப்படும் ரொக்கப் பணமாக ஒரு இலட்சம் ரூபாவை மாத்திரம் 100,000 ரூபாவை மாத்திரம் இணைக்கப்படல் வேண்டும். விலைமனுப்பிணையானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 105 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலில்லாத விலைமனுப்பிணையானது நிராகரிக்கப்படும்.

11. பத்தரமுல்ல, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 204 ஆம் இலக்கத்திலுள்ள 5 ஆம் மாடியின் பொறியியல் நிறுவனம் (மே.மா) பொறியியலுக்கான பிரதி பிரதான செயலாளரின் மாநாட்டு மண்டபத்தில் 2022 மார்ச் 28 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**பெறுகை பணிமனை,**
**மாகாண பொறியியல் நிறுவனம்,**
**5 ஆம் மாடி,**
**மேற்கத்திய மாகாண சபை,**
**இல. 204,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி:** 011-2092504
**தொலைநகல:** 011-2092505

## அற்றோணி பத்திரத்தை இரத்துச் செய்தல்

கிதலவ தபால் நாரங்கல்ல, சிறிகிரிய தோட்டம், இலக்கம் 55 எனும் இடத்தில் வசிக்கும் **ஹிக்களு ஆராச்சிலாகே நாலிகா உதயங்கனி பெரேரா** (தே.அ.இல. 796411740V). ஆகிய என்னால் பூஜாபிட்டிய தபால் படகள்ள, இலக்கம் 141/2 எனும் இடத்தில் வசிக்கும் **ராஜபக்ச கெதர பிரியந்த ராஜபக்ச** (தே.அ.இல. 791204267V) என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த, **ஆர்.ஜி.யு. வரகாதெனிய** பிரசித்த நொத்தாரிசு அவர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட இல. 107 மற்றும் 2009.12.25 திகதியிடப்பட்ட பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் மத்திய பகுதி காரியாலயத்தில் எழுத்து மூலமான உரிமமும் அற்றோணி புத்தகத்தின் 48வது பிரிவின் 18வது உரிமத்தின் 411 நாட்குறிப்பு புத்தக இலக்கத்தின் கீழ் 2010.02.19ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட அற்றோணி பத்திரத்தை முதன்மைப்படுத்தி செல்லுபடியற்றதாக ஆக்குகிறேன் என்பதை இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**ஹிக்களு ஆராச்சிலாகே நாலிகா உதயங்கனி பெரேரா**
வருடம் 2022 பெப்ரவரி மாதம் 03ஆம் நாள்

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

# திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 மார்ச் 23ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 56,500 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122F240 | LKA18222I233 | LKA36423C246 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 20,000 | 15,000 | 21,500 | 56,500 |

| | | |
|---|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : | 2022 மார்ச் 23 |
| தீர்ப்பனவுத் திகதி | : | 2022 மார்ச் 25 |
| வழங்கப்படும் திகதி | : | 2022 மார்ச் 25 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : | 2022 மார்ச் 23, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள் |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

✳ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம். இசட். எம். ஆசிம்**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

# கேள்வி கோரல் அழைப்பு

## வலயக் கல்விப் பணிமனை - பிலியந்தலை

## பிலியந்தலை வலயக் கல்விப் பணிமனை மற்றும் அதற்குச் சொந்தமான பாடசாலைகளுக்கு பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கேள்வி கோரல்

பிலியந்தலை வலயக் கல்விப் பணிமனையின் வலயக் கல்விப் பணிப்பாளரின் பெறுகைக்குழு அவ் வலய கல்விப் பணிமனைக்கு மற்றும் அதற்குச் சொந்தமான பாடசாலைகளுக்கு தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள செயற்றிட்டத்தின் கீழ் கீழ்க்காணும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மேல் மாகாணத்திற்குள் வியாபார விடயங்களில் ஈடுபடும் நிறுவனங்களில் இருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

- ✷ டெஸ்க்டொப் கணினி இயந்திரம்
- ✷ டொட் மெட்ரிக்ஸ் அச்சு இயந்திரம்
- ✷ மத்திய அளவிலான சிறுவர் மேசை
- ✷ மத்திய அளவிலான சிறுவர் கதிரை
- ✷ நிறைவேற்றுதர மேசை (அலுவலகம்)
- ✷ நிறைவேற்றுதர மேசை (அலுவலகம்)

**கேள்விப்பத்திரங்கள் விநியோகித்தல்**

கேள்வி மாதிரிப் பத்திரங்கள் 2022 மார்ச் 21 முதல் ஏப்ரல் 11 பி.ப. 3.00 வரை வார நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 வரை விநியோகிக்கப்படும். மேற்படி ஒரு பொருள் வகை சார்பாக மீளளிக்கப்படாத ரூபா 1000.00 கட்டணத்தை பிலியந்தலை வலயக் கல்விப் பணிமனையின் காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டை அலுவலகத்தில் சாதாரண நிர்வாகப் பிரிவிற்கு சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பிணையாக ஒரு வகைக்காக ரூ. 12000.00 தொகையை பிலியந்தலை வலயக் கல்விப் பணிமனையின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு அல்லது அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து/ நிதி நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விகள் திறக்கப்படும் தினம் முதல் 45 நாட்களுக்கு செல்லுபடியாகும் நிபந்தனையற்ற ரூ. 25,000 கேள்வி பிணைமுறியுடன் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

**விலைமனுக்களை திறத்தல்**

கேள்விகள் 'மூலப்பரதி' மற்றும் 'நகல்பிரதி' என இரு பிரதிகளுடன் தயாரிக்கப்பட்டு அவை வேறுவேறு உறைகளில் இடப்பட்டு மீண்டும் சகலதையும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பிலியந்தலை வலயக் கல்விப் பணிமனை மற்றும் அதற்குச் சொந்தமான பாடசாலைகளுக்கு பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு கேள்வி கோரல் - 2022' என்று குறிப்பிட்டு இடது பக்கம் கீழே கேள்விதாரரின் பெயர், முகவரியைக் குறப்பிட்டு 2022 ஏப்ரல் 11ம் திகதி பி.ப. 1.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு தலைவர், வலயக் கல்விப் பணிப்பாளரின் பெறுகைக் குழு, வலயக் கல்விப் பணிமனை, பிலியந்தலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டுவந்து இவ் அலுவலகத்தல் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்வி திறத்தல் அன்றே பி.ப. 2.00 இற்கு இடம் பெறுவதுடன் முறையாக சமர்ப்பித்து இல்லாத கேள்விப் பத்திரங்களை நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்கு உரியது. கேள்வி திறக்கப்படும் வேலையில் கேள்விதாருக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**வலயக் கல்விப் பணிப்பாளரின் பெறுகைக்குழு,**
**வலயக் கல்விப் பணிமனை,**
**பிலியந்தலை.**
2022.03.21
**தொலைபேசி: 011 2614200, 011 2613825**

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

Repeat Your Ad For Better Offers

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# மோட்டார் சைக்கிள் விற்பனைச் சந்தை கொட்டாவ

| வாகன இல. | தயாரிப்பு | வகை |
|---|---|---|
| NW-BFK-11XX | Rano | RKS 150 |
| NW-BEE-11XX | Mahindra | Gusto 110cc |
| WP-BEI-14XX | Bajaj | CT 100 |
| WP-BHT-15XX | Yamaha | FZ S |
| CP-BIO-18XX | YAMAHA | Ray ZR |
| WP-BFI-19XX | Demak | Transtar 125cc |
| UP-BGW-20XX | RANAMOTO | DREAM |
| WP-BHA-26XX | HONDA | DIO |
| WP-BID-26XX | YAMAHA | RAY ZR |
| NW-BID-27XX | BAJAJ | CT 100 |
| SG-BGL-27XX | HONDA | DIO |
| WP-BFE-28XX | DEMARK | CIVIC 110CC |
| WP-BGM-29XX | Honda | Dio |
| WP-BFD-29XX | DEMARK | TRANSTAR125 |
| WP-BHD-37XX | HONDA | NAVI |
| SG-BFL-40XX | MAHINDRA | Gusto |
| WP-BIO-52XX | HONDA | DIO |
| WP-BEZ-53XX | DEMARK | Tropica 125cc |
| CP-BIA-54XX | HONDA | DIO |
| WP-BEC-55XX | DEMARK | DTM 150 |
| WP-BGX-63XX | Honda | Dio |
| SP-BID-63XX | HONDA | GRAZIA |
| WP-BIA-67XX | HONDA | NAVI |
| WP-BBJ-67XX | BAJAJ | CT 100 |
| WP-BFX-67XX | BAJAJ | CT 100 |
| WP-BEX-71XX | DEMARK | Tropica 125cc |
| WP-BDO-78XX | DEAMARK | SAVAGE |
| WP-BHU-78XX | HONDA | DIO |
| SG-BEZ-79XX | DEMARK | DTM |
| WP-BGR-81XX | HONDA | GRAZIA |
| SG-BDU-85XX | DEMARK | CIVIC 110CC |
| WP-BIV-86XX | HONDA | DIO |
| WP-BIL-88XX | HONDA | DIO |
| WP-BGM-88XX | Rano Mot | Dream Mono |
| WP-BGO-89XX | HONDA | DIO |
| WP-BEX-91XX | Demak | DTM 150 |
| NW-BFU-91XX | TVS | XL SUPER |
| WP-BEP-93XX | DEMARK | Tropica 125cc |
| NW-BHA-96XX | HONDA | DIO |
| WP-BIO-97XX | YAMAHA | RAY |
| NW-BFA-00XX | HONDA | DIO |
| WP-BHW-01XX | HONDA | DIO |
| NW-BID-08XX | HONDA | NAVI |
| WP-BGI-09XX | HONDA | DIO |
| CP-BIM-11XX | HONDA | Hornet |
| WP-BFN-21XX | Demark | Sky Born 150 |
| UP-BFZ-75XX | TVS | Scooty Pept |
| UP-BFL-83XX | MAHINDRA | UZO 125 |
| UP-BEN-98XX | TVS | XL super |
| UP-BEI-02XX | Demark | Sky Born 150 |
| WP-BGP-00XX | HONDA | Dio |
| WP-BGF-05XX | HONDA | Dio |
| SP-BIP-08XX | YAMAHA | FZ S |
| SP-BCT-09XX | TVS | ZEZT |
| WP-BIP-20XX | YAMAHA | RAY-ZR |
| CP-BHC-28XX | HONDA | DIO |
| NW-BIR-38XX | SUZUKI | BURGMAN |
| SP-BJA-39XX | TVS | NTORQ |
| SP-BCE-44XX | BAJAJ | DISCOVER 100 |
| SP-BIF-52XX | HONDA | DIO |
| SP-BHC-53XX | TVS | SCOOTY PEPT |
| NW-BEU-56XX | HONDA | DIO |
| NC-BCJ-57XX | YAMAHA | FZ |
| WP-BCM-58XX | BAJAJ | PLATINA |
| SP-BHQ-59XX | HONDA | CB160X |
| WP-BHQ-72XX | HONDA | DIO |
| SG-BED-77XX | HONDA | DIO |
| SG-BHV-77XX | YAMAHA | RAY ZR |
| SP-BCI-77XX | TVS | SCOOTY streak |
| SP-BJA-82XX | TVS | APACHE RTR |
| WP-BIL-8415 | YAMAHA | RAY ZR |
| WP-BGR-85XX | TVS | WEGO |
| NW-BIZ-86XX | HONDA | CD 110 DREAM |
| WP-BGB-90XX | TVS | METRO |
| WP-BEP-90XX | HONDA | DIO |
| NW-BFO-97XX | HONDA | DIO |
| SP-BGU-97XX | TVS | WEGO |
| WP-BIR-98XX | HONDA | GRAZIA |
| SP-BGP-99XX | HONDA | DIO |
| CP-YR-76XX | BAJAJ | RE 205 |

இல.17/1, பின்ஹென ஜங்ஷன், ஹொரண வீதி, கொட்டாவ வாகன சாலையில் 2022 மார்ச் 23ம் திகதியில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை பார்வையிடலாம்.

முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் விற்பனை சந்தையிலிருந்து அகற்றுவதற்கு கம்பனிக்குரிமையுண்டு

**0719 919 986 / 0712 591 067**

நுழைவு கட்டணம் ரூ.1500/-

**ஏலத் திகதி : 24.03.2022**
**நேரம்: காலை 10.00 மணி**

*நிபந்தனைக்குட்பட்டது
சுகாதார வழிகாட்டுதல்களின்படி வருகை இருக்கும்

# மோட்டார் சைக்கிள் விற்பனைச் சந்தை அநுராதபுரம்

| வாகன இல. | தயாரிப்பு | வகை |
|---|---|---|
| NW-BHA-49XX | HONDA | DIO |
| NW-BHC-73XX | TVS | METRO |
| NW-BHC-48XX | TVS | xL SUPER HD |
| NW-BIK-94XX | BAJAJ | CT 100 |
| NC-BCN-34XX | BAJAJ | PLATINA |
| NC-BJA -15XX | HONDA | GRAZIA |
| NC-BIB-24XX | HONDA | NAVI |
| NP-BGJ-76XX | YAMAHA | FAZER |
| NW-BHD-98XX | HONDA | Avaitor |
| NW-BER-44XX | Ranomoto | Dream 125 |
| NC-BFS-77XX | Ranomoto | Pattaya 125 |
| NC-BED-14XX | Demark | DZM 200 |
| NW-BGZ-78XX | Hero | Maestro 110cc |
| NW-BIV-57XX | Yamaha | Ray ZR |
| UP-BFJ-44XX | Demark | Sky Born 150 |
| NW-BFB-64XX | HONDA | DIO |

யாழ்ப்பாண ஜங்ஷன், அநுராதபுரம் (யுனைட்டட் மோர்டசுக்கு முன்)
வாகன சாலையில் 2022 மார்ச் 24ம் திகதியில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை பார்வையிடலாம்.

முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் விற்பனை சந்தையிலிருந்து அகற்றுவதற்கு கம்பனிக்குரிமையுண்டு

**0712 125 664 / 0718 286 354**

நுழைவு கட்டணம் ரூ.1500/-

**ஏலத் திகதி : 25.03.2022**
**நேரம்: காலை 10.00 மணி**

*நிபந்தனைக்குட்பட்டது
சுகாதார வழிகாட்டுதல்களின்படி வருகை இருக்கும்

**Associated Motor Finance Company PLC**
தலைமை அலுவலகம்
இல. 146, ஹெவலொக் வீதி, திம்பிரிகஸ்யாய.
தொலைபேசி: 0115 553663

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

# காணி அமைச்சு

# இற்றைப்படுத்தப்பட்ட இலங்கையின் தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கை வரைவுக்கான பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுதல்

இலங்கையின் தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கையின் இற்றைப்படுத்தப்பட்ட வரைவு பொதுமக்களின் அவதானிப்புகளையும் கருத்துக்களையும் பெறுவதற்காக இதன் மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது. ஆர்வமுள்ள தனிநபர்கள் அல்லது நிறுவனங்களின் எழுத்துப்பூர்வ கருத்துக்களை பின்வரும் முகவரிக்கு தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் policyrevision @gmail.com என்ற முகவரிக்கு 12 ஏப்ரல் 2022க்கு முன்பாக அனுப்பலாம் மேலும், கொள்கை வரைவினை காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் இணையதளத்தில் இருந்தும் பதிவிறக்கம் செய்யலாம். (luppd.gov.lk)

**பணிப்பாளர் நாயகம்,**
**காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்,**
**இலக்கம் 170, கிருள வீதி, நாரஹென்பிட்டி, கொழும்பு-05.**

## இலங்கையின் தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கை

### (1) பின்னணி

இலங்கை, ஒரு வெப்பமண்டலத் தீவாக இருப்பதால், தனித்துவமான, பன்முகத்தன்மை கொண்ட, ஆனால் வரையறுக்கப்பட்ட நில வளத்தைக் கொண்டுள்ளது. மத்திய மலைப்பகுதிகளிலிருந்து உற்பத்தியாகும் பல ஆறுகள் ஆரைப்போக்கில் தீவு முழுவதும் பாய்கின்றன அத்துடன் அந்த மலைப்பகுதிகள், பிரதானமாக சனத்தொகைப் பெருக்கம் காரணமாக துரிதமாக நிலம் தரங்குறைதல் மற்றும் காடழிப்பு ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றன. கிராமப்புறங்களில் வாழும் மக்களில் பலர் வறியவர்கள், அவர்களின் வாழ்வாதாரம் முக்கியமாக விவசாயத்தைச் சார்ந்துள்ளதுடன் தொடர்ந்தும் விரிவடைந்து செல்கிறது. நிலைபேறற்ற காணிப் பயன்பாட்டு நடைமுறைகள் மண் அரிப்பு, நிலச்சரிவு, வன ஒதுக்குகள் குறைதல், சுற்றுச்சூழல் முரண்பாடுகள், தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் வாழ்விடங்கள் இழப்பு ஆகியவற்றைத் தூண்டியுள்ளன. நகர்ப்புறங்களின் திட்டமிடப்படாத அபிவிருத்தி நடவடிக்கைகள் நாட்டின் வரையறுக்கப்பட்ட நில வளத்தில் மேலும் அழுத்தத்தை உருவாக்குகின்றன. வருங்கால சந்ததியினருக்காக விஞ்ஞானரீதியான காணிப் பயன்பாட்டு திட்டமிடல் மூலம் சனத்தொகையின் தேவைகள், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை சமநிலைப்படுத்தலும் மண், நீர், உயிர்ப்பல்வகைமை போன்ற சுற்றுச்சூழல் வளங்களையும் தேசத்தின் பிற வளங்களையும் பாதுகாத்தலும் அவசரத் தேவையாகவுள்ளது.

இந்தப் பின்புலத்தின் அடிப்படையில், இலங்கையின் நில வளங்களை நிலைபேறான மற்றும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய கொள்கை வழிகாட்டுதலைக் கொண்டிருப்பதன் அவசியத்தை உணர்ந்த அதேவேளை காணி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு, சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டாளர்களுடன் இணைந்து காணிப் பயன்பாட்டுக் கொள்கை உருவாக்கும் செயல்முறையை முன்னெடுத்தது.

### (2) இற்றைப்படுத்தப்பட்ட தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கையின் தேவை

இலங்கையின் முதலாவது தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கை (NLUP) 2007 இல் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இருப்பினும், சமூக-பொருளாதார மற்றும் அரசியல் சூழலில் ஏற்பட்ட பெரிதளவு முன்னேற்றங்கள் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான இலக்குகள் (SDGs) போன்ற புதிய உலகளாவிய அர்ப்பணிப்புகள், பிற சர்வதேச மரபுகள் மற்றும் நடவடிக்கைகள் போன்றவற்றின் நோக்கெல்லை காரணமாக தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் பல சவால்கள் ஏற்பட்டன. எனவே, பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் பிற வெளிப்புறக் கடப்பாடுகளுக்கிணங்க தேசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தற்போதுள்ள கொள்கையைப் இற்றைப்படுத்துவது உகந்ததாகும்..

தேசத்தின் நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிக்கும் தற்போதைய மற்றும் எதிர்காலக் காணிப் பயன்பாடுகளிலிருந்து தேசத்தின் எதிர்பார்ப்புகளை தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கை ஏற்படுத்துகிறது. மேலும், ஒரு கூட்டு நடவடிக்கையாகத் திறம்படச் செயற்படுவதற்கும், வளங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் ஏனைய கொள்கைகளுடன் தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கை ஒருங்கிணைந்து செயற்படுதல் வேண்டும். ஒட்டுமொத்தமாக, அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வைக்கு ஆதரவாக நில வளப் பயன்பாட்டின் பயனுறுதியைத் தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, தேசியக் கொள்கைக் கட்டமைப்புடன் இணங்கும் மற்றைய அவசியமான மற்றும் வெளிப்படும் தேவைகளுடன் தற்போதைய தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கையை மறுபரிசீலனை செய்து இற்றைப்படுத்த வேண்டிய அவசியமொன்று காணப்படுகின்றது.

#### 2.1 வளவெல்லை

தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கையானது, பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் பிற வெளிப்புற கடப்பாடுகளுக்கிணங்க, பேணுகை, பாதுகாப்பு மற்றும் நிர்வாகம் உள்ளிட்ட தேசத்தின் ஒட்டுமொத்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுவதற்காக, நில வளத்தின் வினைத்திறன்மிக்க மற்றும் பயனுள்ள அபிவிருத்தி மற்றும் பயன்பாட்டை நிர்வகிக்கும் அரசாங்கக் கொள்கை மற்றும் மூலோபாயங்களை உள்ளடக்கியுள்ளது. எனவே, இத்தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கை, இலங்கையில் காணிப் பயன்பாடு தொடர்பான அனைத்து தீர்மானங்களுக்கும் அபிவிருத்திகளுக்கும் பிரயோகிக்கப்படக்கூடியதாகும்.

#### 2.2 செயன்முறை

தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கையின் உருவாக்கம், அரசாங்கத்தின் பகிரப்பட்ட நோக்குடன் ஒருங்கிணைக்கப்பட்ட ஆலோசனை மற்றும் கூட்டுச் செயன்முறை ஒன்றாகும். இச்செயன்முறையில், இலங்கையில் தற்போதுள்ள காணிப் பயன்பாடு மற்றும் தொடர்புடைய கொள்கைகள், காணிப் பயன்பாடுகளைக் கண்காணிக்கும் சம்பந்தப்பட்ட நிர்வாக அமைப்புகளின் பங்கேற்புடன் மீளாய்வு செய்யப்பட்டன. பகிரப்பட்ட ஆளுகையின் அதிகாரம் தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கைக்கு பரந்த செயற்பரப்பை அளிப்பதுடன் தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யவும் சிக்கலானதும் வெளிப்பட்டுவருவதுமான சவால்களை எதிர்கொள்ளவும் உதவுகிறது.

### (3) தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கைக்கான வழிகாட்டுதல் கோட்பாடுகள்

விஞ்ஞானரீதியான அறிவு, நாட்டிற்கேயுரித்தான சமூக-பொருளாதார, காலநிலை, மற்றும் சுற்றுச்சூழல் காரணிகள் பற்றிய கள மட்டத்திலான தகவல்கள், கொள்கைக் கோட்பாடுகளின் மையத்தில் உள்ளன. எனவே, அக்கோட்பாடுகளைப் பின்பற்றுவது மிகவும் முக்கியமானதுடன் பரவலான கொள்கை இணக்கத்தை அடையவும் உதவுகின்றது. காணிப் பயன்பாட்டு நடவடிக்கைகளின் அமுலாக்கத்தின்போது இந்த அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து விலகுதல், ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கையுடன் இணங்காமல் போவதுடன் குழப்பங்களுக்கும் நிலம் தரங்குறைதலுக்கும் வழிவகுக்கும்.

இற்றைப்படுத்தப்பட்ட தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கை பின்வரும் வழிகாட்டல் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது:

I. மக்கள் சார்பாக “நம்பிக்கைப் பொறுப்பாளராக” செயற்படும் அரசு, இலங்கையில் நிகழ்கால மற்றும் எதிர்கால சந்ததியினரால் நில வளங்கள் அணுகலையும் நிலைபேறான பயன்பாட்டையும் உறுதி செய்தல் வேண்டும்.

II. அனைத்து வகையான காணிப் பயன்பாடுகளுக்கும் காணிப் பயன்பாடு தொடர்பான தீர்மானங்களுக்கும் “நிலைபேறான தன்மையின் எண்ணக்கரு(க்கள்)” பிரதானமானது.

III. காணிப் பயன்பாட்டுத் தீர்மானங்கள் ஏனைய பங்கீடுபாட்டாளர்களின் தேவைகளைக் கருத்தில் கொள்வதுடன், விஞ்ஞானரீதியான அணுகுமுறையொன்றையும் பின்பற்றுகின்றன.

IV. காணிப் பயன்பாட்டு நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் சமூக நீதிக்கான மரியாதை ஆகியவை அத்தியாவசியமான கருத்துக்களாகும்.

V. காணிப் பயன்பாட்டு வலயப்படுத்தல் பௌதீக/புவியியல் மற்றும் சமூக–பொருளாதார பொருத்தப்பாடு மற்றும் மூலோபாய சுற்றுச்சூழல் மதிப்பீடு ஆகியவை பல்வேறு நோக்கங்களுக்காக காணியை ஒதுக்கீடு செய்வதற்கான அடிப்படையை வழங்குகின்றன.

VI. காணிப் பயன்பாடு தனிநபர் மற்றும் சமூக மரபுகளில் (மனித உரிமைகள், பால்நிலை அடிப்படையிலான விழுமியங்கள், மத, கலாசார மற்றும் சமூக நியமங்கள்) கவனம் செலுத்துகின்றது.

### (4) தொலைநோக்கு

ஒரு வளமான தேசத்திற்கான நிலைபேறான காணிப் பயன்பாடு மற்றும் முகாமைத்துவம்

### (5) இலக்கு

அதிக நில வள உற்பத்தித்திறன், உணவுப் பாதுகாப்பு, உயர்ந்த வாழ்க்கைத்தரம், குறைந்தபட்ச சுற்றுச்சூழல் மாசடைதல், அனர்த்தங்களிலிருந்து மீண்டெழுந்திறன் மற்றும் சுற்றுச்சூழல் ஒருமைப்பாடு ஆகியவற்றை அடைவதே கொள்கையின் இலக்காகும்.

### (6) குறிக்கோள்கள்

1. நில வளங்களின் நிலைபேறான தன்மையை அடைவதற்கு விஞ்ஞானம் மற்றும் சான்றுகளின் அடிப்படையில் பயனுறுதிமிக்கதும் ஒப்புரவானதுமான காணிப் பயன்பாட்டிற்கான தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் முகாமைத்துவ நடைமுறைகளை வசதிசெய்தல் மற்றும் உணவு பாதுகாப்பு, சமூக-பொருளாதார மேம்பாடு, தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் நல்வாழ்வு, காலநிலை மாற்றத்தினைத் தாங்கும்தன்மை, உலகளாவிய சுற்றுச்சூழல் நன்மைகள் மற்றும் கலாசாரங்கள் மற்றும் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட சூழற்தொகுதிச் சேவைகளை வசதிசெய்தல்.
2. காணிப் பயன்பாடு தொடர்பான உலகளாவிய சமவாயங்களுக்கான தேசிய உறுதிப்பாடுகளிலும் அத்துடன் உள்ளூர் மத்தியஸ்தம் மற்றும் பேச்சுவார்த்தைகளிலும் நில வள உற்பத்தியை அதிகரிக்கவும், நிலம் தரங்குறைதலைக் குறைக்கவும் தேவைப்படுத்தப்படும் எண்ணக்கருக்கள் மற்றும் உத்திகளை அறிமுகப்படுத்தல்.
3. அறிவு, தரவுத்தளங்கள், நிறுவன ஆற்றல்கள் மற்றும் திறன்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புகள் மற்றும் கூட்டாண்மைகள் ஆகியவற்றை ஏற்படுத்தல் மற்றும் வெற்றிகரமான கொள்கை அமுலாக்கம் மற்றும் அதன் விளைவான செயற்திட்டங்களுக்காக மூலோபாயங்களை வழங்குதல்.

### (7) தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கை - கருப்பொருள்கள் மற்றும் கொள்கைக் கூற்றுகள்

இந்தக் கொள்கைச் சட்டகத்தில் பதினொரு(11) கருப்பொருள்களுக்குள் பதினேழு(17) கொள்கைக் கூற்றுகள் உள்ளடங்குகின்றன. .

**கருப்பொருள்கள்**

1. காணிப் பயன்பாட்டு நிர்வாகம் மற்றும் காணிப் பயன்பாட்டு முகாமைத்துவம்.
2. மக்கள் குடியேற்றம், உட்கட்டமைப்பு மற்றும் நகரமயமாக்கலுக்கான காணிகள்
3. விவசாயத்திற்கான காணிகள்
4. கைத்தொழிலுக்கான காணிகள்
5. இயற்கை, கலாசார மற்றும் வரலாற்று பாரம்பரியத்துடன் தொடர்புடைய காணிகள்
6. சுற்றுச்சூழல் உணர்திறனுள்ள பகுதிகள் மற்றும் சூழற்தொகுதிகளின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம்
7. நீர் வளங்களை மேம்படுத்துவதற்கான காணி முகாமைத்துவம்.
8. இயற்கை அனர்த்தங்கள் மற்றும் ஆபத்துகள் ஏற்படக்கூடிய காணிகள்
9. நிறுவனத்திறன், நம்பகத்தன்மை மற்றும் ஒருங்கிணைப்பை ஊக்குவித்தல்
10. நில வளத் தகவல்கள்
11. காணிப் பயன்பாட்டில் சமூகம் மற்றும் சிவில் சமூகத்தின் பங்களிப்பு

**கொள்கைக் கூற்றுகள்**

**1. காணிப் பயன்பாட்டு நிர்வாகம் மற்றும் காணிப் பயன்பாட்டு முகாமைத்துவம்.**

முறையற்ற காணிப் பயன்பாடு, காணிகளைத் துண்டாக்குதல், காடழிப்பு, காணி ஆக்கிரமிப்பு, நீடித்துநிலைத்திராத மண் முகாமைத்துவ நடவடிக்கைகள் போன்றவற்றால் எழும் சவால்கள், நிலம் தரங்குறைதலை அதிகரித்து, நீண்டகால மீளமுடியாத விளைவுகளை ஏற்படுத்துகின்றன. எனவே, விஞ்ஞானரீதியான காணிப் பயன்பாட்டுத் திட்டமிடலைக் கருத்திற்கொண்டு நாட்டின் காணிப் பயன்பாட்டு நிர்வாகம் மற்றும் காணிப் பயன்பாட்டு முகாமைத்துவத் தீர்மானக் கட்டமைப்பை வலுப்படுத்துவது முக்கியமாகும்.

**கொள்கைக் கூற்று:**

1.1 நிறுவன மற்றும் ஒழுங்குபடுத்தும் கட்டமைப்பை செயற்படுத்துவதன் மூலம் சரியான மற்றும் உகந்த காணிப் பயன்பாடு, வினைத்திறன்மிக்க காணிப் பரிமாற்றம் மற்றும் விவேகமான காணி முகாமைத்துவம் ஆகியவற்றை உறுதிப்படுத்தல்

**2. மக்கள் குடியேற்றம், உட்கட்டமைப்பு மற்றும் நகரமயமாக்கலுக்கான காணிகள்**

குடியேற்ற விரிவாக்கம் மற்றும் மக்கள் தொகை அதிகரிப்பு, காரணமாக காணிகள் மீதான அழுத்தம் தொடர்ந்து அதிகரித்து வருவதால், வரையறுக்கப்பட்ட நில வளத்தைப் பாதுகாப்பதற்கான பொருத்தமான மூலோபாயங்கள் மேம்படுத்தப்பட வேண்டும். மனிதக் குடியேற்றங்கள், உட்கட்டமைப்பு மற்றும் நகரமயமாக்கல் ஆகியவற்றின் திட்டமிடல் தொடர்பான காணிப் பயன்பாட்டு வலயக் கோட்பாடுகளை கடைப்பிடித்தலானது, காணிப் பயன்பாட்டின் வினைத்திறன், மதிப்புக் கூட்டல் மற்றும் அதிலிருந்து உருவாக்கப்படும் சேவைகளை நிலையாக வழங்குதல் ஆகியவற்றை வசதிசெய்கின்றது.

**கொள்கைக் கூற்று:**

2.1 நகரங்கள் (பெருநகரங்கள்), புறநகர்ப் பகுதிகள் மற்றும் நாட்டின் பிற பகுதிகளின் திட்டமிட்ட மற்றும் முறையான அபிவிருத்தியை வலய ஒழுங்குபடுத்தல் மற்றும் முறைப்படுத்தல் மூலம் உறுதி செய்தல், இது உகந்த இடைவிடாத சேவை வழங்கலுக்கும் வளப் பயன்பாட்டிற்கும் வழிவகுக்கும்.

**3. விவசாயத்திற்கான காணிகள்**

உணவுப் பாதுகாப்பையும், நாட்டின் ஒட்டுமொத்த சமூக-பொருளாதார அபிவிருத்தியையும் உறுதி செய்வதற்கு நிலைபேறான விவசாயக் காணிப் பயன்பாட்டு அமைப்பொன்று முக்கியமானது. மேலும், தற்போதுள்ள விவசாயக் காணி பயன்பாட்டில் வினைத்திறனற்ற முகாமைத்துவம் மற்றும் குறைவான பயன்படுத்தல் ஆகியவை விவசாயத்தைத் தவிர மற்றைய காணிப் பயன்பாடுகளுக்கான சாத்தியத்தையும் வெளியையும் உருவாக்குகின்றன.

**கொள்கைக் கூற்று:**

3.1 காணிகளை நியாயமான முறையில் ஒதுக்கீடு செய்வதன் மூலம் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கு விவசாயத்தில் நிலைபேறான காணி முகாமைத்துவத்தை உறுதி செய்யும் அதேவேளை, காணி துண்டாடப்படுதல், நிலம் தரங்குறைதல் மற்றும் முதன்மையான விவசாயக் காணிகளை பிற பயன்பாடுகளுக்கு மாற்றுதல் ஆகியவற்றைக் குறைத்தல்.

**4. கைத்தொழிலுக்கான காணிகள்**

கைத்தொழில் உற்பத்தி மற்றும் சேவைகளுக்கு காணிகளை ஒதுக்கீடு செய்யும்போது, மாசடைதல், வளங்களை தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் தளத்தில்/தளத்திற்கு வெளியே எதிர்மறைத் தாக்கங்களைக் குறைப்பதற்காக, சுற்றுச்சூழல் பொருத்தம், உட்கட்டமைப்பு மற்றும் வலுசக்தி உள்ளிட்ட சமூக-பொருளாதார மற்றும் பௌதீக காரணிகளை கருத்திற்கொள்ள வேண்டும்.

**கொள்கைக் கூற்று:**

4.1 சமச்சீர் பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட தயாரிப்புகள் மற்றும் சேவைகளைத் தோற்றுவிப்பதற்கு காணிப் பயன்பாட்டு வலயம் மற்றும் பொருத்தத்தின் அடிப்படையிலான காணிப் பயன்பாட்டு வசதி ஆகியவற்றைப் பயன்படுத்தி முறையான பாதுகாப்புகளுடன் தொழில்நுட்ப ரீதியாக வினைத்திறன்மிக்க மற்றும் சூழல்-நேய விருப்பத்தேர்வுகளை ஊக்குவித்தல்

**5. இயற்கை, கலாசார மற்றும் வரலாற்று பாரம்பரியத்துடன் தொடர்புடைய காணிகள்**

எதிர்கால சந்ததியினருக்கும் உலகிற்கும் வழங்குவதற்காக, இலங்கையின் இயற்கை, வரலாற்று மற்றும் கலாசார பாரம்பரியத்தை பாதுகாத்தல் மற்றும் பேணுதல் இன்றியமையாததாகும். எனவே, காணிப் பயன்பாட்டுத் திட்டங்கள் மற்றும் முறைகளில் தொடர்புடைய தரைத்தோற்றவமைப்பு மற்றும் இடஞ்சார்ந்த பண்புகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

**கொள்கைக் கூற்று:**

5.1 பல்வேறு தரைத்தோற்றவமைப்புகளில் நாட்டின் உணர்திறன் வாய்ந்த கலாசார மற்றும் இயற்கைப் பாரம்பரிய இடங்களைப் பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும் முகாமைத்துவத்திற்கும் பொருத்தமான வழிமுறைகளை உருவாக்கி மேலும் வலுப்படுத்துதல்.

**6. சுற்றுச்சூழல்-உணர்திறனுள்ள பகுதிகள் மற்றும் சூழற்தொகுதிகளின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம்**

இலங்கையில் பல அகணிய உயிரிகள் மற்றும் சுற்றுச்சூழல் உணர்திறனுள்ள சூழற்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. உயிர்ப்பல்வகைமையை பாதுகாத்தல் மற்றும் சூழற்தொகுதிகளின் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்துதல் ஆகியவை இந்த வளங்களிலிருந்து பொருளாதார நன்மைகளை வளம்பெறக்கூடியதாக பிரித்தெடுப்பதைப்போலவே முக்கியமானதாகும். எனவே, இயற்கை வளங்களில் தங்கியுள்ள சமூகங்களுக்கு பயனளிக்கும் வழிமுறைகளை வசதிசெய்யும் அதேவேளை, மக்களின் சமூகப் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சூழற்தொகுதிகளின் நல்வாழ்வு இரண்டும் உறுதி செய்யப்படுகின்றன.

**கொள்கைக் கூற்றுகள்:**

6.1 உயிர்ப்பல்வகைமை நிறைந்த மற்றும்/அல்லது சுற்றுச்சூழல் உணர்திறன் பகுதிகளில் விரும்பத்தகாத அணுகல் மற்றும் பயன்பாடுகளைத் தடுப்பதற்கான வழிமுறைகளை வலுப்படுத்துதல்.

6.2 நிலைபேறான வளப் பயன்பாட்டுத் திட்டங்கள் மூலம் பொருளாதாரரீதியாகப் பிரதானமான வளங்களின் விஞ்ஞானரீதியான அகழ்வாய்வு, பேணுகை மற்றும் ஒழுங்குபடுத்தலை வசதிசெய்தல்.

**7. நீர் வளங்களை மேம்படுத்துவதற்கான காணி முகாமைத்துவம்**

காணிப் பயன்பாடு நீர் வளங்களின் பல அம்சங்களில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எனவே, நீரின் தரம், அளவு மற்றும் கிடைக்கின்ற நேரம் மற்றும் இடைவெளி ஆகியவற்றின் அடிப்படையில் நீர் வளங்களின் நிலைபேறான தன்மையைப் பாதுகாக்க காணிப் பயன்பாடு நிர்வகிக்கப்படல் வேண்டும். ஆகவே, நீர்வளங்களின் வாழ்வாதாரம் சம்பந்தமாக நில வளங்களை முறையற்ற வகையில் பயன்படுத்துவதைத் தடுத்தலானது மாசடைதல், எதிர்கால வறட்சி அல்லது நீர் பற்றாக்குறையைத் தவிர்த்து, தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் உயிர்வாழ்வு, மேம்பட்ட வாழ்க்கைத் தரம் மற்றும் நில வளத்தின் வினைத்திறன் மற்றும் நிலைபேறான தன்மை ஆகியவற்றை உறுதி செய்யும்,

**கொள்கைக் கூற்றுகள்:**

7.1 உள்நாட்டிலும் கடலோரத்திலும் மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் வளங்களைத் தக்கவைப்பதற்காக இடஒதுக்கீடுகள், நீரேந்து பிரதேசங்கள் மற்றும் தொடர்புடைய காணிகளின் பயன்பாட்டை நிர்வகிக்கும், ஒழுங்குபடுத்தும் பொறிமுறையை உறுதி செய்தல்.

7.2 அனைத்து காணிப் பயன்பாடுகளும் காணிப் பயன்பாட்டுத் தீர்மானங்களும், நீரின் தரம் மற்றும் அளவு உள்ளிட்ட நீர் வளங்களின் இயலுமை மற்றும் தக்கவைத்தல் மற்றும் முக்கியமான நீரேந்து பிரதேசங்கள், நீரோடைகள் மற்றும் மேற்பரப்பு நீர் சேமிப்புக் கரைகள், ஈரநிலங்கள் மற்றும் பிற சுற்றுச்சூழல் உணர்திறனுள்ள பகுதிகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்தல்.

**8. இயற்கை அனர்த்தங்கள் மற்றும் ஆபத்துகள் ஏற்படக்கூடிய காணிகள்**

அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய பகுதிகளில் ஒழுங்கற்ற காணிப் பயன்பாடுகள் அனர்த்த அபாயத்தை அதிகரித்து, காலநிலை மாற்றத்தை தாங்கும் தன்மையைக் குறைக்கின்றன. எனவே, அனர்த்த அபாயம் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவை காணிப் பயன்பாட்டு முகாமைத்துவத்தில் முக்கியமாக இருக்க வேண்டும்.

**கொள்கைக் கூற்றுகள்:**

8.1 அனர்த்த அபாயத்தைக் குறைப்பது தொடர்பான காணிப் பயன்பாட்டு திட்டமிடல் தீர்மானங்களில் காலநிலைமாற்ற தாங்கும்தன்மையை முக்கியப்படுத்தல்.

8.2 அனர்த்தங்களின் சமூகத் தாக்கங்களை முகாமை செய்யும்போது பொருத்தமான காணிகளின் மறு ஒதுக்கீடு மற்றும் மீள்குடியேற்ற வழிமுறைகளை உறுதி செய்தல்.

**9. நிறுவனத்திறன், இயலுமை மற்றும் ஒருங்கிணைப்பை ஊக்குவித்தல்**

ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி வாய்ப்புகள் இல்லாமை நில வள முகாமைத்துவ முகவர்கள் மற்றும் அந்தந்தப் பணியாளர்களின் உகந்த செயற்திறன் மற்றும் வினைத்திறனுக்கு தடையாக உள்ளது. காணி நிர்வாகத்தில் உள்ளூர் மற்றும் உலகளாவிய நிபுணத்துவ நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மை, அத்துடன் புதுப்பித்த தொழில்நுட்பம் மற்றும் போதுமான வள ஒதுக்கீடு ஆகியவை இந்த சவால்களை சமாளிப்பதற்கு அவசியமாகும்.

**கொள்கைக் கூற்றுகள்:**

9.1 தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய காணிப் பயன்பாட்டு முகாமையாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தொழில்நுட்ப திறன், புரிதல் மற்றும் தொழில்நுட்ப தகவமைத்தல் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களுக்காக தேசிய மற்றும் சர்வதேச கூட்டாண்மைகள் நிறுவப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தல்.

9.2 புதுப்பிக்கப்பட்ட தகவல் பரிமாற்றம் உட்பட தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களில் காணிப் பயன்பாட்டு முகாமைத்துவத் திட்டங்கள் மற்றும் தொடர்புடைய செயல்பாடுகளை முக்கியப்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்குமான நிறுவன ஒருங்கிணைப்பு வழிமுறைகளை வலுப்படுத்துதல்.

9.3 காணிப் பயன்பாட்டு முகாமைத்துவத்தில் ஆராய்ச்சி, புத்தாக்க அடிப்படையிலான ஆலோசனைகள் மற்றும் பயிற்சி வாய்ப்புகளை ஊக்குவித்தல்.

**10. நில வளத் தகவல்கள்**

இலங்கையில் நில வளங்கள் மற்றும் காணிப் பயன்பாடு/நிலப்போர்வை பற்றிய தரவுகளும் தகவல்களும் முழுமையற்ற, பரவலான, வெளிப்படைத்தன்மையற்ற, பகிரப்படாத தரவுகளின் சூழமைவிற்கு அப்பால் இற்றைப்படுத்தப்பட்ட மற்றும் தரப்படுத்தப்பட்ட தரவு/தகவல் மாதிரிகள் மற்றும் அமைப்புகளை நோக்கிச் செல்ல வேண்டும்.

**கொள்கைக் கூற்று:**

10.1 நில வள முகாமைத்துவத்திற்கு உதவுவதற்கு நாட்டில் உள்ள அனைத்துக் காணிகளையும் உள்ளடக்கிய ஒரு பரவலாக்கப்பட்ட தரவுத்தள பொறிமுறையில், சரியான நேரத்தில் இற்றைப்படுத்தல்களுடன் நில வளங்களுக்கான தேசிய அளவிலான இடஞ்சார்ந்த/புவியியல் தரவு முறைமையை உருவாக்கி செயற்படுத்தல்.

**11. காணிப் பயன்பாட்டில் சமூகம் மற்றும் சிவில் சமூகத்தின் பங்களிப்பு**

உள்ளூர்மயமாக்கப்பட்ட மற்றும் நுண் மட்டத்தில் காணிப் பயன்பாட்டில் தீர்மானம் மேற்கொள்வதில் சமூகமும் சிவில் சமூகமும் முதன்மைப் பங்கீடுபாட்டாளர்களாக இருக்க வேண்டும். பொருத்தமான சமூகப் பங்கேற்பு நில வளங்களின் நிலைபேறான தன்மையையும் சமூகத்தை மையமாகக் கொண்ட பாரம்பரியத்தையும் உறுதி செய்யும்.

**கொள்கைக் கூற்றுகள்:**

11.1 நிலைபேறானதொரு தகவல் இணை உருவாக்கம் மற்றும் பகிர்வு, விழிப்புணர்வு கட்டியெழுப்புதல் மற்றும் கலந்தாலோசனை மூலம் காணிப் பயன்பாட்டுத் தீர்மானம் மேற்கொள்வதில் சமூகத்தின் பங்களிப்பை வசதிசெய்தல் மற்றும் மேம்படுத்துதல்.

11.2 பொருத்தமான வழிமுறைகள் மூலம் காணிப் பயன்பாட்டு முகாமைத்துவத் திட்டங்கள் மற்றும் சமூகத்தின் மீதான தீர்மானங்களில் எழுகின்ற குறைகளை நிவர்த்தி செய்தல் மற்றும் இணக்கத்தை உறுதிசெய்தல்.

### (8) தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்

பொதுவாக, காணிப் பயன்பாடு மற்றும் காணி முகாமைத்துவத்தின் விடயப்பரப்பு பரந்த மற்றும் பல துறைகளை உள்ளடக்கியது. எனவே தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு சிக்கலான ஒருங்கிணைப்பு பொறிமுறை தேவைப்படுகிறது, இதில் காணி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு, ஏனைய நிரல் அமைச்சுகள் மற்றும் சம்பந்தப்பட்ட முகவர்களை ஈடுபடுத்தும் அதேவேளை தலைமைத்துவத்தை வகிக்கிறது. தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கையில் வழங்கப்பட்டுள்ள கொள்கைகளின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பொறுப்புகளை வழங்குவதன் மூலம் மூலோபாயங்கள் மற்றும் செயற்பாடுகள் தயாரிக்கப்படும். காணிப் பயன்பாட்டுக் கொள்கை வழிகாட்டலின் அடிப்படையில், கொள்கை இலக்கு மற்றும் குறிக்கோள்களை அடைவதற்காக, காணி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினால், காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்திற்கு (LUPPD) வழிகாட்டுதல் வழங்கப்படும். மேலும், தேசியக் காணிப் பயன்பாட்டுக் கொள்கையை செயற்படுத்துவதற்கு, ஏனைய அமைச்சுக்கள், தேசிய மற்றும் உப தேசிய மட்ட நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை, அரச சார்பற்ற நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள், சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைத்து பங்கீடுபாட்டாளர்களையும், அவர்களின் உதவி தேவைப்படும்போது ஒருங்கிணைப்பதற்கு காணி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer
adz it's what you want
Auto Focus

THE ONLY PLACE
TO BUY YOUR
DREAM CAR!
Sunday Observer
adz it's what you want


- Auto Focus
adz Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail
adzsuo@gmail.com

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 21ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.